# எந்தன் உயிரல்லவோ கண்மணி!

## 1

கல்லூரி மணி அடித்ததும் வண்ணத்துப் பூச்சிகளாய் மாணவிகள் வகுப்பறையை விட்டு வெளிவந்தனர். அனைவரது முகத்திலும் மலர்ச்சி. அப்பாடா... அன்றைய வகுப்பு எல்லாம் ஒரு வழியாய் முடிந்துவிட்டது. இனி வீட்டுக்குப் பறக்கலாம்....

சிறகுகள் இல்லாத குறையாய் பரபரத்தனர்...

சௌம்யா தன் தோழிகளை எதிர் நோக்கிக் காத்திருந்தாள்.

அனைவரும் ஒரே வகுப்புதான்.. ஆனால் சௌம்யா தான் கடைசி வகுப்புக்கு 'டிமிக்கி' தந்துவிட்டாள்.. அதற்குக் காரணமும் இருந்தது.

மறுநாள் அவளது அண்ணன் பிரதாப் அமெரிக்காவி லிருந்து வருகிறான்.



அவனை வரவேற்க வேண்டாமா... அதுதான் நாளைக்கு விடுப்பு.. நாளைக்கு மட்டுமா... கூட இரண்டு நாட்கள்.

அருமை அண்ணன்.. அதுவும் அன்பைப் பொழியும் அண்ணன்... இத்தனை நாள் கழித்து வந்திருக்கிறான். அவனுடன் ஜாலியாய் பொழுதைக் கழிக்க வேண்டும் என்ற துடிப்பு...

கூடவே அவனுடைய வருங்கால மனைவியைப்பற்றிப் பேசி முடிவு எடுக்க வேண்டும். அந்தப் பெரும் பொறுப்பு அவளுடையதாயிற்றே...

'செய்வனத் திருந்தச் செய்' என்பது போல... அவசரப் படாமல் ஆர.. அமர... இருந்து முடிவு எடுக்க வேண்டும்.. என்ன... மூன்று நாட்களில் பாடங்கள் போய்விடும்... பரவாயில்லை.. தோழிகள் இருக்கிறார்கள்.. சமாளித்து விடலாம்...

அண்ணாவுக்கு அப்புறம்தான் எல்லாமே.. குல் மொஹர் மரத்தின் அசைவில் காற்று இனிமையாக வீச... நெற்றியில் விளையாடிய முடிக்கற்றைகளை ஒதுக்கிய வண்ணம் கண்களை அலையவிட்டாள்.

அதோ தோழிகள்.. ஊகூம்... உயிர்த்தோழிகள்!

கவிதா!

ஹேமா!

மதுரா...!

இதில் யாருக்கு அதிர்ஷ்டம் இருக்கிறதோ... என் அருமை அண்ணன் பிரதாப் சந்திரன் மனைவியாக.. என் அன்பு அண்ணியாக வர...

நிச்சயம் மதுராவிற்கு இல்லை... அவளது வீட்டு நிலைமை அப்படி.. ம்ம்... அவளுக்கு கொடுத்து வைக்க வில்லை.. பெருமூச்சு விட்டாள் சௌம்யா.



அருகில் வந்ததும் கவிதா கேட்டாள்.

''ஏண்டி.. கடைசி வகுப்புக்கு வராமல் போனே... அப்படி என்ன தலை போற 'மேட்டர்.''

''நாளைக்கு என் அண்ணா அமெரிக்காவிலிருந்து வருகிறான்... தெரியும் இல்லே...''

''சரி.. அதுக்கு.. எங்கேயோ அமர்ந்து தோரணம் கட்டிக் கொண்டு இருந்தாயா... இல்லே... ஏதாவது நந்தவனத் தில்.. மலர்களைப் பறித்து மாலை தொடுத்துக் கொண் டிருந்தாயா...'' கிண்டலாய் கேட்டாள் ஹேமா.

''நிறுத்துடீ.. உன் 'டயலாக்'கை.. நாளைக்கு நான் காலேஜ்க்கு வரமாட்டேன்...''

''ஏன்.. சிவப்புக் கம்பளம் விரித்து.. வெண்கொற்றக் குடை விரித்து... 'ராஜாதி ராஜா.. ராஜமார்த்தாண்டன்னு 'பராக்' சொல்றதுக்காகவா...'' இது கவிதாவின் கேலிப் பேச்சு.

''சொன்னாலும் தப்பில்லைடீ.. என் அண்ணா எங்க வீட்டின் 'பிரின்ஸ்'... மகாராஜாதான்... தெரிந்து கொள்...'' சௌம்யா கர்வத்துடன் சொல்ல...

''ஓகோ.. பிரின்ஸ் சார்மிங்காக்கும்... இளவரசி எங்கே... தயாரா...''

''ஏய் சும்மா இருங்கடீ... அவள் சந்தோஷமா விஷ யத்தை சொல்ல வந்தா... அதைக் கேட்காமல்.. நீ சொல்லு சௌம்யா...'' மதுரா தோழிக்கு பரிந்து வந்தாள்.

''என்னடீ... அவளோட அண்ணனுக்கு தூண்டில் போடலாம்னு சிபாரிசுக்கு வருகிறாயா... இருக்கும்.. இருக்கும். அவளோட அண்ணன் மன்மதனாமே... 'டிரை' பண்ணு மதுரா...'' கவிதா பரிகாசம் செய்ய...

முகம் கன்றிப்போனது மதுராவிற்கு.

"சே.. என்னபேச்சு இது... அதுவும் என்கிட்டே..." என்றாள் மனத்தாங்கலாய்...

"சாரிடீ... இவளே.. ஏதோ ஒரு தமாஷுக்கு சொன்னேன் 'சீரியஸா' எடுத்துக்காதேடீ..."

"ஏண்டீ... அவளுக்குத்தான் நிச்சயம் ஆகியிருக்கிறதே.. மாமா பிள்ளை தான் மாப்பிள்ளைன்னு... அவ ளிடம் பேசுகிற பேச்சா இது... உங்களைச் சொன்னாலும் பொருந்தும்..." சௌம்யா குறும்பாய் சொன்னாள்.

"யாரு... நாங்களா... நெவர்... உன் கண்களுக்கு உன் அண்ணா அழகு சுந்தரமா தெரிந்தால்.. எல்லோருக்கும் அப்படித்தான்னு நினைப்பாக்கும்... உன் பீத்தல் எனக்குத் தெரியாதாடீ.. சௌமி... ஆகா.. ஓகோன்னு சொல்வே... அங்கே பார்த்தா.. தோலுரித்த கோழி மாதிரி... ஆள் சொங்கியாத் தெரிவான்.. அய்யோ... உன் அண்ணனைச் சொல்லலைடீ.. முறைக்காதே..."

"கரெக்டா சொன்னே கவிதா... ஏதோ ஒரு புதுக் கதாநாயகன் அறிமுகமாயிருக்கிறான்... சூப்பர் பர்சனாலிட்டி... இனிமே அவன்தான் எல்லாப் பெண்களுக்கும் கனவு நாயகன்னு சொன்னாளேன்னு ஒரு புதுப்படத் துக்குப் போய் பார்த்தோமே... ஞாபகம் இருக்கா.. பார்த்தா அம்மாஞ்சி மாதிரி இருந்தான்... ஒரு கம்பீரம் வேண்டாம் பார்த்ததும் சுண்டி இழுக்கற மாதிரி வசீகரம் வேண்டாம்..."

"அய்யே.. நான் விமர்சனத்தைப் படித்துவிட்டு உங் களுக்கு சொன்னேன்.. எனக்கு என்ன தெரியும்... அவன் அப்படி இருப்பான்னு.."

"ஆங்.. அதுமாதிரித் தான் உங்கண்ணா கதையும்.. அமெரிக்காவில் இருந்திருக்கிறார்... குண்டாகி இருக்க



லாம்.. தொப்பை போட்டிருக்கலாம்.. கன்னம் இரண்டும் 'பன்' மாதிரி வீங்கியிருக்கலாம்.. டபுள் 'சின்' கூட வந் திருக்கலாம்... யாருக்குத் தெரியும்.. பார்க்காமல் 'பிரின்ஸ்' அது இதுன்னு சொல்லாதே சௌமி..."

"எதுக்கு இந்த வீண்பேச்சு.. விடுங்களேன்... அப்போ.. நாளைக்கு நீ வரமாட்டாயா சௌமி..." என்று பேச்சை மாற்றினாள் மதுரா.

"நாளைக்கு மட்டுமல்ல.. அதற்கு அடுத்த இரண்டு நாளும்.. தான்... பிரின்ஸிபிடம் போய் அனுமதியும் வாங் கியாச்சு. அதுக்கு தான் கடைசி வகுப்புக்கு வரவில்லை..."

"சரிடீ... நான் புறப்படுகிறேன்.. லேட்டானா... பாட்டி திட்டுவாங்க... வரட்டுமா." என்று புறப்பட்டாள் மதுரா.

அவள் சென்ற பத்து நிமிடங்களில் சௌம்யாவை அழைத்துச் செல்ல கார் வந்தது.

தோழிகள் மூவரும் ஏறிக் கொள்ள கார் புறப்பட்டது.

பறங்கிப் பழமாய் சிவந்து போய் வந்திருக்கும் அண்ணனைப் பிரமிப்புடன் பார்த்தாள் சௌம்யா...

என்ன அழகாய் இருக்கிறான்.. இந்திப் படத்தில் வரும் கதாநாயகன் மாதிரி....

ஏதோ தோழிகள் கிண்டலாய் சொன்னார்களே.. அவர் களுக்கு என் அண்ணாவைக் காட்டணும்.. அவர்களது மலைப்பை ரசிக்க வேண்டும்... அதை எண்ணி உள்ளூர சிரித்துக் கொண்டாள் அவள்.

எப்படா தனிமையில் அண்ணனிடம் பேசுவோம் என்று தவித்தாள்.

அத்தையும் அப்பாவும் மாறி மாறி பேசிக் கொண் டிருப்பதைப் பார்த்துச் சலிப்பு வந்தது.



ஒருவழியாய் இரவு உணவு முடிந்ததும் அண்ணனும் தங்கையும் உரையாடினார்கள்.

"என்ன சௌமி.. உன் படிப்பு எப்படிப் போகிறது... நன் றாகப் படிக்கிறாய் தானே.. குட்..." தங்கையின் கேசத்தை கோதியவாறு கேட்டான் பிரதாப்.

"சரி. அண்ணா.. உன் விஷயம் என்ன.. அடுத்தது கல்யாணம் தானே... பெண் பார்க்கத் தயாரா..." விழித்தான் அவன்.

"கல்யாணமா... அதற்குள்ளா.. அய்யோ..."

"ஏன்.. கல்யாணமே வேண்டாமா.. அது முடியாது.. உனக்கு மனைவியா.. என் அண்ணியா வரப்போகும் ஒருத்தி... என் தோழியாக இருப்பான்னு அன்னிக்கே உறுதியா சொல்லியிருந்தேன்.. மறந்து விட்டாயாக்கும்..."

"அடடா.. அப்படி ஒரு எண்ணம் உனக்கு இருக் கிறதா... சாரி சௌமி.. எதுக்கு இந்த விஷப்பரிட்சை... என்னை விட்டு விடேன்..." பரிதாபமாய் முகத்தை வைத்துக் கொண்டு சொன்னான் பிரதாப் சந்திரன்.

"என் அருமை அண்ணா.. நான் சொன்னது சொன்னது தான்... அதில் மாற்றமே இல்லை... என் முடிவுக்கு நீ ஒப்புக் கொண்டேயாகணும்.. நீ எனக்கு 'பிராமிஸ்' பண்ணி யிருக்கிறாய்.. தெரியுமா..." அண்ணனை மிரட்டினாள் தங்கை.

"நானா... 'பிராமிஸ்' பண்ணினேனா... எப்போடா..." அப்பாவியாய் முகத்தை வைத்துக் கொண்டுக் கேட்டான்.

"ஓகோ! இரண்டு வருட அமெரிக்க வாசத்தில் அய்யா வுக்கு எல்லாமே மறந்து விட்டதோ.. இல்லை.. இப்படி ஒன்றும் தெரியாத மாதிரி பாசாங்கு செய்வது மேல் நாட்டு



நாகரீகமா..." குத்தலாய் சௌம்யா கேட்க.. சிரித்தான் அவன்.

நீண்ட நாளைக்குப் பிறகு இப்படி அன்புத் தங்கை யுடன் வாதம் புரிவதை ரசித்தான்...

சௌம்யாவும் தன் முடிவில் உறுதியாக இருந்தாள்.

பின்னே.. பிரதாப் அமெரிக்காவிற்கு செல்லும் முன் எடுத்த முடிவாயிற்றே... இரண்டு வருட தொழிற்பயிற் சியை முடித்து இந்தியா திரும்பியதும்.. அதற்காகவே காத்திருந்தது போல.. தன் தோழிகளை அண்ணனுக்கு அறிமுகப்படுத்த வேண்டும் என்று துடித்துக் கொண் டிருந்தாள்.

அவளது இரு தோழிகளில் ஒருத்திதான் தனக்கு அண்ணி. அது யார் என்று 'செலக்ட்' செய்தால் போதும் என்று தீர்மானமாய் சொல்ல வேண்டும் என்று காத்துக் கொண்டிருந்தவள் இப்போது அதை நழுவ விடுவாளா என்ன....

அதுவும் தானாக எடுத்த முடிவல்ல.. பிரதாப் தான் அதற்கு பிள்ளையார் சுழி போட்டது.

அமெரிக்கா புறப்படும் முன் பிரதாப் தங்கையிடம் சொன்னான்.

"சௌமி.. உன் வருங்காலக் கணவனை நான்தான் தேர்ந்தெடுப்பேன்... எடுப்பேன் என்ன... எடுத்தேவிட் டேன்... யார் தெரியுமா.. நம் அரவிந்த் தான்..."

"யாருண்ணா.. 'ரோஜா' ஹீரோ அரவிந்த்சாமியா... அடடா.. அவருக்கு திருமணமாகிவிட்டதே..." குறும் புடன் அவள் சொல்ல...

"ஏய்... வாயாடி.. தெரியாத மாதிரி நடிக்காதே.. என் ஃப்ரெண்ட் அரவிந்த்... என்ன பார்க்கறே சௌமி.. ஆள்

அழகா இருக்கான்.. நல்ல எதிர்காலம்.. 'ஸ்டேட்ஸ்' லிருந்து வரட்டும்.. பார்.. எப்படி சம்பாதிக்கிறான் என்று.. என்ன.. சௌமி.. உனக்கு ஓகேதானே...!'' என்றான் அவன்.

கிளுகிளுப்புடன் நினைத்தாள் சௌம்யா.. என் மனம் கவர்ந்தவனை மணக்க கசக்குமா என்ன...

அரவிந்த் பிரதாப்பின் உயிர்த்தோழன்...

இருவரும் ஒன்றாகவே படித்தவர்கள்...

இருவரும் சேர்ந்தே அமெரிக்கா சென்றார்கள். ஆனால் அரவிந்த் வருவது இரண்டு மாதங்களுக்குத் தள்ளிப்போய் விட்டது.

அண்ணனின் நண்பனாக வந்தவனுக்கு தன் இதயத்தில் இடம் தந்துவிட்டாள் தங்கை. தன் காதலை அண்ணனுக்குத் தெரியாமல் பொத்தி வைத்தவளுக்கு அண்ணனே பச்சைக் கொடிக் காட்டியதும் திகைப்பு.. மகிழ்ச்சியும் கூட...

எப்படி இதை அண்ணனிடம் சொல்வது என்று தயங்கிக் கொண்டிருந்தவளுக்கு... பழம் நழுவி பாலில் விழுந்ததுபோல இருந்தது.

அரவிந்தனின் கலகலப்பான சுபாவமும்... எதையும் நிதானமாய் யோசித்து செயல்படும் விதமும்... இன்னும் அவனுடைய வினயம்... அறிவு... திறமை... லட்சிய நோக்கு எல்லாமே அவளை ஈர்த்தன...அவனது கன்னத்தில் சுழித்து விழுந்த அழகான 'டிம்ப்பிள்'... அதை தொட்டுப் பார்க்க வேண்டும் என்று ஆசைதான்.

அவன் கன்னம் குழிய சிரிக்கும் போது... ஆகா... என்ன அழகு!

தன் உள்ளத்தைக் கொள்கை கொண்டவனையே தனக்கு மணாளனாய் தேர்ந்திருக்கிறான் தன் அண்



ணன்.... இதுவல்லவோ அதிர்ஷ்டம்.. இதயம் துள்ளியது... இருந்தும்... அண்ணனிடம் கொஞ்சம் 'பிகு' செய்து கொண்டாள்.

''உன் கண்ணுக்கு உன் ஃப்ரெண்ட் அழகாகத் தெரியலாம். ஆனால் அவரை எனக்குப் பிடித்திருக்க வேண்டுமேண்ணா...'' தன் கூந்தலின் நுனியைப் பின்னிக் கொண்டே.. அவனைப் பார்க்காமல் சொன்னாள்...

''சரி விட்டுத்தள்ளு சௌமி.. வேறு ஒருத்தன் கிடைக்கமாட்டானா என்ன... நான் அரவிந்திடம் சொல்லி விடுகிறேன்...'' என்று பிரதாப் சொல்ல...

''அய்யோ.. வேண்டாம் அண்ணா... நீ ஆசைப்பட்ட மாதிரியே உன் ஃப்ரெண்டை கல்யாணம் பண்ணிக் கொள்கிறேன். ஆனால் ஒரு நிபந்தனை.. உன் மனைவியை.. அதாவது.. என் அண்ணியை நான் தான் 'செலக்ட்' பண்ணுவேன்... நான் சொல்ற பொண்ணைத் தான் நீ கட்டிக்கணும்.. சம்மதமா...'' ஆள் காட்டி விரலை ஆட்டியவாறு கூறினாள் சௌம்யா...

''அட தேவுடா...'' தலைமேல் கைவைத்துக் கொண்டான் பிரதாப்.

''பின்னே.. எனக்குரியவனை நீ தேர்ந்தெடுக்கிறபோது.. உன்னுடையவளை நான் 'செலக்ட்' செய்யறது தானே நியாயம்...''

''போச்சுடா... பஸ்மாசுரன் கதையா.. என் தலைமேலே கை வைத்து விட்டாயா..ஓகே.. ஓகே.. சம்மதிக்கறேன்.. போதுமா...''

''அப்போ.... நீ அமெரிக்காவிலிருந்து வரும்போது.. உனக்கு மனைவி ரெடி...'' குரலில் உறுதி தெறிக்க சௌம்யா சொன்னாள்.



அதைத்தான் இப்போது அண்ணனுக்கு நினைவூட்டிப் பேசினாள்.

''என்னண்ணா.. நீ 'ஸ்டேட்ஸ'க்கு' புறப்படும் முன் பேசினது நினைவில்லையாக்கும்...''

''எது... உனக்கும் அரவிந்தனுக்கும் கல்யாணம்னு.. அதையே ஜெபம் பண்ணிக் கொண்டிருக்கிறாயா...'' பரிகாசத்துடன் சொன்னான் பிரதாப்...

சிரிக்கும்போது அவன் முகம் 'ஜிவ்'வென்று சிவந்து போனதை வியப்புடன் பார்த்தாள் தங்கை.

என்னமாய் மாறியிருக்கிறான் என் அண்ணா... அமெரிக்கா போனவர்கள் எல்லோரும் எப்படி... இந்த மாதிரி சிவப்பாகி விடுகிறார்கள்...

அண்ணனும் நல்ல நிறம் வந்து... சதைப்பிடிப்புடன்.. அழகாய் தெரிகிறான்...

ஏற்கனவே அழகன் தான்.. இப்போதோ இன்னும் அதிகமாய்.. பெண்கள் மனதை பித்துப் பிடிக்கச் செய்யும் விதமாய்..

'சட்'டென்று கவிதா சொன்னது நினைவுக்கு வந்தது.. குண்டாகி.. தொப்பை விழுந்து.. கன்னம் வீங்கி.. டபுள் சின்னுடன் என்றெல்லாம் கேலி செய்தாளே...

இருக்கட்டும்.. இப்போது என் அண்ணனைப் பார்த்து விட்டு என்ன சொல்கிறார்கள் என்று பார்க்கலாம்.

நல்ல உயரத்துடன்.. அளவான தேகக்கட்டுடன்... அலை அலையான கறுத்த கேசத்துடன்... பொன்னிறத்துடன் இருக்கும் என் அண்ணாவைப் பார்த்து சொக்கி நிற்கத்தான் வேண்டும்...

அப்போது பேசிக் கொள்கிறேன்...



என் அண்ணனின் கவர்ச்சியும் அழகும் யாருக்கு வரும்... அதுவும் அவன் ஒரு புன்னகைப்பூத்தால் போதும்.. எதிராளி அவுட்...! அதுவும் பெண்ணாக இருந்தால்.. க்ளீன் போல்ட்!

பிரதாப் கையை சொடுக்கி அவளது கவனத்தைத் திருப்பினான்.

''ஏய்.. சௌமி.. என்ன.. அரவிந்த் கிட்டேயே போய்.. விட்டாயா...''

''ஷ்ஷ்... அண்ணா... பீ சீரியஸ்... என் திருமணம் இருக்கட்டும்.. நாம பேசறது உன் திருமண விஷயம் தான்... இந்த விஷயத்தில் நீ ஒப்புக் கொண்டாயிற்று. உன் 'பெட்டர் ஹாஃப்' யாருன்னு நான் செலக்ட் பண்ணியாச்சு... என் தோழிகள் இரண்டு பேர்...''

''அய்யோ.. இரண்டு மனைவிகளா.. தாங்குவேனா...'' அலறினான் அவன்.

''ச்சூ.. ஒருத்திதான்... அதாவது இரண்டு பேரில் ஒருத்தி... அது யார் என்று நீ தான் தீர்மானிக்கணும்.''

''அவர்களை.. சாரி.. அவர்களில் அந்த யாரோ ஒருத்தியை என் மனம் ஒப்ப வேண்டுமே சௌமி...''

''அவர்களுக்கு என்ன குறை... இரண்டு பேருமே அழகுதான்... ஒருத்தி பேரு கவிதா... புத்திசாலி.. நல்லா படிப்பாள்... பணக்காரி.. இன்னொருத்தி ஹேமா... அவளும் படிப்பில்... இதர 'ஆக்டிவிட்டிஸி'லும் சுட்டி...''

''இன்னும் யாரும் இல்லையா... சுயம்வரமே நடத்திவிடலாமே...'' கிண்டலாய் கேட்டான் பிரதாப்.

''ஊகூம்... என் இன்னொரு தோழியை பார்த்து வச்சிருந்தேன்.. ஆனால் அவளுக்கு வேறே இடத்தில் நிச்சயம் ஆகிவிட்டது...''

"அப்பாடா.. தப்பித்தேன்..."

"இல்லை.. உனக்குக் கொடுத்து வைக்கவில்லைன்னு தான் சொல்வேன்.. மதுரா ரொம்ப நல்ல பொண்ணு... தெரிஞ்சுக்கோ..."

"அதுசரி.. அமெரிக்காவில் இருக்கும் என் ஸ்டெல்லாவுக்கு என்ன பதில் சொல்வதாம்... அங்கே அவள் எனக்காகக் காத்திருப்பாளே..."

"என்னண்ணா நீ சொல்வது.. இதுக்கு நம்ம அப்பா.. அத்தை ஒப்புக் கொள்வார்கள்னு நினைக்காதே.. எனக்கும் வாக்கு கொடுத்திருக்கே... அதை மறந்து விடாதே.. ஆமாம்..." மிரட்டுவது போல சொன்னாள் சௌம்யா.

"ஏதோ விளையாட்டா அப்போ பேசினதை 'சீரியஸா' எடுத்துக் கொண்டாயாக்கும்.. மேல் நாட்டில் அவரவர் லைஃப் பார்ட்னரை அவரவர்தான் அமைத்துக்கொள்வது... தெரியுமா..."

"ஓகோ... அய்யா இப்போ அமெரிக்கரோ.. அப்படியே உன் ஃபிரெண்ட் அரவிந்தையும் யாரையாவது தேடிக் கொள்ளச் சொல்லேன்..." கோபத்துடன் கிளம்பிய தங்கையை தடுத்து நிறுத்தினான் பிரதாப்.

"எங்கே போகிறாய்.. என் இனிய உடன் பிறப்பே..."

"உன் விஷயத்தை அத்தையிடம் சொல்லத்தான் என் செல்ல அண்ணாவே..." முறைப்புடன் சொன்னாள் அவள்..

இரு கரங்களையும் தலைக்கு மேல் கூப்பினான் அவன்.

"அம்மா.. தாயே... சரணம்.. எனக்கு எந்த ஸ்டெல்லாவும் தெரியாது. ஏதோ விளையாட்டுக்குச் சொன்னேன்... நீ அத்தைக் கிட்ட போட்டுக் கொடுத்து குட்டையைக்



குழப்பி வைக்காதே.. அது போகட்டும்.. இப்ப எனக்கு என்ன கல்யாணத்துக்கு அவசரம் என்று இப்படிப் பறக்கறே... முதல்ல உன் கல்யாணம்.. அதுக்கப்புறம் யோசிக்கலாம். எனக்கும் அப்படி ஒன்றும் வயசாகவில்லை... கால் கட்டு போட்டுக் கொள்ள..."

"ஆமாம்.. இன்னும் சின்னப்பிள்ளை தான்... அது நம் அத்தைக்கு தெரியலையேண்ணா... உனக்கு ரெண்டு கழுதை வயசாச்சாம்... ஒருவருடமாக உன் திருமணம் பற்றி முணுமுணுக்க ஆரம்பித்து விட்டார்... அமெரிக்கா போகிறதுக்கு முன்னாலே அதைப் பண்ணி அனுப்பியிருக்கணும்.. அங்கே போனா பிள்ளை கெட்டு விடுவான் என்கிற பயம்... உன்மீது அத்தனை நம்பிக்கை.. அத்தைக்கு... தெரிஞ்சுக்கோ..."

"நான் அத்தையிடம் சொல்கிறேன்.. 'அத்தை... இருபத்தி நான்கு காரட் தங்கமாய் அமெரிக்காவுக்குப் போன உங்க செல்லப்பிள்ளை... பத்திரமாய்.. இருபத்தி மூன்று காரட்டாய் திரும்பி வந்திருக்கேனாக்கும் என்று..."

"அதென்ன.. இருபத்து நான்கில் ஒன்று தேய்ந்து விட்டது..."

"அறிமுகமாகிய பெண்களைக் கைக்குலுக்கினேன்... பார்.. அதில் ஒரு மாற்று குறைந்து விட்டது... அதான்..."

"அது இருக்கட்டும்... என் தோழிகள் விஷயம்..." விடாமல் கேட்டாள் தங்கை.

"இரு.. இரு.. ஏன் குதிக்கிறே சௌமி.. நான் அவர்களை பார்க்க வேண்டாமா.. பார்த்துப் பேச வேண்டாமா... பேசிப் பழக வேண்டாமா.. பழகி..."

"நிறுத்து... நிறுத்து... நீ இருப்பது இந்தியாவில்... அதுவும் தென் இந்தியாவில்.. அமெரிக்காவில் இல்லை... பார்த்துப் பேசறதுடன் நிறுத்திக் கொள் அண்ணா..."





"அடடா.. நான் சொல்ல வந்தது வேறே சௌமி.. பழகிப்பார்த்து எனக்கு ஏற்றவளா என்று தெரிந்து கொள்ள வேண்டாமான்னு சொல்ல வந்தேன்.. ஒருவேளை இரண்டு பேரையும் பிடிக்காமல் போகலாம் இல்லையா..."

"அதனால் என்ன.. மூன்றாவதாய் வேறொருத்தியைப் பிடிப்பேன்... அவளும் என் தோழியாகத்தான் இருப்பாள். அதுமட்டும் நிச்சயம் அண்ணா..."

"விடமாட்டாயே..." சலிப்புடன் சொன்னான் அவன்.

"ஏன்.. ஏன்... விடணும்... 'கண்டிஷன்'னா 'கண்டிஷன்' தான்" உறுதியுடன் சொன்னாள் தங்கை.

அவன் தலையில் கை வைத்து கொண்டு அமர்ந்ததைக் கண்டு சிரித்தவாறு சென்றாள் சௌம்யா.

## 2

அத்தையின் கழுத்தைக் கட்டிக் கொண்டு எதற்கோ கெஞ்சிக் கொண்டிருந்தாள் சௌம்யா...

அத்தையின் செல்லம் அவள்...

இரண்டு வயது குழந்தையாய் அவள் இருக்கும்போது அவளது அன்னை மஞ்சள் காமாலை நோய் வந்து இறந்து விட... அத்தைதான் அவர்களை வளர்த்து ஆளாக்கியது...

தாயில்லாத பிள்ளைகளுக்கு தாயாக இருந்து கவனித்தாள்.. அவளுக்கும் துணையென்று யாரும் இல்லையே...

இளம் வயதிலே கைம்பெண்ணாகிப் போன அவளுக்கு இருந்த ஒரே உறவு சகோதரன் சுந்தரம் தான்..



அவருக்கும் குழந்தைகளை வளர்க்க ஒரு பெண் உதவி தேவைப்பட்டது.. தமக்கையை அன்புடன் ஏற்றுக் கொண்டார்....

தனக்குக் குழந்தைகள் இல்லையே என்ற அவளது ஏக்கம்.. தன் தம்பியின் பிள்ளைகளின் கள்ளமில்லா சிரிப்பில் வடிந்து போனது.. அந்தப் பிஞ்சுக் குழந்தைகளின் பால் வடியும் முகங்களும்.. பாசமும்தான் துர்காவிற்கு இருந்த ஒரே ஆறுதல்... அவர்களை எந்தக் குறையும் இல்லாமல் வளர்த்தாள்.

பிரதாப் சந்திரன் அத்தையின் அருமந்தப் புத்திரன் என்றால் சௌம்யா அவளது செல்ல மகள்.

அத்தையைக் கெஞ்சியோ.. கொஞ்சியோ தன் காரியத்தை சாதித்துக் கொள்வாள் அவள்... இப்போதும் அப்படித்தான் அத்தையின் தாடையைப் பிடித்து கொஞ்சிக் கொண்டிருந்தாள்.

"அத்தை... என் செல்ல அத்தை.. இன்னிக்கு என் அண்ணா என்னை 'டிராப்' பண்ணட்டுமே. ப்ளீஸ் சொல்லுங்க அத்தை.." தன் அண்ணனை தோழிகளுக்கு காட்ட வேண்டும் என்ற துடிப்புடன் கெஞ்சினாள்.

"பிரதாப்புக்கு முக்கிய வேலை இருக்குடா... அடம் பண்ணாமல் நம்ம காரிலே போம்மா.. சௌமி..."

"அப்போ... என்னை காலேஜிலிருந்து அழைத்து வர அவன் வரட்டும்.. என்ன அத்தை... ஒரு தங்கைக்கு இது கூடச் செய்யக்கூடாதா..." என்று சிணுங்கினாள் சௌமி.

"அவ்வளவுதானே... சொல்லிடறேன்... இப்போ சமர்த்தாய் புறப்படும்மா..."

சந்தோஷத்தில் சின்னக் குழந்தையாய் துள்ளிக் கொண்டு சென்றாள் சௌம்யா.

மாலை...

கல்லூரி வாசலில் தன் தோழிகளுடன் காத்திருந்தாள் சௌம்யா.

தோழிகள் என்றால்.. அண்ணனுக்கு மனைவியாவதில் நீயா.. நானா என்ற போட்டியில் ஜெயிக்கக் காத்திருக்கும் கவிதாவும்.. ஹேமாவும்தான்...

கூடவே மதுராவும்.. கொசுறாய்...

சௌம்யாவுக்கு நெருங்கிய.. உயிர்தோழி அவள்...

சௌம்யாவும்.. கவிதாவும் சுரிதாரில் இருந்தனர். ஹேமா ஜீன்ஸ்.. டீ ஷர்ட்டில்.. மதுரா காட்டன் புடவையில்... அவள் புடவையைத் தவிர வேறு எதையும் உடுத்துவதில்லை. அவளது பாட்டியின் கண்டிப்பு அப்படி!

பள்ளி வரை பாவாடையும்.. தாவணியும் தான்... கல்லூரிக்கு வந்த பின் சேலையானது.

அவளது குடும்பப் பின்னணியே தனி.. கவிதா.. ஹேமா... சௌம்யாவைப் போல அவள் பட்டாம்பூச்சியில்லை... அவள் ஒரு கூட்டுப் புழு... சிறகுகளை வெட்டி.. கூண்டில் அடைக்கப்பட்ட கிளி!

கவிதா செல்வந்தரின் ஒரே பெண்... அவளது தந்தை பெரிய தொழிலதிபர்... வெளி தேசங்களில் வியாபாரத் தொடர்பு உள்ளவர்.. தொழிலில் வெற்றிக் கண்ட மனிதர்...

சௌம்யாவின் வீட்டிற்கு செல்லும் வழியில் தான் அவர்களின் பெரிய வீடு...

அதனால் பல நேரங்களில் சௌம்யாவே அவளுக்கு 'டிராப்' கொடுப்பாள்.



ஹேமா அந்த அளவு பணக்காரி இல்லை என்றாலும் நல்ல வசதியான குடும்பம்தான். தந்தை இன்ஜீனியர். அண்ணா துபாயில் கைவழியும் சம்பளத்தில் இருக்கிறான். ஹேமாவின் வீடு.. சௌம்யாவின் வீட்டிலிருந்து இரண்டு கி.மீ. தூரத்தில் இருந்ததால்... சௌம்யா தன் வீட்டில் இறங்கிக் கொண்டு... டிரைவரிடம் தோழியை அவள் வீட்டில் விட்டு வரச் சொல்வாள்... சில சமயங்களில் ஹேமா தன் வீட்டிற்கு ஆட்டோவில் செல்வதும் உண்டு...

நெருங்கிய தோழிகள் என்பதால் ஒன்றாகவே வீடு திரும்புவதில் விருப்பம்...

மதுராவும் உயிர்தோழிதான் என்றாலும்.. இவர்களைப் போல பணக்கார வர்க்கம் இல்லை... 'மிடில் கிளாஸ்' குடும்பம்.. மதுரா வளர்ந்தது தாய்வழிப் பாட்டியிடம் தான்... பிரசவத்தில் ஏற்பட்ட கோளாறினால் மதுராவின் தாய் இறந்து விட.. மதுராவின் தந்தை இன்னொரு திருமணம் செய்து கொண்டார்.

மறுதாயிடம் தன் பேத்தி அவஸ்தைப் படுவதைப் பார்க்கவும் விரும்பாமல்.. அவளை தன் மகளின் நினைவுச் சின்னமாய் எண்ணி வளர்த்தனர்...

ஆரம்பத்தில் பாட்டியும் தாத்தாவும் பேத்திக்கு ரொம்பவும் செல்லம் கொடுத்தது என்னவோ உண்மை...

எப்போது தங்களுடைய கடைசி மகள்.. அதாவது மதுராவின் சித்தி யாருடனோ ஓடிப்போனாளோ.. அன்றைக்கே பாட்டி இறுகிப் போனாள்.

பெண்குழந்தைகளுக்கு அதிக செல்லம் கொடுத்தால் கெட்டுக் குட்டிச்சுவர் ஆகிவிடுவார்கள்.. அதிக சுதந்திரம்



தந்தால் சீரழிந்து போவார்கள் என்ற எண்ணம் வேரூன்றி அவர் மனதில் நின்றுவிட்டது.

அன்றிலிருந்து மதுராவை வெகு கண்டிப்புடன் வளர்க்கத் தொடங்கினாள்.

யாரோ செய்த தவறுக்கு யாருக்கோ தண்டனை!

மகளின் மேல் இருந்த கோபமும் ஆத்திரமும் கண்டிப்பாய் மாறியது...

அதற்காக மதுராவும் வருந்தவில்லை...

பாட்டியின் மனநிலை அவளுக்கு நன்றாகப் புரிந்தது. பாட்டியின் அடிமனதில் நிலத்தடி நீராய் அன்பு இருக்கிறது என்பதை அவளும் உணர்ந்திருந்தாள்.

சித்தியின் செயலால்தான் அவர் மனம் இறுகிய பூமியாகிப் போனது என்றும் தெரியும்.

படிப்பு முடிந்ததும் மதுராவை தன் மகனின் பிள்ளையான கிருஷ்ணாவிற்கு முடித்து விடவேண்டும் என்பதில் முனைப்பாக இருந்தாள் பாட்டி.

மதுரா வயதுக்கு வந்ததுமே அந்தப் பேச்சை எடுத்தவள்... அவள் கல்லூரியில் கால் வைத்ததும் அதைத் திரும்ப திரும்பச் சொல்லி எச்சரித்தாள்.

அதாவது... அடக்க ஒடுக்கமாய் கல்லூரிக்குப் போய் வரணும்.. படிப்பில் மட்டும் தான் கவனம் இருக்க வேண்டும்.. காதல்.... ஊதல் சமாச்சாரங்கள் எதுவும் வரக் கூடாது... படிப்பு முடிந்ததும் கல்யாணம்.. கிருஷ்ணாதான் உனக்கு வரப்போகும் புருஷன்.. பாட்டியின் எச்சரிக்கை மதுராவை ஒடுங்கச் செய்தது... மற்றவர்களிடம் இருந்து ஒதுங்க வைத்தது.



கவிதாவும் ஹேமாவும் கல்லூரி மாணவிகள் என்ற இலக்கணத்திற்கு எந்தவித பங்கமும் இல்லாமல் 'மாடர்னாக' இருந்தனர்.

காற்றில் பறக்கும் ஷாம்பு குளியல் போட்ட கேசம்.. முகத்தில் லோஷனின் வழவழப்பு.. ஐ லைனர் தீட்டிய கண் இமைகள்.. ப்யூட்டி பார்லருக்குச் சென்று அழகாய் வடிவமைக்கப்பட்ட புருவங்கள்.. உடைக்குப் பொருத்தமாய் பூசிய லிப்ஸ்டிக்கின் உபயத்தால் வடிவான இதழ்கள்.. மொத்தத்தில் 'பாலிவுட்' நடிகைகளைப் போல மின்னினார்கள்.

அவர்களுடன் சென்றால் மதுராவை யாரும் பார்க்க மாட்டார்கள் தான்... அவர்களின் முன்னே.. அவளது எளிமையான தோற்றம் எடுபடாது என்பது உண்மையும் கூட...

இவர்களின் வட்டத்தில் கொஞ்சம் வித்தியாசப்பட்டுத் தெரிந்தாள் என்று தான் சொல்ல வேண்டும்... அவள் இவர்களுடன் சேர்ந்ததும் வியப்பிற்குரிய விஷயம்!

ஒரே திசையில் வீடு அமைந்ததாலோ.. இல்லை.. நால்வருமே கல்லூரியில் அனைத்து விஷயங்களில்.. படிப்பு... பாட்டு.. கட்டுரை... பேச்சுப் போட்டிகளில் படுசுட்டிகள் என்பதாலா... அல்லது நால்வருமே அழகிகள் என்பதாலா.. தெரியவில்லை.. ஏதோ ஒன்று அவர்களை ஒன்று சேர்த்து... இணைபிரியா தோழிகளாக ஆக்கிவிட்டது.

முதலில் ஒதுங்கி நின்ற மதுராவையும் சேர்த்து கட்டிப்போட்டுவிட்டது...

அவர்களிடையே பணமோ.. அந்தஸ்தோ குறுக்கே வரவில்லை. போட்டியும்... பொறாமையும் சுத்தமாய் இல்லை..

தங்கள் அளவு மதுரா பணக்காரி இல்லை என்று தெரிந்திருந்தும்... அதைப் பொருட்படுத்தாமல் தங்களில் ஒருத்தியாக நினைத்துப் பழகினார்கள் தோழிகள்.

அதனால் மதுராவிற்கு தாழ்வு மனப்பான்மையும் கிடையாது. தோழிகளின் அன்பில் அந்த உணர்வு தோன்றவே இல்லை.

மதுராவின் சாத்வீக அழகு சௌம்யாவை ஈர்த்தது. முகத்தில் பவுடரைத் தவிர வேறு ஒப்பனை இல்லை...

கண்ணுக்கு லேசாய் மை தீட்டிக் கொள்வாள்.. அதுவும் பட்டும் படாமலும்.. பாட்டிக்கு அலங்காரம் பிடிக்காதே! துடைத்துவிட்டதைப் போல 'பளிச்' என்று இருக்கும் முகத்தில் அழகான வட்ட பிந்தி பொட்டு எடுப்பாகத் தெரியும்.. எளிமையும் அழகுதான்!

காதில் சின்னதாய் ஜிமிக்கி... கழுத்தில் மெல்லிய சங்கிலி. வலக்கரத்தில் கலகலக்கும் கண்ணாடி வளையல்கள். இடக்கையில் வாட்ச். நடுத்தர வர்க்கத்தின் எளிமையான தேவதை...!

சௌம்யாவும் அழகிதான்... அது துள்ளும் மான் அழகு என்றால்.. மதுரா.. தத்தும் அன்னக்கிளியின் அழகு...

முதலில் உயிர்த்தோழியான மதுராவைத்தான் தன் அண்ணியாக விரும்பினாள் சௌம்யா.

ஆனால் மதுராவின் பாட்டி... அவளுக்கு அத்தை மகனை நிச்சயம் செய்தாகி விட்டது என்று தெரிந்ததும் வருத்தத்துடன் தன் பட்டியலில் இருந்து அவளது பெயரை அடித்துவிட்டாள்.

அடிக்கடி பெருமூச்சு விடுவாள் சௌம்யா...

"அந்த யாரோ கிருஷ்ணா ரொம்பவும் கொடுத்து வைத்தவன்..."



என்ன செய்ய.. யாருக்கு மாப்பிள்ளை யாரோ... தனக்கு வரப்போகும் அண்ணி எவளோ...

"இப்ப எதற்கு நாம் இங்கே நிற்கிறோம், சௌமி... பஸ் ஸ்டாப்புக்கு போய் விடலாம் தானே..." என்று மதுரா கேட்டாள்.

"உஷ்... பொறுமையா இரு மது... இப்ப புறப்பட முடியாது..."

"ஏன்.."

"ஏனா... சௌம்யாவின் அண்ணா.. ராஜாதி ராஜா... பிரதாப் சந்திரன் அவர்கள் வருகிறாராம்... இவள் பீற்றிக் கொள்வது போல அவன் அத்தனை 'ஹான்ட்ஸம்மா'ன்னு பார்த்துவிடலாம்.. இரு..." கிண்டலாய் சொன்னாள் கவிதா....

மதுராவின் மனம் பயத்தில் படபடத்தது... பாட்டிக்கு இதெல்லாம் பிடிக்காதே...

யாராவது பார்த்துவிட்டால்.. பார்த்துவிட்டு பாட்டியிடம் சொல்லிவிட்டால்... அய்யோ... படிப்பு பாதியில் நின்று விடுமே...

'வாட்சை' திருப்பிப் பார்த்தாள்.... வழக்கமான நேரத்தைத் தாண்டி பதினைந்து நிமிடங்கள் ஆகிவிட்டதே!

"அப்போ நான் கிளம்பறேன் சௌமி... லேட்டாச்சுன்னா..."

அவள் முடிப்பதற்குள் தோழிகள் கோரஸாக ராகம் பாடினார்கள்... "பாட்டி திட்டுவார்கள்.. சரிம்மா.. புறப்படு."

சௌம்யாவும் வற்புறுத்தவில்லை... அண்ணி பதவிக்கான பட்டியலில் தான் அவள் பெயர் இல்லையே.. பத்து நிமிடங்கள் கழிந்ததும் பிரதாப் வந்தான்... படகு போன்ற காரில்....



தன் அண்ணனை பெருமையுடன் தோழிகளுக்கு அறிமுகப்படுத்தினாள் தங்கை.

ஆறடி உயரத்தில்... கன கம்பீரமாய்... அழகாய்... கவர்ச்சிப் புன்னகையுடன் நின்றிருக்கும் அவனைப் பார்த்ததும் அப்படியே சுருண்டு விழுந்தன தோழிகளின் இதயங்கள்.

'வாவ்!' சௌம்யா பீற்றிக் கொண்டதில் தவறே இல்லை... இப்படிப்பட்ட அண்ணா இருந்தால் யாருக்குத் தான் ஜம்பம் வராது...

அடடா... அந்தப் பளபளக்கும் கண்களின் கவர்ச்சி.. சிலுப்பி நிற்கும் 'பம்'மென்ற கருமையான கேசம்... சுண்டி இழுக்கும் சிவந்த நிறம்.. அண்ணாந்து பார்க்கும் உயரம்... அளவான தேக அமைப்பு.. கறுகறு மீசை... அதன் கீழ் வடிவாய் அமைந்திருக்கும் அழகான உதடுகள்.. அந்தப் புன்னகை ஒன்றே போதுமே... மனதை கவ்வியிழுக்க... அழகன்தான்! அதுவும் பேரழகன்!

தேன் கூட்டைப் பார்த்த நரியைப் போல இருவரும் கிறங்கி நிற்பதைக் கண்டுவிட்டு உள்ளுக்குள் பெருமிதம் கொண்டாள் சௌம்யா.

கர்வத்துடன் பிரதாப்பின் கரத்தைப் பற்றியவள் "அண்ணா... என் உயிர் தோழிகள்.. உன்னிடம் சொல்லி இருந்தேனே" என்று அர்த்தத்துடன் பார்த்தாள். குசலமாய் அவர்களை விசாரித்துவிட்டு காரில் அமர்ந்தான் அவன்... அண்ணனின் அருகே சௌம்யா அமர...

பின் சீட்டில் கவிதாவும் ஹேமாவும்...

இருவரின் கண்களும் பிரதாப்பையே மொய்த்தன. இத்தகைய அழகன் தனக்குக் கணவனாய் வந்தால்.. நினைப்பே வெல்லமாய் இனித்தது. இருவரின் மனதிலும் ஏக்கம்...



கவிதாவிற்கு தன் அழகில் அதீத நம்பிக்கை உண்டு. நிச்சயம் பிரதாப் தன்னிடம் மயங்குவான் என்று உறுதியுடன் எண்ணினாள்.

'ரியர் வ்யூ' கண்ணாடியில் அவளது கண்கள் பிரதாப்பின் கண்களை சந்திக்க... 'ஜிவ்' என்று உடம்புக்குள் பரவியது. ஏதோ மின்னல் தாக்கியது போல நெஞ்சினுள் படபடப்பு...

அவனது கண்கள் தன்னை உற்று நோக்கியதோ... குறும்பாய் சிரித்தது போல ஒரு பிரமை...

"மிஸ்.. கவிதா... படிப்பு முடிந்ததும் என்ன செய்வதாய், உத்தேசம்... மேற்படிப்பா... இல்லை திருமணமா..." என்று திரும்பிப் பார்த்துக் கேட்டான் பிரதாப்.

சட்டென்று அவனது விசாரிப்பில் தடுமாறிப்போனாள் கவிதா...

"என்ன கவிதா.. நீங்க இன்னும் முடிவு எடுக்கவில்லையா என்ன" கவிதாவுக்கு மெல்ல நப்பாசை எட்டிப் பார்த்தது... என் உள்ளத்தை அறிய முயல்கிறானோ... 'கல்யாணம்' என்றால்.. தன் விருப்பத்தைக் கூறலாம் என்ற எண்ணமோ... பரவசத்தில் குளிர்ந்தது உள்ளம்...

"அண்ணா... கவிதாவும் என் வயசுதான்... இந்த 'நீங்க' மரியாதை எல்லாம் வேண்டாம்..."

"ஓகே... ஓகே.. என்ன கவிதா.. பதிலே காணோம்..." என்றான் அவன்.

"இனிமேல்தான்.. முடிவு எடுக்க வேண்டும்" படபடவென்று பொரிந்து தள்ளும் நாக்கு ஏன் இப்படிக் குழறுகிறது... சே!

அதே சமயம் தன்னைப் பற்றி அறியும் ஆவலில் விசாரிக்கிறான் என்று நினைத்துப் புளாங்கிதம் அடைந் தாள்... அவள் மட்டுமா... செளம்யாவும் தான்...

அண்ணனுக்கு கவிதாவைத்தான் பிடித்திருக்கிறது போலும்.. என்று எண்ணினாள்.

ஆனால் அடுத்த நிமிடமே குழப்பம்...

"வாட் அபெளட் யூ ஹேமா... படிப்பா... வேலையா.. இல்லை கல்யாணமா..."

கவிதாவை போல நாக்குழறாமல் பேசினாள் ஹேமா.. பிரதாப்பின் வசீகரத்தில் கவரப்பட்டாலும்... மனதில் தடுமாற்றம் ஏதும் வரவில்லை...

வீடு வரும் வரை கலகலப்பாக இருவரிடம் பேசிக் கொண்டு வந்தான் அவன்.

"அண்ணா.. என் தோழிகளைப் பற்றி என்ன நினைக் கிறாய்.." அவனது அறைக்கே சென்று கேட்டாள் செளம்யா..

"ம்ம்.. நைஸ் கேர்ள்ஸ்.. இன்டெலிஜென்ட்... ஜோவி யல்... அப்புறம்..."

"ஹலோ.. நான் கேட்டது அவங்களுக்கான நன்ன டத்தை சான்றிதழ் இல்லை.. இருவரில் உனக்கு யாரை பிடித்து இருக்குன்னு தான்..."

"ஓ! அதுவா... அது அத்தனை சீக்கிரத்தில் சொல்லக் கூடிய விஷயமா செளமி.... நிதானமா யோசித்து முடிவு பண்ண வேண்டிய விஷயம்.. உடனே 'எஸ்' என்று சொல்லணும் என்று எதிர்பார்க்காதேம்மா..."

"சரி... உன் முடிவை எப்பபத்தான் சொல்வேண்ணா.. எனக்கு காத்திருக்க பொறுமையில்லை.. ப்ளீஸ்..."



"இரு செளமி.. அவர்களைப் பார்த்ததே இன்னிக்கு தான். அதுக்குள்ளே சொல்ல முடியுமாடா... கொஞ்ச நாள் அவர்களோட பேசி... பழகிவிட்டு தான் சொல்ல வேண் டும்.. பழம் அதுவா கனிய வேண்டும்.. செளமி.. ஊதி... ஊதிப் பழுக்க வைக்க முடியாது.. தெரிஞ்சுக்கோ..."

"ப்ச்சு... எனக்கென்னவோ நீ தட்டிக் கழிக்கற மாதிரி தோணுகிறது..."

சிரித்தான் அவன்... "அய்யோ.. அப்படிச் செய்தால்.. நீ விட்டு விடுவாயா.. இதோ பார் செளமி.. நீ சொன்னவுடன் தலையாட்டினேன் இல்லையா.. கொஞ்சம் 'டைம்' கொடு.. என் முடிவைத் தெரிவிக்க.. ஆனால் ஒரு நிபந் தனை.. அதை என் வாயால் சொல்ல மாட்டேன்... நீயே அதை ஊகித்து கண்டுபிடிக்க வேண்டும்.. என்ன..."

"எதுக்கு..."

"எதுக்கா... என்னை இப்படி இக்கட்டில் மாட்டி வேடிக்கை பார்க்கிறாய் இல்லையா... அதுக்கு இந்த தண்டனை... யார்... யாராக இருக்கும் என்று மண்டை காய்ந்து நீ தவிக்கணும்..."

"ப்பூ... நான் சீக்கிரம் கண்டு பிடித்துவிடமாட் டேனாக்கும்."

"பார்க்கலாமே அதையும்..."

"சேலன்ஜ்?"

"சேலன்ஜ்!"

அண்ணனும் தங்கையும் கர்வத்துடன் பிரிந்தனர்.



# 3

அத்தை தன் அண்ணனிடம் சொல்வது செளம்யா வின் காதில் விழுந்தது.

"பிரதாப்... இன்றைக்கு செளம்யாவை நீதான் காலே ஜுக்கு கொண்டு போய் விடணும்.. டிரைவர் வர லேட் டாகும் போலத் தெரிகிறது..."

"ஹையா..." செளம்யாவின் உள்ளம் எம்பிக் குதித்தது.. இன்றைக்கு பார்த்து விடுகிறேன்... அய்யாவோட கவனம் யார் மேல் என்று.. ஏதோ கண்டுபிடிக்கவே முடியாது போல அல்லவா பெரிதாய் சவால் விடுகிறான்... ஒரு நாள்.. ஒரே நாளில் கண்டுபிடித்து சொல்லப் போகிறேன்.. அவன் முகத்தில் டன் டன்னாக அசடு வழியப்போகிறது

அந்த நினைப்பில் 'களுக்' என்று சிரித்தாள்.

கல்லூரி வாசலில்தான் தோழிகள் எனக்காகக் காத் திருப்பார்கள்.. அண்ணாவின் பார்வை யார் மீது ஆசையாய் தாவுகிறதோ அவள்தான் அவனது மனதிற்கு இனியவள்..

இதென்ன பிரம்ம ரகசியமா.. அசட்டு அண்ணா.. இரு.. இரு... சவாலில் ஜெயித்துக் காட்டுகிறேன்... அந்த நினைவில் மனம் உல்லாசமாய் சிறகடித்து பறந்தது...

ஆனால் ஒன்று மட்டும் நிச்சயம்.. என் தோழிகளில் ஒருத்தி தான் எனக்கு அண்ணியாகப் போகிறாள்.. அது யார்.. என்பது தான் சஸ்பென்ஸ்.. ஆகா... அது கூட 'திரில்'லாகத்தான் இருக்கிறது....

காரை ஓட்டும் அண்ணனை திரும்பிப் பார்த்தாள்.. மனதுக்குள் ஜம்பமாய் பேசினாள்.



'ஏய்... அண்ணா.. பார்.. இன்றைக்கே உன் வருங்கால மனைவி யார் என்று சொல்லிவிடுகிறேன்... அப்போ தெரிஞ்சுப்பே.. உன் தங்கையை...'

'கிறீச்' கார் 'சடன் பிரேக்'கில் நின்றது.

"நான்சென்ஸ்..." அடிக்குரலில் பிரதாப் உறுமினான். அதில் கோபம் தெரிந்தது.

என்ன ஆச்சு.. குழப்பத்துடன் அண்ணனைப் பார்த்தாள் செளம்யா.

"ஸ்டுபிட்... விழுவதற்கு இந்தக் கார்தானா கிடைத்தது" அவன் குரலில் எரிச்சல் தெரிந்தது.

'ஓ.. யாரோ வண்டியின் குறுக்கே வந்திருக்கணும். அதான்... அண்ணா இப்படிக் கத்துகிறான்.'

அண்ணா டிரைவ் பண்ணுவதில் வல்லவன் ஆச்சே... அதையும் மீறி இப்படி நடந்திருக்கிறது என்றால்... நிச்சயம் அது குறுக்கே வந்தவரின் தப்புதான்.

'யார் அந்த மடையன்' எட்டிப்பார்த்தாள்... பயத்தில் கண்கள் பெரிதாய் விரிந்திருக்க.. விபத்தில் அடிபட இருந்த அதிர்ச்சியில் இதழ்கள்.. பூத்துவிட்ட மலர் காற் றில் நடுங்குவது போல.. பிரிந்து நடுங்க... நின்றிருந்தது மடையன் இல்லை...

மதுரா.. அட... மதுராவேதான்...

"மதுரா..." செளம்யாவின் கூவல் அவளது காதில் விழவே இல்லை...

அவள்தான் அரண்டவளாய்.. கார் ஓட்டி வந்த ஆண் மகனின் சீற்றத்தைப் பார்த்து ஸ்தம்பித்து சிலையாகி நிற்கின்றாளே...

புத்தகங்களை இறுக்கி மார்புடன் அணைத்தபடி அவள் நின்றிருந்த கோலம் பரிதாபமாக இருந்தது. பிரதாபின் கோபமும் கரைந்துவிட்டது.

''இவளை உனக்குத் தெரியுமா...'' என்று தங்கையைக் கேட்டான்.

தலையசைத்தவள் வெளியே தலை நீட்டி... ''ஏய் மது...'' என்று சத்தம் போட்டு அழைத்ததும் மதுரா திரும்பிப் பார்த்தாள். அவள் முகத்தில் நிம்மதி தெரிந்தது.

''என்னாச்சுடீ... இங்கே ஏன் நிற்கிறே...''

''பஸ் பிரேக் டவுன் ஆகிவிட்டது. ரோடை கிராஸ் பண்ணப் போய்...'' அவளையும் அறியாமல் கண்கள் கலவரத்துடன் பிரதாப் பக்கம் தாவின.

''சரியான பயந்தாங்கொள்ளியோ...'' என்ற அண்ணனை முறைத்து விட்டு, தோழியிடம் சொன்னாள் சௌம்யா..

''ஓகோ... அதான் எங்கள் கார் முன் விழப்பார்த் தாயாக்கும். நல்லவேளை.. என் அண்ணா திறமையுடன் சமாளித்து 'பிரேக்' போட்டு நிறுத்தினான். வேறு யாராவது கத்துக்குட்டி டிரைவர் ஆக இருந்திருந்தால்.. உன்னை நேரே ஹாஸ்பிடலுக்குத்தான் எடுத்துப் போயிருக்க வேண்டி யிருக்கும்.. சரி.. காரில் ஏறு...'' என்றாள் சௌம்யா.

மீண்டும் பிரதாப்பை மிரட்சியுடன் பார்த்து விட்டு சொன்னாள் மதுரா...

''வேண்டாம்.. நான் பஸ்ஸில்...''

''பச்சு. என்னடீ.. இப்பவே 'லேட்'டாகி விட்டது 'பர்ஸ்ட்' 'பீரியட்' யாருன்னு தெரியுமில்லே... சிடுமூஞ்சி மேடம்.. ஏறு வண்டியில்.''



மறுக்க முடியாமல் வண்டியில் ஏற வந்தாள் மதுரா. கதவை எப்படித் திறப்பது.. முடியவில்லையே.. தயங்கி நின்றாள்.

உடலை நீட்டி கதவின் 'லாக்'கை நீக்கினான் பிரதாப்.

பின்சீட்டில் ஏறி அமர்ந்தாள் மதுரா... ஏனோ அவளால் இயல்பாய் இருக்க முடியவில்லை....

''அண்ணா.. இவள் என் உயிர்த்தோழி மதுரா...'' என்று அறிமுகம் செய்து வைத்தாள் சௌம்யா.

''யார்... பட்டியலில் இருந்து நீக்கினாய் என்றாயே அவளா... பயந்தாங்கொள்ளி போலத் தெரிகிறாள்'' அடிக்குரலில்.. கிசு கிசுப்பாய் வினவினான் அவன்.

''உஷ்... அண்ணா...'' என்று அதட்டினாள் தங்கை.

அவன் புன்சிரிப்புடன் மதுராவிடம் சகஜமாய் பேசத் தொடங்கினான்.

''மிஸ் மதுரா.. உன்னைப் பற்றி என் தங்கை நிறைய சொல்லி இருக்கிறாள். உன்னை சந்தித்ததில் மிகவும் மகிழ்ச்சி...''

சம்பிரதாய வார்த்தைகளா... மரியாதைக்காக பேசியதோ... குனிந்த தலையுடன் யோசித்தாள் மதுரா.

சௌம்யா பாடங்களைப் பற்றி பேசினாள்.. மதுரா அதிகம் பேசாமல்... ஒன்றிரண்டு வார்த்தைகள் மட்டுமே உதிர்த்தாள்... ஒவ்வொரு தடவையும்.. வாய் திறக்கும் போது அவளது விழிகள் பயத்துடன் பிரதாப்பைப் பார்த்து மீண்டன... ஏனோ உள்ளுக்குள் நடுங்கியது அவளுக்கு...

பிரதாப்பிற்கு உள்ளூர சிரிப்பு... ஏன் இப்படி மிரள் கிறாள் இந்தப் பெண்... என்ன ஆயிற்று இப்போது... ஏதோ... இந்தக் காரில் ஒரு சிம்மத்துடன் பயணம் செய்வது போல் அல்லவா தவிக்கிறாள்.. நான் என்ன அவளை





அடித்து தின்றுவிடவா போகிறேன்... ஒருவேளை இதற்கு முன் இவள் ஆண்பிள்ளையைப் பார்த்ததே இல்லையா.. அவர்களோடு பேசியதே இல்லையா... இந்தக் காலத்திலும் இப்படி ஒருத்தியா! சரியான கார்ட்டூன்!

'ரியர் வ்யூ' கண்ணாடியில்... அவளது மிரட்சியை.. நெருப்பு வளையத்திற்குள் சிக்கிய பிராணியைப்போல தவிப்பதைப் பார்த்து ரசித்தான்.. என்னதான் செய்கிறாள் பார்ப்போம்... அவனுக்கு அது வேடிக்கையாக இருந்தது.

மதுராவிற்கு இதயம் அடித்துக் கொண்டது.. கண்களை வெளியே அலைய விட்டாலும்.. மனம் இன்னும் பட படத்துக் கொண்டிருந்தது. கதவின் ஓரத்தில் ஒட்டிக் கொண்டு அமர்ந்திருந்தாள்...

கல்லூரி வந்ததும் நிம்மதி பெருமூச்சாய் வெளிவந்தது. கதவை திறந்து இறங்கியவள் 'தாங்க்ஸ்' என்று வாய்க் குள்ளே முணுமுணுத்துவிட்டு... விட்டால் போதும் என் பது போல.. கூண்டைத் திறந்ததும் நாலுகால் பாய்ச்சலில் ஓடும் விலங்கைப் போல விரைந்து சென்றாள் மதுரா.

அவளை விநோதமாய் பார்த்தான் பிரதாப்... விசித்திர மான பெண்தான்...

மதுராவின் பயம்.. அதனால் வந்த நடுக்கம் அப்படியே இருந்தது...

மீண்டும் மீண்டும் பிரதாப்பின் முகம்.. களிப்புடன் 'நான்சென்ஸ்' என்று சொன்னவிதம் நினைவுக்கு வந்து அவளை படபடக்க வைத்தது.

''ஹாய்''

''ஹாய்''

சௌம்யாவைப் பார்த்து கவிதாவும் ஹேமாவும் கூவி னாலும்... அவர்களது பார்வை பிரதாப்பின் மேல்தான்.



ஆ... அண்ணாவை கவனிக்க வேண்டும்.. அவன் யாரை ஆசையுடன் பார்க்கிறான் என்று.. ஆவலாய் திரும்பிப் பார்த்த சௌம்யாவிற்கு படு ஏமாற்றம்....

அழகான 'கூலிங் கிளாஸ்' அதுவும் அடர்ந்த கறுப் பில்... அவனது கண்களை மறைத்துக் கொண்டிருந்தது.

கில்லாடி தான்... நான் கண்டுபிடிக்க கூடாது என்றா.. அழுத்தக்காரன்... இதற்காகவே கொண்டு வந்தானோ... பற்களைக் கடித்தாள் அவள்.

'ஏய்... அண்ணா.. இப்படி காலைவாரி விட்டாயே... இருக்கட்டும். எப்படியும் ஒரு நாள் சிக்கிக் கொள்ளத்தான் போகிறாய்.. பாரேன்' உள்ளுக்குள் கறுவிக் கொண்டாள் தங்கை.

பிரதாப் கையசைத்துவிட்டுப் புறப்பட்டதும்... தோழிகள் நால்வரும் வகுப்பு நோக்கி நடந்தனர்.

''அதுசரி.. ஏன் அந்தப் பெண் அப்படி நடுநடுங்கு கிறாள்'' பிரதாப் கேட்டான்.

விரல் நகங்களுக்கு பூசிய சாயத்தை அழகு பார்த்த வாறு ''எந்தப் பெண் அண்ணா?'' என்று கேட்டாள் சௌம்யா.

''அதான்... நம் கார்முன் விழப்பார்த்ததே... ஒரு பயப் பிராணி.. அந்தப் பெண்தான்.. எதற்கெடுத்தாலும் மருண்டு மிரள்கிறாளே... அத்தனை பயந்தாங்கொள்ளியா அவள்...''

''பாவம் அண்ணா.. பாட்டி ரொம்பக் கண்டிப்பு... தாயில்லாதவள்... சித்தி.. அம்மாவின் தங்கை... யாரு டனோ ஓடிப் போய்விட்டதால்.. அந்த ஆத்திரத்தில் வந்த கண்டிப்பு.. இவள் மேல் பாய்ந்தது. முதலில் கார் முன் விழப் பார்த்தோமே என்ற நடுக்கம்... அப்புறம் உன் காரில் செல்வதை யாராவது பார்த்துவிட்டுப் பாட்டியிடம் சொல்லிவிட்டால் என்ற அச்சம்...''

"இவளுக்குத் தானே மாமா பையனை நிச்சயத்திருக கிறது என்று சொன்னே... அய்யோ பாவம்.. இவளோட அச்சத்தையும் பயத்தையும் போக்கறதிலேயே இரண்டு வருடங்கள் கழிந்துவிடும் அவனுக்கு... படித்து முடித் ததும் கல்யாணமாக்கும்..."

"அப்படித்தான் இருக்கும்.. ஆனால் ஒன்று அண்ணா.. குடும்பத்துக்கு ஏற்ற பெண்.. அவளோட அடக்கம்... பொறுமை.. நிதானம்.. நிச்சயம் கட்டிக் கொண்டவனுக்கு நல்ல மனைவியா இருப்பாள்... அவன் ரொம்பக் கொடுத்து வச்சிருக்கணும்..."

"எவன்..."

"அவளது மாமா பையன்தான்... கிருஷ்ணான்னு பேர். மும்பாயில் இருக்கிறான்."

அந்த சமயத்தில் சுந்தரம் வந்தார்.

"என்னடா... எப்போ எக்ஸாம்... படிக்க ஆரம்பிச்சுட் டியா..." என்று மகளை விசாரித்தார்.

"அப்பாடா... இப்பவாவது பிள்ளைகளை விசாரிக்கத் தோன்றியதே... சந்தோஷம்தான்" கையில் காபியுடன் வந்தாள் துர்கா.

"நீ இருக்கும்போது எனக்கு என்ன கவலைக்கா... குழந்தைகளின் பொறுப்பை உன்கிட்டே தானே விட்டிருக் கிறேன்."

"அப்படி சொல்லிட்டு இருந்துட முடியுமா.. குழந்தை கள் வளர்ந்து இப்போ கல்யாண வயசுக்கு வந்தாச்சு அதை கவனித்தாயா... சுந்து"

"கவனிக்காமல் என்னக்கா... இந்த வருடம் படிப்பு முடியட்டும்... திருமணத்தை 'ஜாம்' 'ஜாம்' என்று



நடத்திடலாம். எனக்குத் தெரிந்து எத்தனையோ நல்ல குடும்பத்து பையன்கள் இருக்கிறார்கள் அக்கா.. பார்த்து முடிச்சிடலாம்."

"ஏன் 'டாட்'... நம் அரவிந்தன் இருக்கிறானே..." என்று நினைவூட்டினான் பிரதாப்.

"அதானே.. அவனை எப்படி மறந்தேன்... சரி... அவன் வரட்டும்... ஆமாம்... எப்போ அவன் இந்தியா திரும்பு கிறான்" என்று கேட்டார் சுந்தரம்.

"இன்னும் ஒன்றரை மாதங்களில் டாட்..."

"அப்போ... வந்ததும் பேசி முடிச்சிடலாம்.. என்னடா... உனக்கு அரவிந்தைப் பிடித்திருக்கிறது தானே..." மகளின் தலையை வருடியவாறு கேட்டார் தந்தை.

வெட்கத்துடன் தலையசைத்தாள் அவள்.

உடனே சந்தர்ப்பத்தை நழுவவிடாமல் சொன்னாள்.

"அப்பா... அண்ணாவிற்கு கல்யாணம்..."

"அவனுக்கும் பண்ணிவிட வேண்டியதுதான்..."

"அதான்ப்பா... அண்ணாவிற்கு பெண் பார்க்கும் பொறுப்பு என்னுடையது..."

"அடேயப்பா.. அவ்வளவு பெரிய மனுஷியாயிட்டியா நீ.. அக்கா.. பார்த்தாயா... நமக்கு வேலை வைக்கவில்லை நம்ம பசங்க..."

"இந்த காலத்துப்பிள்ளைகள்டா... வேகம் அதிகம் தான்..." துர்கா சொல்லவும்.. சிரித்துக் கொண்டு சென்றார் சுந்தரம்...

துர்கா சௌம்யாவிடம் வினவினாள்.

"ஆமாண்டி.. பெரிய மனுஷி.. உன் அண்ணாவுக்கு எந்தப் பெண்ணைப் பார்த்திருக்கே..."



"நம் ஹேமாவும்.. கவிதாவும் தான் அத்தை.. இரண்டு பேரில் ஒருத்திதான் நம் வீட்டுக்கு வருகிறவள்.. அதாவது உங்க வருங்கால மருமகள்."

"புத்திசாலிதான்... கரக குதிரைகள் மாதிரி அலங் காரமாய் சுத்தும் அந்த நாகரீகப் பெண்களா.. எனக்கு ஒத்துவராதும்மா.. ஏய்.. பிரதாப்... இவப் பேச்சைக் கேட்டு பள்ளத்தில் விழுந்திடாதே... அவங்களுக்கு மேக்கப் செட்டும்.. 'டிப் டாப்' உடைகளும் வாங்கவே உனக்கு சரியாக இருக்கும்.. தெரிஞ்சுக்கோ..."

"அப்படி சொல்லுங்க அத்தை.. என்னைப் போட்டு கழுத்தறுக்கிறாள்..." தங்கையைப் பார்த்து 'எப்படி' என்பது போல கண்ணடித்தான்.

"என்ன அத்தை.. அண்ணா.. அமெரிக்க 'ரிடர்ன்ட்' அவனுக்கு மனைவியா வருகிறவள் நாகரீகமாக இருக்க வேண்டாமா... சொல்லுங்க..."

"என்னடீ.. அமெரிக்கா... டெல்லிக்கு ராஜாவானாலும் தாய்க்கு அவன் பிள்ளைதான்... தெரிஞ்சுக்கோ... அவன் பிறந்து வளர்ந்தது இங்கேதான்... என்னவோ வேறு நல்ல பொண்ணுங்க இல்லாத மாதிரிதான்..."

"ஓ! இருக்காங்களே.. ஆனா.. அவங்க. என் தோழிகள் இல்லையே அத்தை... உங்க மனசுக்கு பிடிச்ச பொண் ணுன்னா மதுராதான்... என்ன செய்ய... அவளுக்குத் தான் கல்யாணம் 'ஃபிக்ஸ்' ஆகிவிட்டதே..."

"மதுராவா... யாரு.. பாட்டியோட வளர்ப்பில் அடக்க ஒடுக்கமா இருக்கிற அந்த பொண்ணா... அவளை சொல்லு.. நான் ஒத்துக்கறேன்.. வீட்டுக்கு ஏத்த மகா லட்சுமி... எந்த வீட்டுக்கும் குத்துவிளக்கா இருப்பா...



மத்ததுகள்.. கொள்ளிக்கட்டைகள்... விடு..." சலித்த குரலில் முடித்தாள் அத்தை.

"அத்தை... உங்களுக்குப் பிடிக்காத பெண் எனக்கும் வேண்டாம்.. ஸோ... அவர்களையும் பட்டியலிலிருந்து நீக்கி விடுவோமா..." பிரதாப் சொன்னதும்...

"அதெப்படி.. அவர்களோடு பழகாமலே சொல்லலாம் என் தோழிகளைப் பற்றி எனக்கு நல்லாத் தெரியும். இதோ பார் அண்ணா.. கொடுத்த வாக்கை மீறுவது அழகு அல்ல.. ஆமாம்..." என்று கோபத்துடன் சொன்னாள் சௌம்யா.

"அத்தை ஒப்புக் கொள்ளலையே சௌமி.."

"சரிம்மா.. அந்தப் பெண்கள் நல்ல பெண்கள் என்றால் பார்க்கலாம்..." என்று அத்தை ஒப்புக் கொண்டாள்.

சௌம்யாவின் முகம் பூவாய் மலர்ந்தது.

"அவங்க நல்லப் பெண்கள்தான் என்பதை நிரூபித்துக் காட்டறேன் அத்தை.... பாருங்க..."

உறுதியான குரலில் சௌம்யா சொன்னாள். அப் போதே அவள் மனதுக்குள் ஒரு உத்வேகம் வந்தது. இதில் ஜெயித்துக் காட்ட வேண்டும்.

அதற்கு என்ன செய்யலாம்... அப்போதே யோசிக்க ஆரம்பித்தாள்.

## 4

சௌம்யா சவாலாய் சொன்னாலும்.. மனசுக்குள் குழப்பமும்... கலக்கமும் இருக்கத்தான் செய்தது.

சௌம்யாவின் மனக் கணக்கு அவளது தோழிக...
அறியாதது.

பிரதாப்பின் அழகில் தோழிகள் இருவருமே கவரப்ப...டிருப்பது அவளுக்கு தெரிந்ததுதான்.. ஆனால்.. அவ...களில் ஒருத்திதான் தங்கள் வீட்டிற்கு வரப்போகிறவ... என்பது அவர்களுக்கு தெரியக் கூடாது...

தெரியாமலே காரியத்தை நடத்த வேண்டும்...

சிலமணிநேரம்.. அத்தையும் அண்ணாவும் சிநேகி...களுடன் செலவழித்தால் போதும்... அவர்களைப் பற்... நல்லெண்ணம் பிறக்கும்...

அத்தை இந்த வீட்டின் பிரதம மந்திரியாயிற்றே.. ய... அத்தையின் மனதில் இடம் பிடித்தாலும் வெற்றிதா... அடுத்து அண்ணா.. அவனையும் வசீகரிக்க வேண்டு... நடக்குமா... என்ன செய்யலாம்...

அதற்கு ஒரு நல்ல சந்தர்ப்பமும் வாய்த்தது... அ... பிரதாப்பின் பிறந்த நாள்!

அதை சாக்காய் வைத்து இருவரையும் இங்கே வ...வழைத்தால்.. இது நல்ல யோசனையாகத் தெரிகிறதே!

இந்தக் காலத்துப் பெண்கள் வெறும் அலங்கார பொ...மைகள்.. எதுக்கும் பிரயோசனமில்லை என்று நினைக்கு... அத்தையோட தப்பான அபிப்பிராயத்தை மாற்றவேண்...டும்.. ஆம்.. அதுதான் சரி.

பிரதாப்பின் பிறந்தநாளை வெகு விமரிசையா... கொண்டாட நினைத்தார் சுந்தரம்... இரண்டு வருட...களுக்குப் பிறகு... அதுவும் அமெரிக்காவில் கற்... விட்டு வந்த பிறகு கொண்டாடப்படும் வைபவம் ... அதனால் தான் அதை அமர்க்களமாய் நடத்த விரும்பின...



பிரதாப் தன் நண்பர்களை அழைத்திருந்தான். சௌம்யாவும் தன் தோழிகளுக்கு சொல்லிவிட்டாள்... தப்பாமல் கண்டிப்பாய் வரவேண்டும் என்று.. கசக்குமா அவர்களுக்கு.. 'ஓ!' என்று சந்தோஷமாய் தலையாட்டினர் கவிதாவும் ஹேமாவும்.. பிரதாப்பை சந்திக்க ஒரு சந்தர்ப்பம் வாய்த்ததை நழுவ விடுவதா...

ஆனால்.. பாவம்.. மதுராவுக்குத்தான் இயலவில்லை... பாட்டி நிச்சயம் அனுமதிக்க மாட்டாள் தான்...

தவிர.. மதுராவிற்கும் செல்லப் பிடிக்கவில்லை...

அங்கு வருகிறவர்கள் அனைவரும் பணக்காரர்கள்... பகட்டாய் தங்கமும் வைரமும் மின்ன வருவார்கள்.. அவர்கள் முன்னே.. ப்ச்சு.. வேண்டவே வேண்டாம் என்று எண்ணினாள்... அதுமட்டுமா.. பிரதாப் இருப்பானே.. விழாவின் நாயகன் அவன்தானே!

நினைக்கும் போதே.. கடுகடுப்புடன் 'நான்ஸென்ஸ்' என்று சுளித்த முகம்தான் ஞாபகத்திற்கு வந்தது.. அந்த நினைப்பில் உடம்பு பதறியது...

தோழியிடம் நாசுக்காய் மறுத்துவிட்டாள்.

சௌம்யா பெருமூச்சு விட்டாள்.. இனி அவள் மனதை மாற்றவே முடியாது.

சரி.. இப்போது இது முக்கியம் இல்லை.. கவிதாவும், ஹேமாவும் வருவதுதான் முக்கியம்...

அவர்களை சேலையில் வரச் சொல்ல வேண்டும்.. அதுதான் அத்தைக்குப் பிடிக்கும்...

காரகக் குதிரைகளாமே.. சேலையில் பார்த்துவிட்டுச் சொல்லட்டும்...

ஆனால் தோழிகள் இருவரும் முகம் சுணங்கினார்கள்.



"என்னடீ இது.. புது கண்டிஷன்.. அதுவும் விசித்திரமான கண்டிஷன்.. ஃபங்க்ஷனுக்கும்.. சேலைக்கும் என்ன சம்பந்தம்... எங்களுக்கு சேலைக்கட்டிப் பழக்கமில்லைடீ..."

"சரி.. சுரிதாரில் வந்தால் எங்களை சேர்க்கமாட்டாயா சௌமி.. விரட்டிவிடுவாயாக்கும்..." கிண்டலாய் கேட்டாள் ஹேமா.

"அதுக்கில்லைடீ.. என் அத்தை ஆசைப்படறாங்க.. நான் அன்னிக்கு சேலைக் கட்டணுமாம்.. நீங்களும் கட்டிக் கொண்டு வந்தால் ஒரே மாதிரி இருக்குமேன்னு தான் சொல்றேன்..." பூசி மெழுகிப் பேசினாள் சௌம்யா. உண்மையைச் சொன்னால் குதித்துக் கொண்டு சேலையில் வருவார்கள் தான்... ஆனால் சொல்ல முடியாதே.. உங்களில் ஒருவர் தான் என்று எப்படிச் சொல்வது...

அரைமனதுடன் அவர்கள் சம்மதித்தார்கள்.

மாடர்னாய் உடையுடுத்தி பிரதாப்பை கவரவேண்டும் என்ற அவர்களது ஆசை நிராசையானது.

பிரதாப் மேனாட்டுக்கு சென்று வந்திருப்பவன்.. புடவைக்கட்டிக் கொண்டு நின்றால் ரசிப்பானா.. திரும்பியும் பார்க்க மாட்டானே என்று அங்கலாய்ப்பு அவர்களுக்கு...

ஆனால் சௌம்யா சொன்னதற்காக கட்டிக் கொண்டு தான் போக வேண்டும்.. சலிப்புடன் நினைத்தனர் தோழிகள் இருவரும்.

சிநேகிதிகள் மூவரும் சேலையுடுத்தி.. அலங்கார பொம்மைகளாய் இருந்தார்கள்.

சௌம்யா... அத்தையின் ஆசைப்படியே மஞ்சள் நிற... அரக்கு சரிகை கரை வைத்த 'பின்னி' பட்டை உடுத்தி



யிருந்தாள்...பொருத்தமான சோளியுடன்.. கூந்தலை மேல் எடுத்து வாரி.. அழகாய் ஹேர்ப்பின் குத்தியிருந்தாள். நீண்ட கூந்தலை தழைய பின்னலிட்டு நுனியில் பட்டுக் குஞ்சலம் கட்டி.. தலைநிறைய மல்லிகையைச் சூடி... உற்சவ சிலையாய் தெரிந்தாள்.

காதுகளில் ஜிமிக்கி நர்த்தனமாடின...

அவளைப் பார்த்து ரசித்த அத்தை அன்புடன் அவளை அணைத்து உச்சி முகர்ந்தாள்...

ஹேமாவும்.. கவிதாவும் புடவையில் ஆளே மாறிப் போயிருந்தார்கள்.

ஹேமா கறுப்பு நிறத்தில் சரிகை இழையோடிய புடவையும் அதே நிற ரவிக்கையும் அணிந்திருந்தாள்.

கூந்தலை எடுத்து சீவி கிளிப்பில் அடக்கி.. காதோரத்தில் வெறும் ஒற்றை சிவப்பு ரோஜா மட்டும் செருகி இருந்தாள்.

கவிதா அடர்த்தி பச்சை நிற.. காஞ்சிப்பட்டில் வந்திருந்தாள்... தலைமுடியை கொண்டையாய் முடித்து அதில் அலங்கார மணிகளைப் பதித்திருந்தாள்..கழுத்தில் அணிந்திருந்த மரகப் பச்சைக்கல் அட்டிகை அவளது அழகைக் கூட்டிக் காட்டியது.

அவர்களைப் பார்த்துவிட்டு மூக்கின் மேல் விரலை வைத்தாள் அத்தை.

அடடா... புடவையில் என்னமாய் இருக்கிறார்கள்.. தங்கப் பதுமைகளைப் போல... சௌமி சொன்னதும் சரிதான்...

பார்த்ததை வைத்து எடை போடுவதும் தப்புதான்.. என்னதான் இருக்கட்டும்.. பெண் பிள்ளைகளுக்கு

சேலைதான் அழகு... அதில்தான் அம்சமாய் தெ கிறார்கள்...

மனதுக்குள் அதிசயித்தாள் அத்தை...

அத்தையின் முகபாவத்திலிருந்து அவருடைய ம நிலையைப் புரிந்து கொண்ட சௌம்யா.. தன் தோழி களுக்கு நன்றி உரைத்தாள்.

"நான் சொன்னதற்கு மதிப்பு கொடுத்து சேலையில் வந்ததற்கு தாங்க்ஸ்டீ.. எனக்கு ரொம்ப சந்தோஷம இருக்கு.. அப்புறம்... இன்னொரு விஷயம்.. அத்தைக்கு உதவியா நான் வேலை செய்யறப்போ... நீங்களும் வந்து ஒத்தாசை செய்யணும்.. என்ன..." என்றாள் அவள்.

"ஓ!.. ஷ்யூர்!" என்ற தலையசைத்தனர் இருவரும்.

அவர்களை பிரதாப்பிடம் அழைத்துச் சென்றா சௌம்யா.

"அண்ணா!"

நண்பர்களுடன் பேசிக் கொண்டிருந்தவன் தங்கையின் குரல் கேட்டுத் திரும்பினான்.

அவன் மட்டுமா.. அவனுடைய நண்பர்களும் தான்.

அவர்களின் கண்கள் விரிந்தன.. முகத்தில் பிரமிப்பு வாவ்! யார் இந்த அழகுப் பதுமைகள்!

உயிர் பெற்று எழுந்து வந்திருக்கும் கோவில் சிற் பங்களா... இல்லை.. ரவிவர்மாவின் ஓவியங்களா!

அல்லது... சுரலோகத்திலிருந்து வழிதவறி வந்து விட்ட தேவக்கன்னிகைகளா...!

கண்களைச் சிமிட்டவும் மறந்து நின்றிருந்தனர் அந்த வாலிபப் பட்டாளம்...



சௌம்யா பிரதாப்பை உற்று நோக்கினாள்... அவன் யாரை ரசிக்கிறான்.. யாரைப் பார்த்து மயங்கி நிற்கிறான்.. ஊகூம்.. எந்த சலனமும் இல்லை.. கல்லுளிமங்கன்.. சே!

ஹேமா மயக்கும் புன்னகையுடன் "மேனி மோர் ஹேப்பி ரிடர்ன்ஸ் ஆஃப் த டே..." என்று வாழ்த்து கூறி.. அழகான பூங்கொத்தை தந்தாள்.

"தாங்க்யூ" என்று வெகு சாதாரணமாகத்தான் அதை வாங்கிக் கொண்டான்...

கவிதா தன் பங்கிற்கு வாழ்த்துடன் 'பொக்கே'யை நீட்டியபோதும் அதே புன்னகைதான்...

கவிதா தான் தேன்குடித்த நரியைப் போல கிறங்கி அவனைப் பார்த்தாள்...

உண்மையில் அன்றைக்கு பிரதாப் இளம் பெண்களின் இதயங்களைக் கிள்ளியெடுத்து தன் பாக்கெட்டில் போட்டுக் கொள்ளும் அளவில் வெகு அழகாய்.. வசீகர மாய் இருந்தான்.

'ரெமாண்ட்ஸ்' சூட்டில் அவனது கம்பீரம் பலமடங்கு கூடித் தெரிந்தது. செல்வந்தர்களுக்கே உரிய ராஜகளை யுடன் வளைய வந்தான்.

சௌம்யா தன் அண்ணனை பெருமிதத்துடன் பார்த் தாள். ஆனால் அவனது உள்ளத்து ரகசியத்தை அறிய முடியவில்லையே...

இருவரிடமும் ஒரே மாதிரிதான் பேசுகிறான்.. பழகு கிறான்... தன் நண்பர்களுக்கும் அறிமுகப்படுத்துகிறான்...

ஆனால் ஸ்பெஷலாய் யாரை...?

பற்களைக் கடித்தாள் அவள்.. இப்படி தவிக்க வைக் கிறானே. கேக் வெட்டி.. 'ஹேப்பி பர்த்டே' என்று ராகம்



பாடியதும் உணவு பதார்த்தங்களைப் பரிமாற ஆரம்பி தனர் பரிசாரர்கள்.

வந்திருப்பவர்களின் தேவைகளைக் கேட்டு.. குளிர் பானம்... காபி.. பாதாம்பால் என்று பார்த்து வி யோகித்து.. இன்முகத்துடன்... இனிய புன்னகையுடன் போதுமா... வேண்டுமா என்று உபசரித்து.. பம்பரமாய் சுழன்றார்கள் மூன்று தோழிகளும்...

அட! இவர்களையா பரிகசித்தோம்... இவர்களை லாயக்கில்லை என்று நினைத்தோம்... அத்தை மலைத்து போனாள்.

அதைப் பார்த்து ரசித்தாள் சௌம்யா..

ஓகே! அத்தையை நம் வழிக்கு கொண்டு வந்தாயிற்று இனி... கவலை இல்லை.

அண்ணன்...?

அவனை நினைத்த போது எரிச்சலாக வந்தது.

என்ன ஆச்சு அவனுக்கு.. கன்னாபின்னா என்று தி வேண்டும் போல வந்தது.. கஷ்டப்பட்டு அடக்கி கொண்டாள். அங்கிருந்த அனைவரும்.. முக்கியமா இளம் வாலிபர்கள் கவிதாவையும் ஹேமாவையு விழுங்குவதுபோல் பார்ப்பதை உணர்ந்தாள்...

ஆனால்.. பிரதாப் அவர்களை அப்படிப் பார்க்கவி லையே.. அதுதான் ஏமாற்றம்...

கவிதாவிற்கும் ஹேமாவிற்கும் தான்...

தாங்கள் நினைத்து வந்தது என்ன.. ஆனால் நடக்கிறது என்ன... சே...

பிரதாப்பின் நேர்பார்வை தம் அழகை ரசிக்கும் ஆசையுடன் வந்தவர்களுக்கு.. ஒரு கடைக்கண் பார்வை யும் இல்லையே.. மனம் வெறுத்துப் போனார்கள்.



அதே சமயம் கோபமும் வந்தது.

தன்னை விட்டால் இந்த உலகில் ஆணழகன் வேறு யாருமில்லை என்ற கர்வம்.. அகம் பிடித்தவன்.. கோபத் தில் பிறந்த ஆத்திரத்துடன் புறப்பட்டனர்.. பாவம்!

## 5

சௌம்யா தன் அத்தையிடம் வெகு ஜம்பமாய் கேட்டாள்.

"அத்தை... இப்ப என்ன சொல்றீங்க.. என் சிநேகிதி களைப் பற்றி..."

"நீ சொன்னது உண்மைதான் சௌமி.. நான்தான் தப்பா நினைச்சுட்டேன்... பொறுப்புன்னு வந்தா.. நல்ல பெண் கள்தான்னு புரிஞ்சுக்கிட்டேன்... அதுசரி.. உன் அண்ணா ஒப்புக் கொள்ளணுமே.. அவனுக்கு யாரைப் பிடிச் சிருக்கோ.. தெரியல்லையே சௌமி.. அவனும் எதுவும் சொல்லாமல் 'கம்'முன்னு இருக்கான்.. என்ன செய்யப் போறேனோ..."

"அதுதான் எனக்கும் தெரியலே அத்தை.. நீங்க சொல்வீங்களே அமுக்குனி... கல்லுளிமங்கன்னு.. அது சரியா அவனுக்குத்தான் பொருந்தும். என் சிநேகிதி களுக்கு என்ன குறை அத்தை.. அழகில்... படிப்பில்... குணத்தில் அண்ணாவிற்கு ஏற்றவர்கள்.. வசதியிலும் நமக்கு இணையானவங்கதான்.. நாம் 'ஓகே'ன்னு சொல் லிட்டா அப்பாவும் சம்மதித்து விடுவார்.. இல்லையா அத்தை.."

''விடும்மா.. நேரம் வந்தா எல்லாம் நல்லபடிய நடக்கும்.. சரி.. இந்த விஷயத்தையே யோசிச்சுட்டு இரு காதேம்மா.. அப்புறம் தேர்வில் கோட்டை விட்டுட போறே... இது இறுதி வருடம் வேறு...''

''அந்தக் வேலையே வேண்டாம் அத்தை. நிச்சய 'பர்ஸ்ட்' க்ளாஸ் தான்...'' நம்பிக்கையுடன் பதில் தந்தா சௌம்யா.

பிரதாப் எப்போது சிக்குவான்.. பிடித்து உலுக்குவோ என்று காத்திருந்தாள் சௌம்யா.

அவனும் அகப்பட்டு விட்டான்.

பிலுபிலுவென்று சண்டை போட்டாள் தங்கை.

''ஏய்.. அண்ணா.. ஆனாலும் உனக்குக் கொழுப்பு அதிகம் தான்... இப்படியா... என் சிநேகிதிகளை உதாசீன பண்ணுவே.. இதோ பார்.. அவர்களில் ஒருத்திதான் உ எதிர்கால மனைவி... அதை ஞாபகம் வச்சுக்கோ...''

''அதை எங்கே மறக்க விடுகிறாய்...'' அலுத்த குரலி சொன்னான் அவன்.

''தெரிகிறது இல்லையா... பின்னே அவர்களிடம் முக கொடுத்து பேசாமல் ஏன் ஒதுங்கிப் போனேயாம். பாரண்ணா.. இப்படியே செய்து.. திடீர் என்று வேறே யாரையோ கட்டிக்கப் போகிறேன்னு சொன்னால். அப்புறம் உன்கிட்டே பேசவே மாட்டேன்.. ஆமாம்...''

''அப்புறம்...''

''உன் அரவிந்தையும் கல்யாணம் பண்ணிக்க மாட்டேன். தெரிந்து கொள்...''

''போச்சுடா...''



''இது வேடிக்கைப் பேச்சு இல்லைண்ணா... 'சீரியஸா' தான் சொல்றேன்... என் தோழிகளிடம் என்ன குறைக் கண்டே..... ம்ம்...''

''பொறு.. சௌமி.. பொறு.. இன்னும் 'டைம்' வேணும்டா. இரண்டு மூன்று சந்திப்பில் ஒருவேளை காதல் வரலாம்... கதையில் தான் லவ் அட் ஃபர்ஸ்ட் என்றெல்லாம் வரும்.. நிஜவாழ்க்கையில் அது நடக்காது சௌமி.. அதெல்லாம் உடான்ஸ்...''

சௌம்யாவுக்கு குழப்பமாக இருந்தது... இவனை நம்புவதா கூடாதா... சுத்தமாய் நிம்மதியை இழந்தாள்.

''உண்மையைதான் சொல்கிறாயா அண்ணா...''

''சத்தியமாதான் சொல்றேன் சௌமி... உன் வழிக்கு வருகிறேன்.. உன் தோழிகளில் ஒருத்தியை ஏற்றுக் கொள்கிறேன். ஆனால் எனக்கு அவள் மீது காதல் வரவேண்டும்.. புரிந்ததா...''

''நிச்சயம் வரும்.. எனக்கு அதில் நம்பிக்கை இருக்கு அண்ணா...''

''அப்போ விடு.. சந்தோஷமா இரு.. எனக்குள் காதல் பூத்ததும் சொல்கிறேன்.. நோ.. நோ.. என் வாயால் சொல்ல மாட்டேன்.. அன்றைக்கு சொன்ன மாதிரி என் மனதில் இடம் பிடித்தவள் யார் என்று நீயே ஊகித்து அத்தையிடம் சொல்...'' சிரித்துக்கொண்டே சென்றவனை வெறித்துப் பார்த்தாள் சௌம்யா. அண்ணா.. என்னை ஏமாற்றமாட் டாயே என்று உள்ளுக்குள் புலம்பினாள் தங்கை.

அவளுள் யோசனை பளிச்சிட்டது...

பிக்னிக்! ஏன் கூடாது... அது அடுத்த சந்திப்பாய் அமைந்தால்.. கடவுளே.. கொஞ்சம் கருணை வைத்து..



என் அண்ணாவை.. அவனோட மனதை மாற்றே ப்ளீஸ்... மானசீகமாய் இறைவனை வேண்டினாள்.

இயற்கை அன்னை... புன்னகை பூத்து.. தன் இ கரங்களையும் நீட்டி வரவேற்றாள்...

சுற்றிலும் பச்சை பசேல் என்ற பசுமையான சூழ குளுகுளுவென்று வீசும் இளங்காற்று.. குயில்களி இனிய கானம்.. கிளிகளின் கொஞ்சல்... அணில்களி கண்ணாமூச்சி விளையாட்டு... அனைத்தையும் ரசித்து கொண்டு நடந்தனர்... கண்களுக்கு குளிர்ச்சி.. காதிற் இன்பம்.. மனதிற்கு உற்சாகம்.. நாசிக்கு இனிய மண மேனிக்கு இதம்.. சொல்ல வேண்டுமா... குதூகல தான்..

ஆனால் அதற்காக மட்டும் வரவில்லையே..

பிரதாப்பை நோட்டமிட்டு.. அவனது மனதை அறிந் கொள்ளும் முயற்சியாய் அல்லவா இந்த 'பிக்னி ஏற்பாடு...

பாவம்.. அண்ணா.. அது புரியாமல் நிஜமாகவே தங்கை ஆசைப்பட்டாள் என்று குஷியாய் கிளம்ப விட்டான்... அதுவும் தன் நண்பர்களுடன்...

தந்தையை வருந்தி அழைத்தாள் சௌம்யா.. ஆனா அவர் மறுத்துவிட்டார்.. அவருக்கு தொழில் உயிர் மூச்ச காலம் பொன்னானது என்பது அவரது கணிப்பு.. பிரதா பும் தன் வழியைப் பின்பற்றி நடக்க வேண்டும் என நினைப்பவர்.

ஆனால் இப்போதுதான் படிப்பு.. பயிற்சி என்ற முடித்து திரும்பி வந்திருக்கிறான்... கொஞ்ச நாள் ஜாலி யாக இருக்கட்டும்.. அப்புறம் இருக்கவே இருக்கு-



பிஸினெஸ்... ஆபீஸ் என்ற பரபரப்பு.. என்ற எண்ணத்தில் தடை சொல்லவில்லை.

சிறுசுகளுக்கு துணையாய் அத்தை வேறு..

இந்தத் தடவை பிரதாப் கவிதாவிடமும்.. ஹேமாவிட-மும் கலகலப்பாய்.. சிரித்துப் பேசினான்.

அதில் இருவருமே மெழுகாய் கரைந்து விட்டனர்.

அவனது சிரிப்பில் கட்டுண்டவர்கள்.. மகுடி முன் நாகம் போல மதிமயங்கிப் போனதை சௌம்யாவும் கவனித்தாள். அய்யோ.. அண்ணனுக்கு யாரைப் பிடித் திருக்கிறது என்று தெரியவில்லையே.. ஏய் அண்ணா.. ஏன் இப்படி தவிக்கச் செய்கிறாய்.. 'திருதிரு'வென்று உள்ளே சூடாய் பரவியது சௌம்யாவிற்கு.. எரிச்சலா.. சே!

காலார நடந்துவிட்டு ஓரிடத்தில் ஓய்வாக அமர்ந்து கொண்டனர் அனைவரும்...

பிரதாப்பின் நண்பர்கள் 'அந்தாதி' பாட ஆரம்பித்தனர். அவர்களுக்கு எதிரணியாய் சௌம்யாவும் தோழிகளும்.

நீங்கள் என்ன வேண்டுமானாலும் செய்து கொள்ளுங் கள் என்று அலுப்பில் ஒரு விரிப்பை விரித்து படுத்து விட்டாள் அத்தை...

படுத்தவாறே அவர்களது கலாட்டாவை ரசித்த அத்தை அவ்வப்போது தானும் அந்த காலத்துப் பாடல்களை எடுத்து விட்டாள்...

அடுத்து 'க்விஸ்' 'கடிஜோக்ஸ்' என்று பொழுது கழிந்தது. நடையிலும்.. பேச்சிலும் உடல் சக்தி செல வாக.. வயிற்றில் 'கபகப'வென்று பசி!

கொண்டு வந்த பதார்த்தங்களையெல்லாம் ஒரு பிடி பிடித்தனர்... பிஸ்கட்.. சிப்ஸ்.. பாப்கார்ன்.. கேக்..

வெஜிடபிள் பஃப்' என்று அனைத்தும் வினாடியி கபளீகரமாயின.

'சார்ஜ்' ஆன பாட்டரி செல் போல மறுபடியும் ஆட்டம் பாட்டம்... கொண்டாட்டம்!

ஆனால் சௌம்யாவிற்கு தான் சலிப்பு வந்த நினைத்தது நடக்கவில்லையே...

அட சே! இரண்டாவது முயற்சியும் தோல்விய பார்க்கப் போனால் அண்ணாவை விட... அவனது நண் பர்கள் தான் தன் தோழிகளிடம் குழைந்து வழிகிறார்க ஆனாலும் அண்ணனின் இதயம் இரும்பு குண்டுதா இப்படியா... ஒருத்தன் பட்டும் படாமலும் இருப்பான்.

ஆனானப்பட்ட விசுவாமித்திரரே மேனகையிட அம்பேல் ஆன கதை இருக்கே... இவனுக்கு என் வந்தது...

ரதியாட்டம்... மேனகையாட்டம் கவிதாவும் ஹேமாவு அழகு சுந்தரிகளாய் இருக்கிறார்கள்... அதுவும் அண்ண னின் ஆண்மை அழகில் சொக்கி... அவனது பார்வைக்கா தவம் இருக்கிறார்கள்.. அதைக் கண்டும் காணாதது போ இருக்கிறான் என்றால்...

திமிர்! கர்வம்! தான் என்ற அகம்பாவம்! ஒரு வேளை வேண்டும் என்றே செய்கிறானோ...

பெருமூச்சு விட்டாள்.. பேசாமல் அவனிடம் ச ணடைந்து விடலாமா...

அடுத்த கணமே தலையைச் சிலுப்பிக் கொண்டாள். ஊகூம்.. வேண்டவே வேண்டாம்.. அப்புறம் கேலி செய்தே உயிரை வாங்கிவிடுவான்.

இது என் தன்மான பிரச்சனை.. இதில் தோற்கக் கூடாது தோற்கவே கூடாது... சுந்தரத்தின் மகளாவது தோற்



தாவது நிச்சயம் அண்ணனை 'பல்டி' அடிக்க வைக் கணும்... அவன் வாயால் காதலை ஒத்துக் கொள்ள வைக்கணும்... வைப்பேன்...

சுத்தரிக்காய் முத்தினால் சந்தைக்கு வந்தாக வேண் டுமே... அதையும் பார்ப்போம்...

வீம்பில் விறைத்து நிற்கும் அவன்... போகப் போக விழத்தான் போகிறான்.. காதலில் புலம்பத்தான் போகி றான். சௌம்யாவிற்கு உற்சாகம் திரும்பியது.

வீடு திரும்பும் வழியில் இளநீர் குலைகளைப் பார்த்து விட்டுக் காரை நிறுத்தினர்.

வயிறு முட்ட இளநீரை அருந்திய பின்பு.. காரை நோக்கி வரும்போது தான் அந்த சிறு விபத்து நடந்தது.

எதையோ சுவாரஸ்யமாய் பேசிக் கொண்டு வந்த கவிதா விழுந்து கிடந்த வாழைப்பழத்தோலில் கால் வைக்க வேண்டுமா...

'சர்' என்று வழுக்கி.. கீழே விழுந்தாள் அவள். அனை வரும் திகைத்து நின்றனர்.

சௌம்யாவும் அத்தையும் பதைத்து போய் அவளை எழுப்பி... நிற்க வைத்தார்கள். வலியில் முகம் சுளித்தாள் கவிதா.

அவளால் காலை எடுத்து வைக்கவும் முடியவில்லை. மின்னலாய் வலி தாக்கியது.

லேசான காயம்.. கால் சுளுக்கியிருக்க வேண்டும்.

"அண்ணா... காரில் 'பர்ஸ்ட் எய்ட்' பாக்ஸ் இருக்க வேண்டுமே" என்று சௌம்யா கேட்டதும்... பரபர வென்று செயல்பட்டான் பிரதாப்.



"சௌமி.. நீயும் ஹேமாவுமாய் சேர்ந்து கவிதாவ மெல்ல நடத்தி அழைத்து வந்துடுங்க... நான் போ எடுத்து வைக்கிறேன்" என்று விரைந்தான்.

பானகத்துரும்பாய் போனது அந்த விபத்து. இள களின் உற்சாகம் வடிந்து போனது.

"பிக்னிக்' சந்தோஷமா கழிந்தது என்று நினைத்தா இப்படி திருஷ்டி விழுந்தது மாதிரி முடிந்ததே..." அத்தை அரற்றினாள்.

காயத்தில் 'டிங்ச்சர்' பட்டதும்... "ஆ! என்று அல னாள் கவிதா."

"கொஞ்ச நேரத்தில் சரியாகி விடும்.. பொறுத்து கொள் கவிதா..." காயத்திற்கு 'பான்ட் - எய்ட்' போட் வாறு சொன்னான் பிரதாப்,

கவிதாவுக்கு சாலையில்.. எல்லோர் முன்னே.. அதுவு பிரதாப் முன்னால் வழுக்கி விழுந்தது அவமானமாக தான் இருந்தது.

ஆனால்.. இப்போது பிரதாப் காட்டிய கரிசனத்தில் அவனது இதமான கவனிப்பில்.. அவனது நீண் விரல்களின் ஸ்பரிஸத்தில் அவமானம் போயே போச் மனதில் வண்ணத்துப் பூச்சிகளின் படபடப்பு சந்தோஷத்தில் இதய ஓசை 'லாலா' ஆகியது.

ஆகா.. இதற்காக எத்தனை தடவை வேண்டுமான லும் விழலாமே... பிரதாப் இப்படி தன்னைக் கவனித் தால்.. உள்ளுக்குள் கிளுகிளுப்பு...

தனக்காகவே கடவுள் அமைத்துக் கொடுத்த சந்தர் பம்... நொடியில் காயத்தின் எரிச்சல் மாயமாகிப்போனது

சௌம்யாவின் உள்ளத்தில் நப்பாசை முளைத்தது அண்ணா கவிதாவை விரும்புகிறானா.. இருக்கும்



கடவுளே.. அப்படி இருந்துவிட்டால்... மனம் குதி போட்டது.

ஓரக்கண்ணால் ஹேமாவைப் பார்த்தாள்... பாவம்... அவள் முகம் சாம்பிப் போயிருந்தது... பிரதாப் கவிதாவிடம் காட்டும் அனுசரணையில் வந்த வாட்டம்...

ஒரு தோழிக்காக மகிழ்ச்சியும்... இன்னொருத்திக்காக வருத்தமும் படவேண்டிய நிலை... விசித்திரம்!

"அத்தை.. கவனித்தீர்களா.. கவிதாகிட்ட அண்ணா நடந்து கொண்ட விதம்.. நீங்க என்ன நினைக்கிறீங்க அத்தை..." என்று சௌம்யா கேட்டதும்... சூள் கொட்டி னாள் துர்கா...

"உன் அண்ணா மகா அழுத்தக்காரன் சௌமி... உடனே முடிவுக்கு வந்துடாதே... பொறுத்திருந்து பார்..." என்றாள்.

பொங்கி வந்த பாலில் 'ஐஸ் வாட்டரை' ஊற்றினாற் போல சௌம்யாவின் உற்சாகம் வடிந்து போனது.

பெரிதாய் பெருமூச்சு விட்டாள்...

இப்போதைக்கு அவளால் முடிந்தது அதுதான்.

## 6

சௌம்யாவின் தலை வீங்கிக் கொண்டது போல கனத்தது. என்ன செய்யலாம்.. யாரிடம் கொட்டித் தீர்க்க லாம்...

யோசிக்க யோசிக்க மண்டை காய்ந்தது... மனம் விட்டுப் பேசினால் மனபாரம் குறைந்துவிடும். ஆனால் கேட்ப வருக்கு பொறுமை இருக்க வேண்டுமே..

மதுராவிடம் பேசினால்.. யெஸ்.. அவளை சந்தி பேசவேண்டும்... அவளிடம் ஆலோசனை கே வேண்டும்...

மதுராவின் வீட்டிற்கு போகலாம்தான்.. ஆனா அவளது பாட்டி இருக்கிறாளே.. மனம் விட்டுப் பேச முடியாது. குட்டிப்போட்ட பூனைமாதிரி அங்கேயே சு வருவார்...

'இவ எதுக்குடி வந்தா' என்பது போல இருக் அவரோட பார்வை..அய்யய்யோ... வேண்டவே வேண்

கல்லூரி நேரம் முடிந்ததும் மதுராவை வீட்டி அழைத்து வரலாம் என்றால்.... அவள் வரவும் மாட்டா

அட.. இப்படிச் செய்யலாமே.. பேசாமல் இருவ காலேஜுக்கு 'சக்கர்' அடித்துவிட்டு வந்துவிட்டால் ரைட்.. அதுதான் சரி...

அத்தையிடம் தலைவலின்னு சொல்லிட்டாப் போ மதுராகிட்ட பேசவேண்டும்.. நிறைய்ய...

பிரதாப்பிற்காக அவள் பெண் பார்த்து வைத்திருக் **விஷயம்**.. கவிதாவும் ஹேமாவும் பிரதாப்பை விரு புவது...

இந்த விஷயத்தில்.. அண்ணாவின் கண்ணாமூ ஆட்டம். இதுக்கு தீர்வு... அதுக்கு என்ன செய்யல இவற்றை எல்லாம் பேசித்தீர்க்க வேண்டும்...

முதலில் மதுரா பயந்து மறுத்தாள்...

தோழியின் வற்புறுத்தலால் தயங்கி.. ஒப்புக்கொ டாள். அவளுக்கு சௌம்யாவின் வீடு என்றாலே பிரதாப்பின் நினைவு வந்து மேனியை அதிர வைத் பிரதாப் [illegible] முகத்திற்கு பதில் ஒரு புலியின் மு உறுமியு[illegible] ..



பிரதாப் வீட்டில் இல்லை.. இல்லை.. இல்லவே இல்லை என்று நூறு தடவை சத்தியம் செய்த பிறகு தான் அவளுடன் செல்லத் துணிந்தாள் மதுரா.

திடீர் என்று மழை சடசடவென்று பெய்யத் தொடங் கியது.. எதிர்பாராத விருந்தாளியைப் போல வந்த மழையைப் பார்த்ததும் சௌம்யா சிரித்தவாறு சொன்னாள்.

''பார்த்தாயா.. மது... என்றைக்கும் இல்லாமல் இன்னிக்கு மழை.. எல்லாம் உன்னால் தான்...''

திகைத்த மதுராவிடம் ''பின்னே.. அத்திப் பூத்த மாதிரி வீட்டுக்கு வந்தால்.. அதான்.. மழையும் வந்துவிட்டது...'' என்றாள் பரிகாசமாய்...

அதைக் கேட்டு மதுரா புன்னகைத்தாள்.

பஸ் நிலையத்திலிருந்து வீடு சேருமுன் இருவரும் தெப்பமாய் நனைந்து விட்டார்கள்.

அத்தைக்கு படு ஆச்சர்யம்...

இதென்ன.. சீக்கிரமே வந்துவிட்டாள் சௌமி.. அதுவும் மதுராவுடன்.. வியப்புதான்...

''அத்தை.. எனக்கு ரொம்ப தலைவலி.. தாங்காமல் லீவு போட்டுவிட்டு வந்துவிட்டேன்.. மதுரா நம் வீட்டுக்கு வந்து ரொம்ப நாள் ஆச்சேன்னு அவளையும் அழைத்துக் கொண்டு வந்தேன்...'' என்று சௌம்யா சொல்ல...

''அடடா... மழையில் வேறு நனைந்து வந்திருக்கீங் களே... முதல்ல ஈர உடையை மாத்திட்டு வாம்மா... சூடா காபியோட வருகிறேன்.. சௌமி.. உன்னோட உடையை மதுராவுக்கு கொடு.. அவளும் மாத்திக்கட்டும்... நல்லா தலையை துவட்டுங்க.. இல்லேன்னா சளி பிடிச்சிடும்...'' என்று பாசத்துடன் சொன்னாள் அத்தை.



மதுராவுடன் மாடி ஏறினாள் சௌம்யா.

''மது.. அத்தைக்கு உன்னை ரொம்பவும் பிடிக்கும்டீ... அன்னிக்கு.. கிருஷ்ணா ஜெயந்திக்கு வந்தாயே.. முதன் முதலா உன்னைப் பார்த்துவிட்டு ரொம்பவும் புகழ்ந்து தள்ளினாங்க... 'சைட்ல' எனக்கும் திட்டு... ''என்ன அடக்கம்... புடவைக் கட்டிக் கொண்டு என்ன அழகா இருக்கா... பார்... நீயும், இருக்கே...''ன்னு... ''பாட்டியின் கண்டிப்பு அப்படி அத்தைன்னேன்... அதுக்கு ''ஓகோ.. அப்ப நான் உன்னை அவிழ்த்து விட்டிருக்கிறேனாக்கும்'' என்றாரே பார்க்கலாம்...'' என்று சௌம்யா சொல்ல...

''எனக்கும் அத்தையை ரொம்பப் பிடிக்கும் சௌமி.. நீ ரொம்பக் கொடுத்து வச்சிருக்கே... இந்த மாதிரி தாய் பாசத்தைக் காட்டும் ஒருத்தரை பெற்றதற்கு...'' என்று சொன்னாள் மதுரா.

அவளது குரலில் ஏக்கம் இழையோடியது...

அதை சௌம்யாவும் உணர்ந்தாள்... மனசுக்குள் துடித்துப் போனாள்... தன்னைப் போல தாயிழந்தவள்.

எனக்காவது தாய்க்குத் தாயாய் அத்தை இருக்கிறார்.. இவளுக்கு... பாவம்... அந்தக் கொடுப்பினை இல்லையே.

பூவாய் மலர்ந்து சிரிக்க வேண்டிய வயதில்... பட்டாம் பூச்சியாய் மகிழ்வுடன் திரிய வேண்டிய பருவத்தில்... கூட்டினுள் ஒடுங்கிக் கொள்ளும் நத்தையாக அல்லவா இருக்கிறாள். மரவட்டையாக அல்லவா சுருண்டு போகிறாள்...

எல்லாம்... அந்தப் பாட்டியின் கண்டிப்பால்... பாவம். மது... நெகிழ்ந்தவளாய் மதுராவின் தோளில் கை வைத்து

''ஏய் மது... என் அத்தைக்கு உன் மேல் ஏற்பட்ட பிரியத்திற்கு காரணமே நீயும் தாய் இல்லாதவள் என்பது



தான்... எனக்கு மட்டும் இல்லை மது... அத்தை உனக்கு தாய்மாதிரி தான் என்று நினைத்துக் கொள்...'' என்றாள்.

''அத்தையின் அன்பைப் பெற்ற நான் கொடுத்து வைத்திருக்க வேண்டும் சௌமி...''

''சரி.. சரி.. இந்தா.. இந்த சுரிதாரைப் போட்டுக் கொண்டு...''

''அய்யோ.. வேண்டாம்... சௌமி.. இதெல்லாம் போட்டு வழக்கமில்லைடீ...''

''என்கிட்டே இருப்பது எல்லாம் இந்த மாதிரி 'டிரெஸ்' தான் மது... உனக்குப் புடவை தான் வேண்டும்னா அத்தை யோடதை தான் நீ உடுத்திக்கணும்... 'தேவேந்திரா...' 'சுங்குடி'ன்னு தான் இருக்கு... கட்டுகிறாயா... முடியாது தானே... அப்போ... எதுவும் பேசாமல் இதை உடுத்து...''

''அது இல்லேடீ...''

''உஷ்.. பிடி இதை.. இப்படியே நின்னா அத்தைக் கிட்டே வாங்கிக் கட்டிக்கணும்...'' வேறுவழியில்லாமல் அரைமனதுடன் வாங்கிக் கொண்டாள்.

''வாவ்! டீ... மது.. உனக்கு இந்த உடை 'சூப்பரா' இருக்குடீ... ப்யூட்டி... ஃபுல்...! எவ்வளவு அழகாத் தெரியறே தெரியுமா.. இதையெல்லாம் போட்டு அனுப விக்காமல்... அம்மாமி மாதிரி புடவையை சுத்திக் கொண்டு வருகிறாயே... ஏண்டீ... உனக்கு இம்சையா தெரியலே...'' என்றாள் தோழி. சிரித்தாள் மதுரா.

''எனக்குப் பழகிவிட்டதுடீ...''

ஹேர் டிரையரால் கூந்தலை உலர்த்திய சௌம்யா... ''மது.. வாயேன்.. ஒரு நிமிடத்தில் கூந்தல் உலர்ந் திடும்...'' என்று அழைத்தாள்.

சூடான காற்று கழுத்தில் பட்டு.. கிச்சு கிச்சு மூட் டுவதுபோல இருந்தது.

நன்றாய் உலர்ந்துவிட்ட கேசம் அலைபாய்ந்து காற்றில் பறந்தது.

''அழகான... அடர்த்தி கூந்தல் டீ உனக்கு... கரும்பட்டு மாதிரி 'ஷைனிங்'! என்ன ரகசியம்டீ... மது...'' என்று கேட்டாள் சௌம்யா.

''அதன் ரகசியம்... சுத்தமான தேங்காய் எண்ணெயும்... வீட்டில் அரைத்த சீயக்காயும் தான்... பாட்டிக்கு 'ஷாம்பூ' எல்லாம் பிடிக்காது...''

''அட.. சீயக்காய்க்கு இத்தனை மகிமையா... இனிமே நானும் அதையே உபயோகிக்கப் போகிறேன்...''

''உன் கூந்தலும் அழகாத்தான் இருக்கு சௌமி...''

''ப்ச்சு... உன்னது மாதிரி இல்லே மது.. பேசாமல் டாபர் அம்லா தைல விளம்பரத்துக்கு நீ போகலாம் டீ... எனக்கு பொறாமையா இருக்கு... எனக்கும் இந்த மாதிரி இருந்தா.. விதவிதமா 'ஹேர்ஸ்டைல்' பண்ணிக் கொள்வேன்...''

அந்த நேரத்தில் மாடிக்கு வந்தார் அத்தை.. சுடச்சுட பக்கோடா.. காபியுடன்...

அவளது கண்களில் ஆச்சர்யம் தெரிந்தது.

''மதுராவா... இந்த உடையில் வித்தியாசமா இருக் காளே...'' என்றார் வியப்புடன்.

''இல்லே... அத்தை... இனிமேல் இந்த 'டிரெஸ்'ஸையே போட்டுக்கோடீங்கறேன்.. கேட்டால்தானே...'' என்று சௌம்யா சொல்ல...

''அம்மாடி... இவ பேச்சைக் கேட்காதே.. புடவைதான் அழகு... பெண்களுக்கு அதுதான் லட்சணம்... இந்த



சுடிதார் மண்ணாங்கட்டியெல்லாம் வேண்டாம்மா...'' என்றார் அத்தை.

''இது அவலட்சணமாக்கும்..'' உதட்டை சுழித்தாள் சௌம்யா...

''போதும்.. முதல்ல இதைச் சாப்பிடுங்கள்... பொண் ணுக்கு சேலை அழகா... சுடிதார் அழகாங்கற பட்டிமன் றத்தை அப்புறமா வச்சுக்கலாம்... மதுரா... உன் புடவை.. ஜாக்கெட் எல்லாத்தையும் வாஷிங்மிஷினில் போட்டு.. உலர்த்தி வைக்கச் சொல்லியிருக்கேன்ம்மா.. நீ வீட்டுக்கு போறப்போ உன் உடுப்பெல்லாம் தயாரா இருக்கும்.. என்ன...''

அத்தை இறங்கிச் சென்றதும்... இருவரும் ஏதேதோ பேசினார்கள்...

அதற்காகத்தானே அவர்கள் வந்ததே... அதைத்தான் இப்போது செய்தனர்.

கவிதா... ஹேமா. பிரதாப். அரவிந்த் என்று பேச்சு அவர்களையேச் சுற்றியது.

கவிதாவிற்கு நேர்ந்த சிறு விபத்து.. தன் அண்ணாவின் அமுக்குளித்தனம்.. அதனால் தனக்கு ஏற்பட்டிருக்கும் குழப்பம்.. இதற்கு எப்படி தீர்வு காணலாம் என்று யோசனை.. இதையெல்லாம் எடுத்துச் சொல்லிவிட்டு.. 'ஏதாவது ஐடியா கொடேன்' என்று வேண்டினாள்.

''சரிடீ.. சௌமி.. நீ ஏன் இப்படித் தவிக்கிறேன்னு தான் எனக்குப் புரியலே.. உன் அண்ணா... தன் மனதுக்குப் பிடித்த பெண்ணை அவரே பார்த்துக்கொள்ளட்டுமே... நீ எதுக்கு 'செலக்ட்' பண்ணணும்.. எனக்கென்னவோ நீ செய்யறது சரின்னு படலை சௌமி...'' என்றாள் தோழி.



''எல்லாம் சுயநலம் தான்... மது... என் சிநேகிதியே அண்ணியானால்... எங்களுக்குள் எந்த மனஸ்தாபமும் வராது பார்... இரண்டுபேரும் ஒத்துமையா இருக்கலாம் தவிர.. இது டிட்... ஃபார் டாட்... எனக்கு என் அண்ணா மாப்பிள்ளையை 'செலக்ட்' பண்ணினதுக்கு.. நானும் பதிலுக்கு செய்யவேண்டாமா.. அதான்...'' கண்ணடித்து விட்டுச் சிரித்தாள் சௌம்யா.

''கவிதா... ஹேமா... இருவரில் ஒருத்திதான் அண் ணியா வரவேண்டும்னு நீ விரும்பினா போதுமா சௌமி.. அவங்களுக்கும் விருப்பம் இருக்க வேண்டுமே...''

''கரும்பு தின்னக் கசக்குமாடீ... என் அண்ணாவோட அழகுக்கும்... 'பர்சனாலி'ட்டிக்கும்... அவனை மணக்க நான்.. நீன்னு க்யூவில் வருவார்களாக்கும்...''

மது சிரித்தாள். ''காக்கைக்கு தன் குஞ்சு பொன் குஞ்சு..''

''உதைப்பேன்.. என் அண்ணா எதில் குறைந்துவிட்டா ளான்.. சொல்லுடீ...''

''எதிலும் இல்லை.. கோபத்திலும் குறைவு இல்லை..''

''ஓ.. அந்த நிகழ்ச்சியை சொல்கிறாயா... இன்னும் அதை மறக்கவில்லையா மது.. அவனது கோபம் எல்லாம் அவனைக் கட்டிக்கப் போகும் மனைவி சமாளிக்க வேண்டிய விஷயம்... விடுடீ...''

''பாவம்தான்.. அவள்...'' என்றாள் மதுரா.

''எவள்..'' புருவங்களை உயர்த்திக் கேட்டாள் சௌம்யா.

''கவிதாவோ.. இல்லை ஹேமாவோ...''

''ஏனாம்...''

''இல்லை.. மிஸ்டர் துர்வாசரை சமாளிக்க தெரிந்திருக்க வேண்டுமே.. அம்மாடி!''



''என் அண்ணா சிடுமூஞ்சியே இல்லை மது.. ரொம்ப 'ஜோவியல்' கலகலப்பாய் பேசுவான்.. சிரித்து பழகுவான் எப்பவாவதுதான் கோபம் வரும்.. வந்தால் கொஞ்சம் ஓவர் தான்... ஆனால் உடனே போய்விடும். சரி.. இப்ப அந்தப் பேச்சு எதுக்குடீ... எங்கே.. எனக்கு 'ஐடியா' கொடு... உன்னை அழைத்து வந்ததே அதற்குதான்...''

''என்ன சௌமி.. பாலைவனத்தில் வந்து தண்ணீர் கேட்கிறாயே.. எனக்கு எந்த 'ஐடியா'வும் வராதே...''

''அய்யே.. உன்னைக் கேட்டேன் பார்.. என்னை தான் சொல்லணும்...''

அத்தையின் அழைப்பைக் கேட்டு இருவரும் இறங்கிச் சென்று சாப்பிட்டனர்...

மணி இரண்டு என்பதால் மது அமைதியாக இருந்தாள்.

கல்லூரி விடும் நேரத்தில் புறப்பட்டால் போதும்..

''சரி.. மது.. ஏதாவது பாட்டு கேட்கிறாயா.. ம்ம்.. உனக்கு என்ன 'சாங்க்' வேண்டும்.. சொல்லு... ஆங்.. உனக்குப் பிடித்தப் பாட்டை போடுகிறேன் இரு...''

ஆடியோ கேசட்டை எடுத்து மியூசிக் சிஸ்டமில் போட் டாள். ஏ.ஆர். ரெஹ்மானின் இசைமழையில் தேனாய் ஒலித்தது பாடல்...

''கண்ணாளனே.. எனது கண்ணை நேற்றோடு காணவில்லை...'' இன்னிசையில் லயித்து.. கண்களை மூடிக் கொண்டு ரசித்தனர் இருவரும்.. விரல்கள் மென்மையாய் தாளமிட.. தம்மை மறந்த நிலையில் அமர்ந்திருந்தனர் தோழிகள்.

'சட்'டென்று பாடல் நின்றதும்.. கண் விழித்தனர்... பிரதாப்!

அவன்தான் அதை அணைத்திருந்தான்.

"எத்தனை தடவை கூப்பிடுவது உன்னை.. இத்தனை பெரிதாகவா 'வால்யூம்' வைத்துக் கொள்வாய்..." என்று கடிந்து கொண்ட அண்ணனை கோபத்துடன் உறுத்துப் பார்த்தாள் தங்கை.

"என்ன அண்ணா இது.. ஏன் நிறுத்தினே... இது மதுவுக்கு பிடித்த பாட்டு... அவளுக்காகத்தான் போட்டேன்..." மனத்தாங்கலாய் சௌம்யா சொல்லவும்.. அப்போதுதான் கவனித்தான்.

அந்த அறையில்.. கட்டிலின் ஓரமாய் சுவரில் ஒட்டிக் கொண்ட பல்லியைப் போல் ஒண்டிக் கொண்டிருப்பது.. ஆமாம்.. மதுரா...!

அவனது கண்கள் விரிந்தன.. புருவங்கள் இரண்டும் நெற்றிக்கு ஏறின...

அடடா.. என்ன விந்தை!

மதுரா.. சுரிதாரில்! ஆகா.. அதிசயம்தான்... வித்தியாசமாய் தெரிந்த அவளை உற்றுப் பார்த்தான் அவன்.

அவனது தீர்க்கமான பார்வையில் நடுங்கிப் போனவளாய்.. தலையணையை மார்புடன் இறுக அணைத்துக் கொண்டாள்... ஏதோ.. அதுதான் அவளை அவனிடமிருந்து காப்பாற்றப் போகும் கவசம் போல...

கண்கள் 'சாஸர்' போல பெரியதாகி.. நாக்கு வரட்சி கண்டு... உடம்பெல்லாம் மின்னல் வெட்டியது போல அதிர.. தவிப்புடன் பார்த்தாள் அவள்.

வரவே மாட்டான் என்றாளே சௌமி.. வந்துவிட்டானே. அந்த இடத்தைவிட்டு மின்னலாய் மறைய வேண்டும் என்று நினைத்தாலும்.... அவளால் அசைய



வும் முடியவில்லை.. அதிர்ச்சி அவளை ஆணி அடித்தாற் போல அசைய முடியாமல் செய்தது.

கடவுளே... இவனது கண்களில் படவேக் கூடாதுன்னு நினைத்தாலும் முடியவில்லையே.. திரும்ப படவேண்டி வருகிறதே...!

அவளது பதற்றத்தையும்.. இருதலைக் கொள்ளி எறும்பு போல அவள் தவிப்பதையும் பார்த்துவிட்டு.. உதடுகளில் குறும்பு புன்னகை பூக்க ஆடியோவை 'ஆன்' செய்தான்.

"சௌமி.. ஏனோ உன் நண்பி என்னைக் கண்டு நடுநடுங்குகிறாள்.. சிங்கமாய் பாய்ந்து விழுங்கிவிடுவேன் என்ற பயமோ என்னவோ.. நான் என் அறைக்கே போகிறேன்..."

புறப்பட்டவன்.. சில எட்டுகளை வைத்துவிட்டு எதையோ சொல்ல விரும்பி திரும்பினான்.

"ஆ! சௌமி.. ஒண்ணு சொல்ல மறந்துவிட்டேனே... உன் ஃபிரெண்டுக்கு இந்த உடையும் அழகாகத்தான் இருக்கிறது.. என்ன.. அவளோட வருங்கால கணவன் ஆசையா இதை வாங்கிக் கொடுத்து விட்டு.. கூடவே தலையணைகளையும் வாங்கித் தந்தாக வேண்டும்.. பாவம்..." என்றான் கிண்டலாக.

அவனது குரலில் தெரிந்த கேலியும்.. குறும்பும் மதுராவை பலவீனப்படுத்தியது.

தலையணையைத் தூக்கி எறிந்தாள்.

சௌம்யா அண்ணனை எரிப்பதுபோல ஒரு பார்வை பார்த்தாள்... இவனுக்கு என்ன வந்தது.. வராதவள் அதிசயமாய் வந்திருக்கிறாள்.. இப்படியெல்லாம் பேசினால் மறுபடியும் வருவாளா.. கொஞ்சம் கூட விவஸ்தை இல்லாமல்.. சே...





தோழியை சமாதானப்படுத்தினாள்.

"மது.. அவனது பேச்சை நீ பொருட்படுத்தாதே. அவனுக்கு எல்லாமே கிண்டல்.. கேலிதான்..."

"இல்லே சௌமி.. நான் புறப்படுகிறேன்.. என் டிரெஸ்ஸை எடுத்துக் கொடேன்... ப்ளீஸ்" என்றாள் வாட்டத்துடன்.

இனிமேல் அவளை நிறுத்தி வைக்க முடியாது. சிட்டாய் பறந்து விடப்போகிறாள்.. எல்லாம் இந்த.. இந்த.. கிறுக்கு அண்ணனால்.. எக்குத்தப்பாய் ஏதோ பேசி.. அவளை ஓடவைத்து விட்டான்.

இனி அவள் இந்தப் பக்கம் தலைவைத்தும் படுக்க மாட்டாள். பாவம்.. பாட்டியின் கெடுபிடித்தனத்தால் ஆண்பிள்ளைகள் என்றாலே மருண்டு போகிறாள்.

ஆண்களைக் கண்டாலே தெனாலிராமனின் பூனையாய் ஓடி ஒளியும் ரகம் இவள்...

இந்த லட்சணத்தில் அவளது பயத்தை.. ஒதுக்கத்தை ஏளனம் செய்வது போல பேசினால்... தாங்குவாளா.. இதோ.. புறப்பட்டாச்சு...

பெருமூச்சுடன் கீழே இறங்கத் தொடங்கினாள் சௌம்யா.

# 7

சௌம்யா உள்ளுக்குள் கொதித்துக் கொண்டிருந்தாள்... பிரதாப் மீது எழுந்த சினத்தை எப்படிக் காட்டுவது என்று தெரியவில்லை.



பற்களைக் கடித்தாள்.. முகத்தை 'குர்' என்று வைத்துக் கொண்டாள்.. புஸ்... புஸ் என்று வெப்பத்துடன் பெருமூச்சை விட்டாள்.. அப்பவும் கோபம் தீர்ந்தபாடில்லை. பின்னே.. வற்புறுத்தி அழைத்து வந்த அன்புத்தோழியை எதையோ சொல்லி மருண்டு ஓடவைத்துவிட்டானே.. கோபம் வராமல் இருக்குமா...

மனதில் என்ன நினைப்பு.. பெரிய்ய மஹாராஜா பார்.. எல்லோரையும் தன் இஷ்டப்படி ஆட்டுவிக்கலாம்.. இஷ்டம் போல கேலி செய்யலாம் என்ற எண்ணம் போல...

நான்கு நாட்களாய் மதுரா கல்லூரிக்கு வரவில்லை.. தோழிகள் மூவரும் போய் அவளைப் பார்த்தனர்.. கொஞ்சம் இளைத்து.. வெளுத்துப் போயிருந்தாள் மதுரா.

"என்னவோ தெரியலை.. நான்கு நாட்களுக்கு முன்னால் சோர்ந்து போய் வீட்டுக்கு வந்தாள்.. மழை வேறு கொட்டியதில் நனைந்து விட்டிருந்தாள்... அன்றைக்கு ராத்திரியே அவளுக்கு காய்ச்சல் வந்துவிட்டது... பூஞ்சை உடம்பு மதுராவுக்கு.. அதான்..." தாத்தா சொல்ல...

'திக்' என்றது சௌம்யாவிற்கு... நான்கு நாட்கள் என்றால்.. தன் வீட்டுக்கு வந்த நாள்.. மழையில் நனைந்ததும் அன்றுதான்.. அண்ணனின் வார்த்தைகளில் குன்றியதும் அன்றுதான்.. உடம்பு மட்டுமா பூஞ்சை.. மனமும் தான் தாத்தா... இப்படியா தொட்டாற் சிணுங்கியாய் ஒரு பெண்ணை வளர்ப்பார்கள்.. ஆத்திரத்துடன் நினைத்தாள்.

வேறு ஒரு பெண்ணாக இருந்தால்.. ஏன்.. கவிதாவோ.. ஹேமாவோ இருந்திருந்தால் அதை சகஜமாய் ஏற்றுக் கொண்டிருப்பார்கள்.. தமாஷ் பேச்சு என்று சிரித்திருப்பார்கள்...

ஆனால் மதுரா.. அப்படி இல்லையே... பாட்டியின் வளர்ப்பில்.. எதையும் எதார்த்தமாய் எடுத்துக் கொள்ளும் மனப்பக்குவம் இல்லையே...

அதுவும் ஆண்களின் பரிகாசத்தை...

பாட்டியின் இடைவிடா போதனையில்... ஆண் பிள்ளைகள் எல்லோரும் மோசம். அவர்கள் எது பேசினாலும் தப்பு என்ற தவறான எண்ணம் அவளுள் ஊறிவிட்டது.

அதை எப்படி மாற்றுவது.. தெரியவில்லையே...

தங்கையை கல்லூரிக்கு விட வந்த பிரதாப்பும் மதுரா இல்லாததை கவனித்தான்.

"என்ன சௌமி.. உன் 'டச்.. மி.. நாட்' நண்பி கண்ணில் படவில்லை... ஒருவேளை ஆண்களின் கண்களில் படக்கூடாது என்று 'பர்தா' போட்டுக் கொண்டு வந்திருக்கிறாளா" என்று கிண்டலுன் கேட்க...

அதற்காகவே காத்திருந்தவள் போல.. பாம்பாய் சீறினாள் அவள்.

"செய்வதையும் செய்துவிட்டுக் கேள்வி வேறேயாக்கும்... அன்னிக்கு அவளுடைய கூச்ச சுபாவத்தைப்பத்தி கேலியா பேசினேயே.. அப்பவே எனக்குத் தெரியும்.. அவள் அதை தப்பா எடுத்துக் கொள்வாள் என்று.. அப்படியே ஆச்சு.. ஏற்கனவே உன்கிட்ட பயம். மழையில் நனைந்தது வேறு.. எல்லாம் சேர்ந்து அவள் காய்ச்சலில் படுத்துவிட்டாள்.. இப்ப திருப்தியா உனக்கு.."

"ஓ! காட்! இப்படியும் ஒரு 'டெலிகேட்' பிராணியா.. அதுசரி.. அவளுக்கென்ன ஆண்வாடையே ஆகாதா... உடனே நடுங்கி... மயங்கி.. விழுந்துவிடுவாள் போல..."

"ஷட் அப் அண்ணா.. அவளுடைய வளர்ப்பு சூழ்நிலைப் பற்றி அறியாமல் ஏதேதோ பேசாதே..



சொன்னாலும் உனக்குப் புரியாது.. பெண்ணோட மென்மையான மனதைப் பற்றி உனக்கு என்ன தெரியும்.. நீங்கள் எல்லாம் கரடு முரடான ஆண்களாயிற்றே..."

"ஓ! அப்ப அரவிந்தனும் அப்படியாக்கும்..."

"ஒட்டு மொத்த ஆண்களும் அப்படித்தான்.. பெண் மனம் பற்றி உங்களுக்கு எதுவும் தெரியாது.. விடுண்ணா..."

"சரி.. விடுகிறேன்.. இனிமேல் அவளிடம் ஏதும் பேசுவதில்லை.. போதுமா..."

"இனி... அவள் உன்னை சந்தித்தால்தானே இந்த பேச்சு... நோ சான்ஸ் அண்ணா..."

"அய்யோ.. தாயே.. வேண்டவே வேண்டாம்.. அவள் என்னைப் பார்க்கவும் வேண்டாம். பின் காய்ச்சலில் படுக்கவும் வேண்டாம்.. விடு..." என்று புறப்படவும்.. சட்டென்று நின்று சொன்னான்.

"அப்புறம் சொல்ல மறந்து விட்டேனே.. பெண் வாடையே இல்லாமல் யாரோ ஒரு ரிஷி.. ஆங்... ரிஷ்ய சிருங்கர் இருந்தாராமே.. தனி வனத்தில்.. அதுமாதிரி உன் அருமைத் தோழியை ஆண் காத்து வீசாத இடத்தில் இருக்கச் சொல்லு.. என்ன..."

பற்களை நறநறத்தாள் சௌம்யா.

பற்களின் நடுவே அரைப்பட்டு வெளிவந்தன வார்த்தைகள்.

"ச்சே! உன்னைத் திருத்தவே முடியாது.. மிஸ்டர் பிரதாப்."

அவன் பலமாய் சிரித்தவாறே காரில் ஏறி அமர்ந்தான்.

டிரைவர் மூன்று நாட்களாய் வரவில்லை.. அவனுடைய மச்சினிக்கு கல்யாணமாம்...



அண்ணனிடம் கல்லூரிக்கு கொண்டு போய் விடும்படி கேட்கலாமா என்று யோசிக்கும்போது.. அவனே வலிய வந்து சொன்னது வியப்புதான்...

"சௌமி.. நானே உன்னை காலேஜுக்கு 'டிராப்' பண்ணுகிறேன்.. சீக்கிரம் புறப்படு" என்றான் அவன்.

யாருக்காக இந்த வரவு.. அவளுள் கேள்வி குடைந்தது வருகிறானே.. பார்த்துவிடலாம்...

ஆனால்.. அண்ணன் எமகாதகனாயிற்றே! கவிதாவிடம் கல்லூரி எப்படி இருக்கிறது என்று அக்கறையாகவும் விசாரித்தான். ஹேமாவிடம் அவளது படிப்பு எப்படி போகிறது என்றும் கேட்டான். சௌம்யாவிற்கு 'சப்'பென்று ஆகிவிட்டது.

கவிதா... ஹேமாவின் நிலை வேறு.. மானசீகமாக விண்வெளியில் சஞ்சரித்துக் கொண்டிருந்தனர்.

கவிதா தனக்குப் போட்டியோ என்று ஹேமா அஞ்ச.. ஹேமாவை தன் காதல் எதிரியாய் நினைக்க ஆரம்பித்தாள் கவிதா...

பிரதாப்பின் காதலைப் பெறுவதில் இருவருக்கும் போட்டி... நானா.. நீயா.. என்றும் போட்டி... பிரதாப்பின் கவனத்தைத் தன் பக்கம் திருப்ப துடித்தனர்.

அதைக் கவனித்த சௌம்யா மனதுக்குள் 'சபாஷ்.. சரியான போட்டி' என்று கூவினாள்.

தூரத்தில் மதுரா வருவதைப் பார்த்துவிட்டு அவளிடம் விரைந்தாள் அவள்...

தோழியைப் பார்த்த சந்தோஷத்தில் முகம் மலர்ந்து போன மதுரா.. கவிதாவுடன் பேசிக்கொண்டிருந்த பிரதாப்பை பார்த்ததும் தயங்கி நின்றாள்.



அவனும் வந்திருக்கிறானா.. வேண்டாம் அவனது சகவாசம்.. மனம் கணங்கியது.

"ஏய் மது.. ஏண்டி லேட்.. ஒரு அருமையான 'ஸீனை' மிஸ் பண்ண இருந்த.. அங்கே பாரேன்.. 'வஞ்சிக் கோட்டை வாலிபன்' காதலை.. வைஜயந்தி.. பத்மினி போட்டியை விட தமாஷ்டி...." மெல்லிய குரலில் சௌம்யா சொல்ல...

"ச்சு.. பேசாதேடீ.. நீ செய்யறது எதுவும் சரியில்லை.. பார்.. நெருங்கிய தோழிகள்.. இப்போ எதிரிகள் மாதிரி ஆயிட்டாங்க.. இது தேவையா.. சௌமி.. எனக்கென்னவோ பிடிக்கவில்லைடீ.." என்று உண்மையான வருத்தத்துடன் சொன்னாள்.

"இதில் என் தப்பு என்னடீ மது.. நான் இன்னும் அவங்ககிட்ட என் மனதில் இருப்பதைச் சொல்லவே இல்லையே.. உன்கிட்டே மட்டும் தான் நான் சொன்னது.. என் அண்ணனை உங்களில் யாராவது ஒருத்தர் காதலியுங்களேன்.. ப்ளீஸ்ன்னு சொல்லியிருந்தா அது தப்புன்னு சொல்லு ஒத்துக் கொள்கிறேன்.. அப்படியில்லாமல்... சரி.. சரி.. வா.. நேரமாகிறது..." என்று அழைத்தாள் சௌம்யா.

"நீ போடி.. பின்னால் வருகிறேன்..."

பிரதாப்பைத் தாண்டிச் சென்ற மதுரா அவசர நடை போட முயல.. அவனின் குரல் அவளைத் தடுத்து நிறுத்தியது.

"ஹலோ.. மதுரா.. ஹௌ ஆர் யூ..." என்று அவன் கேட்க.. வேறு வழியின்றி திரும்பிப் பார்த்தாள்.

கடவுளே.. இவனைத் தவிர்க்க நினைத்தாலும் முடியவில்லையே.. விடாக்கண்டனாய் இருக்கிறானே...

பதிலாய் 'ஹலோ' என்று முணுமுணுத்தாள்.. விருப்பமில்லாமல்.

"நான் உண்மையில் 'ஹௌ ஆர் யூ' என்று கேட்டேன்... உடம்பு சரியில்லை என்றாள் சௌமி.. ஆர் யூ ஆல் ரைட் நவ்.. மதுரா..."

"இப்போ பரவாயில்லை..." தாழ்ந்த குரலில் சொன்னாள் மதுரா... மனம் படபடத்தது.. தோழிகள் முன்னே இன்னும் என்ன கேட்கப்போகிறானோ...

"சாரி.. அன்றைக்கு நீ வீட்டிற்கு வந்திருந்தபோது.. ஏதேதோ வேடிக்கையாப் பேசிவிட்டேன்.. அப்படி நான் பேசியிருக்கக் கூடாதுதான்..." என்று அவன் சொன்னதும்...

ஹேமாவும் கவிதாவும் குழப்பத்துடன் பார்த்தனர்.

மதுரா.. சௌமி வீட்டுக்கா.. எதற்கு.. எப்போது.. எப்படி...

மதுரா தவிப்புடன் சௌம்யாவை பார்க்க.. அவள் உதவிக்கு வந்தாள்.

"அண்ணா.. நீ சாயங்காலம் வந்து 'பிக் அப்' பண்றே... தானே.. நான் காத்திருப்பேன்.. மறந்துவிடாதே..."

அதாவது.. நீ புறப்படு.. என்ற குறிப்பு.. எதையாவது பேசிக் குட்டையைக் குழப்ப வேண்டாம் என்று சூசகமாய் எச்சரிக்கை...

அதைப் புரிந்து கொண்ட பிரதாப்... "ஓகே.. ஸி.. யூ" என்று கையசைத்துவிட்டுப் புறப்பட்டான்.

சௌம்யாவும் மதுராவும் ஏதோ பேசியபடி நடக்க.. கவிதாவும் ஹேமாவும் தேடுவது போல பாவனையுடன் பிரதாப் செல்வதைப் பார்த்து நின்றனர்.

அவர்கள் மட்டுமா.. அந்தக் கல்லூரி மாணவிகளில் பலரும் தான்.. அவனையேப் பார்த்தனர்.



ஆரம்பத்தில் தன் தோழிகளின் போட்டியை ரசித்த சௌம்யாவிற்கு போகப் போக எரிச்சல்தான் வந்தது. அந்த எரிச்சல் அண்ணன் மீது தாள முடியாத ஆத்திரமாக திரும்பியது.

வேண்டும் என்றே இழுத்து அடிக்கிறானே.. சட்டென்று ஒரு முடிவைச் சொல்லாமல்.. இதென்ன டாம் அண்ட் ஜெர்ரி விளையாட்டு மாதிரி...

அவளுக்கே சகிக்க முடியாமல் போனது.

கேட்டால் சிரிக்கிறான்.. நீயே கண்டுபிடி என்று சவால் விடுகிறான்.

ஒருவேளை.. பழிவாங்குகிறானோ.. இப்படியே ஜவ்வாய் இழுத்தடித்து.. என் மூளையை சூடாக்கிவிட்டு.... "நானா... யாரையும் காதலிக்கவில்லையே... சும்மா விளையாடினேன்" என்று கைவிரிப்பானோ.. செய்யட்டும்.. அப்போ பார்த்துக் கொள்கிறேன்.

அவன் சொன்னதும் நான் அரவிந்தை ஒப்புக் கொள்ளவில்லை.. அதே மாதிரி அவனும் சம்மதிக்க வேண்டாமா.. உள்ளுக்குள் பொருமினாள்.

அதேசமயம் மனசுக்குள் இருந்த அந்த 'சாட்சி' கேட்டது.

"உண்மையைச் சொல்.. அண்ணனின் வார்த்தைக்கு மதிப்பு கொடுத்தா நீ அரவிந்தனை ஒப்புக்கொண்டாய் அவன் மீதிருந்த காதல் தானே உன்னைத் தலையாட்ட வைத்தது... அதே மாதிரி உன் அண்ணனுக்கும் இருக்க வேண்டுமே..." மனதில் நெருடல்...

"பேசாமல்.. உன் விருப்பப்படி யாரையாவது 'செலக்ட்' பண்ணிக்கோ அண்ணா.. இனி உன்னை வற்புறுத்த மாட்டேன்..." என்று சொல்லிவிட வேண்டியதுதான்.



ஆமாம்.. எனக்கு என் தோழிகளின் நட்பு தான் முக்கியம்.. அண்ணனுக்கு மனைவி தேடப் போய்.. இவர்களைப் பகைத்துக் கொள்ள முடியாது.

இனிமேல்.. இந்த விஷயத்தைப் பற்றி மூச்சு விடவும் கூடாது.

அந்த தீர்மானத்தில் அவள் தன் சிநேகிதிகளைப் பற்றி பேசாமல் இருந்தாள்.

ஆனால்.. பிரதாப் முன்னை விட வெகு தீவிரமாய் அவளது தோழிகளிடம் பழகியது கண்டு கோபமோ கோபம்.

இனி என் கல்லூரிப் பக்கமே வராதே என்று கறாராய் சொல்லிவிட நினைத்தாள்.. ஆனால் என்றைக்காவது அவனது தயவு வேண்டியிருக்குமே...

"சௌமி.. உனக்கு ஒரு குட் நியூஸ்.. என்ன என்று சொல் பார்ப்போம்..." பிரதாப் தங்கையிடம் சொன்னான்.

"அதை நீயே சொல்லிவிடேன்..."

"அரவிந்த் அமெரிக்காவில் இருந்து வர இருக்கிறான்... கூடிய சீக்கிரம் வந்து விடுவான்..."

சௌம்யா உள்ளுக்குள் குதூகலித்தாலும்.. மேலாக அசிரத்தைக் காட்டி பேசினாள்.

"வரட்டுமே.. பெரிய மகாராஜாவாக்கும்... 'பராக்' சொல்லி அழைத்துவர..." என்றாள் கிண்டலாய்.

"ஏ...ய்.. சொன்னாலும் சொல்லாவிட்டாலும் அவன் மகாராஜாவே தான்.. ஏன்.. அதுக்கும் மேல்.. நம் வீட்டின் வருங்கால மாப்பிள்ளையாச்சே..."

"மாப்பிள்ளையா... நான் ஒத்துக்கொண்டப்புறம் தானே அந்தப் பேச்சு..." என்றாள் அசட்டையாக.



"ஆகா.. வார்த்தை தவறி விட்டாய்.. கண்ணம்மா.. என் மார்பு துடிக்குதடீ..." நெஞ்சில் கை வைத்து அவன் ராகம் இழுக்க...

"ஸ்டாப் இட்.. எப்போ உன் வார்த்தையை தவறினாயோ...அப்பவே உன் திட்டமும் அம்பேல்... பதிலுக்கு பதில்... எப்படி.. இனி என்ன செய்வது என்று தலையைப் பிராண்டிக்கோ... வர்றேன்.." என்று போக எத்தனித்தவளை இழுத்து நிறுத்தினான் பிரதாப்.

"என்னடா... உன் சொல்லை என்றைக்காவது தட்டி இருக்கிறேனா... ம்ம்... இந்த அண்ணனை வார்த்தை தவறிவிட்டேன் என்கிறாயே சௌமி..." அப்பாவி போல பேசும் அவனை முறைத்துவிட்டு...

"இந்தப் பேச்சுக்கு ஒண்ணும் குறைச்சல் இல்லை.. நீ எவளையாவது கட்டிக்கோ.. எனக்கென்ன வந்தது.. என் முடிவை நான் வாபஸ் வாங்கிக் கொள்கிறேன். எனக்கும் தலைவலி விட்டது போல இருக்கும்..."

'ஓ' வென்று உரக்க சிரித்தான் அவன்.

"எதுக்கு சிரிக்கிறேண்ணா..." கோபத்துடன் கேட்டாள் தங்கை.

"முதன் முதலா என் தங்கை தன் பிடிவாதத்தை விட்டுவிட்டு ஒதுங்கிப்போகிறாள்.. அதைப் பார்க்கிற போது சிரிப்பு வருகிறது... ஓகே... சௌமி.. இப்ப நான் சொல்வதெல்லாம் உண்மை... உண்மையைத் தவிர வேறு ஏதுமில்லை.. உன் தோழிகளில் ஒருத்தி தான் என் வருங்கால மனைவி.. 'லவ் அட் ஃபர்ஸ்ட் ஸைட்' என்றே வைத்துக் கொள்..இப்ப சந்தோஷம் தானே..."

'ஸ்விட்ச்' போட்டது போல சௌம்யாவின் முகத்தில் ஆயிரம் வால்ட் வெளிச்சம்!

பரபரப்புடன் கேட்டாள்...

"நிஜமாண்ணா.. யார்.. யார் அது.. ப்ளீஸ்.. 'சஸ்பென்ஸ்' வேண்டாம்.. சொல்லிடேன்..."

"அதுதான் இல்லை... நீயே கண்டுபிடி... நீ யார் என்று சரியாக சொல்லிவிடு... உனக்கு அழகான வைர செட் பரிசு..."

"அய்யோ... அண்ணா... இந்த முடுமந்திரம் எல்லாம் எதுக்கு... பட்டென்று உடைத்துவிடேன்... என்னால் 'சஸ்பென்ஸ்' தாங்கமுடியாது..."

"ஊகூம்.. மாட்டேன்.. என் தங்கை புத்திசாலிதானா... என்னை நன்றாக அறிந்து வைத்திருக்கிறாளா என்பதை நான் தெரிந்துக்கொள்ள வேண்டாமா... அதுமட்டும் அல்ல... சௌமி.. வைர நகை பெற உனக்கு ஒரு சான்ஸ் கிடைத்திருக்கிறது.. பயன்படுத்திக்கோயேன்..."

சிரித்தாள் அவள். "ஓகேண்ணா.. எண்ணிப் பத்து நாள்.. பத்தே நாள்.. பாரேன்.. ஈஸியா கண்டு பிடித்துவிடு வேன்... 'வைர செட்'டை ரெடியா வச்சுக்கோ..." என்றாள் வெகு ஜம்பமாய்...

"அப்போ.. அரவிந்தை அமர்க்களமாக வரவேற்கலாம் தானே..." என்று பிரதாப் கேட்டதும்.... வெட்கத்துடன் பலமாய் தலையாட்டினாள் சௌம்யா.

## 8

காரின் மீது சாய்ந்த வண்ணம் கண்களை அலை யோட விட்டு நின்றிருந்தான் பிரதாப்.



தங்கைக்காக மட்டும் அவன் காத்திருக்கவில்லை.

தன் இதயத்தைக் கவர்ந்த இனியவளுக்காகவும் தான்... அடடா! காதலில் காத்திருப்பதும் சுகமே!

வருவாளா... அவள் வருவாளா என்ற படபடப்புடன் கூடிய எதிர்பார்ப்பும்.. அவளைப் பார்த்ததும் என்னவளே... அடி என்னவளே.. என் இதயத்தைத் தொலைத்துவிட்டேன் என்று சொல்ல வேண்டும் என்ற துடிப்பும்.. ஆனால் அவளைக் கண்ட மாத்திரத்தில் எல்லாமே மறந்துவிடும் அதிசயமும்...

காதலுக்கு இத்தனை சக்தியா.. அதனால்தான் காதலுக்காக அப்படி உருகி வழிகிறார்களா...

இதோ.. இப்போது அவனும்தான்...

தன் கண்மணிக்காக தவமிருக்கிறான்.. ஒருவிதத் தவிப்புடன்...

பூப்பூத்த நந்தவனமே நகர்ந்து வருவதுபோல தோழியர் குழாம் வந்துக் கொண்டிருப்பதைக் கண்டதும் தனது கூலிங் கிளாஸை எடுத்து அணிந்து கொண்டான்.

அவனது கண்கள் தன் காதல் தேவதையை விழுங்கிக் கொண்டிருந்தன.

அஜந்தா ஓவியங்களாய் நடந்து வந்த நால்வருமே பூத்த மலர்களைப் போலப் பொலிவுடன் இருந்தனர்.

சௌம்யா பட்டு ரோஜா என்றால்.. ஹேமா மொட்ட விழ்ந்த மல்லி.. கவிதா உள்ளத்தைக் கிள்ளும் லல்லி என்றால்... மதுரா மனதை வருடும் ஜாதி.. மொத்தத்தில் நால்வருமே அழகு மலர்கள்தான்...

மற்ற மாணவர்களின் பார்வை அம்புகள் பொறாமை யுடன் தன் மீது பாய்வதை அவன் உணர்ந்தான்.



கன்னிராசி.. ஊகூம்.. கன்னிகள் ராசி என்று பொருமலுடன்...

"ஹாய் அண்ணா.. ரொம்ப நேரமாச்சா.. நீ வந்து..." அருகில் வந்துவிட்ட சௌம்யா கேட்க...

"அழகான பெண்களுக்காக காத்திருப்பதும் சுகம் தான் சௌமி..." என்று ஆங்கிலத்தில் சொன்னான்.

பெண்ணுக்காகவா.. இல்லை... பெண்களுக்காகவா...

சரி.. அாத யாரைப் பார்த்து சொல்கிறான்...

பாவி. அண்ணா.. வேண்டும் என்றே கறுப்புக் கண்ணாடியை அணிந்து கழுத்தறுக்கிறான்.

ஆனால் அவனது சின்னப் புன்னகையில்.. மதிமயங்கச் செய்யும் வார்த்தைகளில் தன் இரு தோழிகளும் கிறுகிறுத்துப் போனது நிஜம்.

"சரி.. போகலாமா.. சாரதி ரெடி..." என்று காரின் கதவைத் திறந்து விட்டான்.. பவ்யமாய்...

"அண்ணா.. இன்றைக்கு மதுராவும் வருகிறாள்..." புருவங்கள் மேல் ஏற "வாட் எ சர்ப்ரைஸ்" என்று சொன்னான் அவன்.

மதுரா எதுவும் பேசவில்லை... தலை கவிழ்ந்து நின்றிருந்தாள். அவளது விரல்கள் லேசாய் நடுங்கின.

அதைப்பார்த்து அவனுக்கு எரிச்சல்தான் வந்தது என்ன இவள் இப்படிப் பயந்து நடுங்குகிறாள்.. ஏதோ நான் சிங்கம் மாதிரியும்.. அவளை அடித்துத் தின்னத் தயாராக இருப்பது போலவும் அல்லவா அஞ்சுகிறாள்... கவிதாவும் ஹேமாவும் இவளைப் போலத்தானே.. அவர்களுக்கில்லாத அச்சம்.. இவளுக்கு ஏன்... எரிச்சலுடன் காரை இயக்கினான்.



பின் சீட்டில் அமர்ந்திருந்த கவிதாவும் ஹேமாவும் வெகு இயல்பாய் பேசிக் கொண்டு வர.. மதுரா ஏதோ முள் இருக்கையில் உட்கார்ந்திருப்பது போல தத்தளிப்பது தெரிந்தது.

'ரியர் வ்யூ'வில் மதுராவைப் பார்த்தவனுக்கு.. ஏதோ டென்ஷனுடன் வெளியே பார்த்துக் கொண்டிருந்தவளைக் கண்டு மெல்லப் பரிதாபம் தான் தோன்றியது.

இவளைக் குற்றம் சொல்லவும் முடியாது.. இவள் வளர்ந்த விதம் அப்படி.. சௌமி... சொன்னாளே... மதுராவின் தொட்டாற்சுணங்கி குணத்திற்கு அவளது பாட்டி தான் காரணம் என்று...

எதேச்சையாய் திரும்பிய மதுராவின் விழிப்பார்வை முன் கண்ணாடியில் தெரிந்த அவனது கண்களை சந்தித்துவிட்டு.. 'டக்'கென்று தாழ்ந்து கொண்டன. அந்த விழிகளில் மருட்சி... அதைப் பார்த்ததும் அவனது உதடுகளில் புன்னகை... அட... இவளை இப்படி தவிக்கச் செய்வது கூட நன்றாக இருக்கிறது.

சௌம்யா மௌனத்தைக் கலைத்தாள்.

"அண்ணா.. உன் நண்பர் நாளை தானே வருவது..."

"ஆமாம்."

"வந்ததும் ஒரு 'வெல்கம் பார்ட்டி' தர வேண்டாமா."

"இப்போதே ஆரம்பமா.. போச்சுடா..."

"இந்தக் கேலி வேண்டாம்.. நான் சொல்ல வந்தது வேறே. அரவிந்த்தை என் தோழிகளுக்கு அறிமுகப்படுத்தணும்னு இருக்கேன்."

"செய்யலாமே... அரவிந்த் வரட்டும்.. பேசி முடிவு எடுக்கலாம்..."

மதுராவையும்.. கவிதாவையும் வழியில் இறக்கி விட்ட பின்பு வீட்டுக்கு வந்த பிரதாப். தனக்கு அவசர வேலை இருக்கிறது என்று டிரைவரிடம் ஹேமாவை அவளது வீட்டில் விட்டு வரச் சொன்னான்.

இதில் ஹேமாவிற்கு ஏமாற்றமே.

பிரதாப் தன்னைக் காரில் கொண்டு போய் விடுவான் தனிமையில் அவனுடன் பேசலாம் என்ற ஆசை நிராசையானது...

முகவாட்டத்துடன் சென்றாள் அவள்.

அதைக் கவனித்த சௌம்யாவிற்கு லேசாய் நம்பிக்கை துளிர்த்தது...

கவிதாவோ.. அப்படித்தான் இருக்கும்.. இல்லையென்றால் ஹேமாவை விட்டுவர குதித்து சென்றிருக்க மாட்டானா இந்த அண்ணா.

'ஹை' என்று குதித்தது உள்ளம்.. 'யுரேகா' என்று மனம் கூவியது.

'அண்ணா.. தயாராய் வைத்திரு வைர 'செட்'டை.. வெற்றி என்பக்கம்' என்று கொக்கரித்தாள் உள்ளுக்குள் ஆனால்.....

அரவிந்த் வந்தாயிற்று... வசந்தம் வந்துவிட்டது போல உணர்ந்தாள் சௌம்யா.

அரவிந்தும் பிரதாப்பும் பள்ளிப் பருவத்திலிருந்தே நண்பர்கள். பிரதாப் வீட்டிற்கு அவன் அடிக்கடி வருவதுண்டு.

மொட்டாகி.... மலராகி...இப்போது மணம் வீசி நிற்கும் புதுமலராய் இருந்த சௌம்யாவின் மீது இருந்த அன்பு காதலாகி கனிந்தது.



சௌம்யாவிற்கும் தான்... பார்த்து... பழகிய அரவிந்த் மீது வந்த ஈர்ப்பு எப்போது காதலாகியதோ அவளுக்கு தெரியாது.

இருவரின் கண்களும் கலந்தன... இதயங்கள் இடம் மாறின. காதல் நாடகம் அரங்கேறியது.. அதில் மௌன ராகம் மட்டுமே. யாரும் கவனிக்கவில்லை என்ற நினைப்பு காதலர்களுக்கு.. ஆனால் பிரதாப் ஊகித்துவிட்டான்.

வெட்கத்துடன் ஒப்புக் கொண்டான் அரவிந்த்... அவனையே தங்கைக்கு மணாளனாக முடிவு செய்தான் பிரதாப். எப்படி தன் காதலை வெளிப்படுத்துவது என்று தடுமாறிக் கொண்டிருந்த சௌம்யாவிற்கு.. அண்ணனே வந்து 'உன் வருங்காலக் கணவன் அரவிந்த்' என்றதும்.. பழம் நழுவிப் பாலில் விழுந்து.. அது பஞ்சாமிர்தமாய் இனித்தது போல உணர்ந்தாள்.

எப்போது அவன் அமெரிக்காவிலிருந்து வருவான் என்று காத்திருந்தவள்... அவன் வந்ததும் அவனே நினைவானாள்.

அவன் வரும் நாளன்று.. சிரத்தையுடன் தன்னை அலங்கரித்துக் கொண்டாள்.

முதன் முதலாய் அவனைப் பார்ப்பது போல ஒரு பரவசம். ஏதோ கிளர்ச்சி... சொல்லத் தெரியாத உணர்வு!

நன்கு பழகியவன்தான்.. சிறுவயதில் அரட்டை அடித்தவன் தான்.. வாலிப வயதில் வேடிக்கையாய் பேசிச் சிரிக்க வைத்தவன் தான். சரிக்குச் சரியாய் வாயாடினவன் தான்.. இருந்தும்.. இப்போது எங்கிருந்தோ வந்து ஒட்டிக்கொண்டு விட்டதே வெட்கம்!

ஆம்... அவனைப் பார்த்ததும் முகம் சிவந்தவளாய்.. பேச்சிழந்து நின்றாள் சௌம்யா.





அன்றைக்கு அரவிந்த்தின் வருகையைக் கொண்டா வதற்காக ஏற்பாடு செய்யப்பட்ட விருந்து.. 'வெல்க பார்ட்டி...!'

தங்கையின் விருப்பத்திற்கு இசைந்து.. அவனே வெ சிறப்பாய் அதற்கு ஏற்பாடு செய்திருந்தான்.

அலங்கார விளக்குகள் கண் சிமிட்ட... மலர் சரங்க தோரணங்களாய் அசைந்தாட... பூங்கொத்துகள் பீங்கா சாடிகளில் பூத்துச் சிரிக்க.. விளக்கொளியில் பொன்னு பட்டும் தகதகக்க.. பூலோகத்தில் சொர்க்கம் வந்துவிட்ட போல..அந்த இடமே ஒளிர்ந்தது.

வீட்டின் முன் இருந்த பச்சை நிற புல்வெளியி ஆங்காங்கே சாப்பாட்டு மேஜைகளும்.. சுற்றி நாற்கா களும்.. அழகான விரிப்புகளின் மேல் நானும் அழகுதா என்று சிரிக்கும் செயற்கை மலர்களுமாய். அந்த வரவேற் விருந்தில் தான் அரவிந்த்-சௌமியின் திருமண நிச்ச செய்தியை வெளியிட நினைத்தான் பிரதாப்... அதற் அரவிந்தின் பெற்றவர்களின் சம்மதத்தையும்..த தந்தையின் அனுமதியையும் பெற்றாகிவிட்டது.

அந்த விழாவிற்கு பிரதாப்பின் நண்பர்கள்.. அரவி தின் தோழர்கள்.. அரவிந்தின் பெற்றோர்.. சௌம்யாவி சிநேகிதிகள்... இன்னும் தெரிந்தவர் அக்கம் பக்கத்தவ என்று நாற்பதுபேர் வந்திருந்தனர்.

சூழ்நிலையே கலகலப்பாக இருந்தது.

சௌம்யா உற்சாகத்தின் விளிம்பில் இருந்தாள். வா நாளில் மறக்க முடியாத நாள் ஆயிற்றே..!

அரவிந்துக்கும் அவளுக்கும் இடையே இருக்கு உறவுப் பின்னலான அன்பை வெளிச்சம் போட் வெளிக்காட்டும் நாள்!



நூல் இழையாய் இருந்ததை முடிச்சுப் போட்டு உறுதிப்படுத்தும் நாள்!

அவளும் அரவிந்தும் எதிர்கால தம்பதிகள் என்று அனைவருக்கும் உணர்த்தப்போகும் இனிய நாள்...

மயிலிறகால் வருடித்தந்தது போல அவளுள் சிலிர்ப்பு... கண்களில் மின்னல் வந்து தங்கிவிட்டது போல ஒளிவீச்சு... அரவிந்தைப் பார்க்கும் போதெல்லாம் தன் வசம் இழந்தது போலப் பிரமை...

என்ன செய்கிறோம்.. எதைச் செய்ய வேண்டும் என்று தெரியாத ஒரு மயக்க நிலை.. புதுமையான அனுபவம்!

தோழிகள் ஹேமாவும் கவிதாவும் அவளருகிலேயே இருந்தனர். மதுரா இன்னும் வரவில்லை... இன்றைக்கும் கூடவா என்ற வருத்தம் சௌம்யாவிற்கு.

பாட்டியிடம் கெஞ்சிக் கூத்தாடியும் கூட அனுப்பவில்லையே என்று நினைத்தபோது தான் மதுரா வந்து சேர்ந்தாள்.

அரைமணி நேரம்தான் அனுமதியாம்.. சீக்கிரம் திரும்ப வேண்டும் என்று பாட்டியின் கட்டளையாம்.

''இன்றைக்கு ஒருநாள் மட்டும் உன் பாட்டியை மறந்துவிட்டு ஜாலியாக இரேன் மது.. ப்ளீஸ்... எனக்காக'' என்று கெஞ்சிக் கேட்டுக்கொண்டாள் சௌம்யா.

''முயற்சிக்கிறேன் சௌமி. எனக்கும் உங்களைப் போல 'ரிலாக்ஸாய்' இருக்கணும்னு ஆசைதான்டீ.. ஆனால் முடியலையே.. சரி.. அதைவிடு.. இன்னிக்கு இந்த டிரெஸ்ஸில் எப்படி இருக்கே தெரியுமா சௌமி. வானத்திலிருந்து இறங்கி வந்த அப்சரஸ் மாதிரி இருக்கே... அத்தைக்கிட்டே சொல்லி திருஷ்டி சுத்திப் போட்டுக்கோடீ''

''நிஜமாவாடீ.. இந்த பார்ட்டிக்காக வாங்கியது மது.. கட்டறப்போ கொஞ்சம் 'ஓவரா' இருக்குமோன்னு நினைச்சேன்... நீ சொன்னதும் தான் நிம்மதியாச்சு...'' என்று தன் உடையை ஒரு தடவை பார்த்துக் கொண்டாள் அவள்.

ஆகாய வண்ணத்தில் சேலையில் முழுவதுமாய் ஜிகு ஜிகு என்று தங்கத்தினால் இழைத்தது போல அழகிய கை வேலைப்பாடு.. அதற்குப் பொருத்தமாய் அதே வண்ண ரவிக்கை.. அதன் கழுத்துப்பகுதியிலும் பின்புறமும் விலையுயர்ந்த குந்தன் கற்கள் பதிக்கப்பட்டு இருந்தது.

நீண்ட சங்கிலியும்.. உள்கழுத்து நெக்லஸும் அவளது நீள் கழுத்தை அலங்கரித்தன... கூந்தலை அழகாய் பின்னலிட்டு.. தலை நிறைய மல்லிகையைச் சூடி இருந்தாள்.

கைகளில் பொன் வளைகளின் இடையே... உடைக்குப் பொருத்தமாய் வெளிர் நீலக் கண்ணாடி வளையல்கள்.

அவளது தோழிகளும் சளைக்கவில்லை.. அழகுப் போட்டியில் கலந்து கொள்வது போல மின்னினார்கள்.

கவிதா ஐஸ்கிரீம் பிங்க் நிறத்தில்.. பன்னீர் ரோஜா பூத்தது போல வந்திருந்தாள்.. அதற்கு ஏற்ற மாதிரி ஜெய்ப்பூர் நகைகள் அவளது மேனியில் ஒளிர்ந்தன. ஹேமாவோ மஞ்சள் 'பின்னி' பட்டில் சூரியகாந்தியாய் இருந்தாள்...

இவர்களின் மத்தியில் மதுரா எளிமையாய் தெரிந்தாள். இலைப் பச்சைப் பட்டுப்புடவையுடுத்தி.. கழுத்தில் சின்னச் சங்கிலியும்... காதில் சின்னதாய் ஜிமிக்கி... கரங்களில் பச்சை நிறக் கண்ணாடி வளையல்கள்.

அந்த விருந்துக்கு வரவும் தயக்கம்தான்... தங்கமும் வைரமும் புழங்கும் இடத்தில்.. தான்.. அந்த இடத்திற்கு கொஞ்சமும் பொருத்தமின்றி.. வேண்டாமே. பேசாமல்



திரும்பிவிடலாம் என்று நினைத்தபோது சௌம்யா ஓடிவந்தாள்.

''டீ... மது... வா.. வா..உனக்காகத்தான் நான் காத்திருக்கிறேன். ஏண்டீ.. 'லேட்'டு... ஹேமாவும், கவிதாவும் அப்பவே வந்தாச்சு தெரியுமா.. சரி.... வா.. அரவிந்தையும் அவர் குடும்பத்தையும் அறிமுகப்படுத்திவைக்கிறேன்...''

தோழியின் கையைப் பிடித்து இழுத்துக் கொண்டு நடந்த போது தயக்கம் மறைந்தே போனது.

உண்மையான அன்பு.. ஆத்மார்த்தமான அன்பு, பணத்தையும் பகட்டையும் எதிர்பார்க்காது தான்...

அரவிந்தைப் பார்த்த மாத்திரத்தில் மதுராவிற்கு பிடித்துவிட்டது... சிரித்த முகமும்.. பழகும் விதமும் அவளைக் கவர்ந்து விட்டது.

சௌம்யாவிற்கு ஏற்ற ஜோடிதான்... வெகு பொருத்தமான ஜோடி!

பிரதாப் தன் நண்பர்களுக்கு சௌம்யாவையும் அரவிந்தையும் அறிமுகப்படுத்தினான்.

அப்போது அவனது முகத்தில் தெரிந்த பெருமிதம்!

இந்த பொற்சிலைதான் என் தங்கை என்ற பெருமை! கூடவே அவளது தோழிகளையும்...

பிரதாப்பின் நண்பன் ஒருவன் ''வாரே வா.. அத்தனை அழகிகளும் ஒட்டு மொத்தமாய் உங்க வீட்டை குத்தகை எடுத்துவிட்டார்கள் போல.. இல்லே... ஏதாவது ''அழகிப் போட்டியா.. எப்படியோ.. எங்கள் கண்களுக்கும் நல்ல விருந்து தான்...'' என்று கூற... புன்கையுடன் தலையசைத்தான் பிரதாப்.



இன்னொரு தோழன் பரிகாசமாய் ''தங்கைக்கு கல்யாணம் ஆகிவிட்டதும் 'லைன் கிளியர்' தானே.. அடுத்து பிரதாப்புக்கு...'' என்றதும்..

''ஒரு சுயம்வரமே நடத்திடலாம் போல..ஆமாம் இத்தனை வண்ணத்துப்பூச்சிகளில் எதை 'செலக்ட்' பண்ணியிருக்கே நண்பா.. சொல்லேன்...'' என்றான் மற்றவன்.

''ஆமாம்டா.. யார் உன் ஆள்னு சொன்னா... மத்தவங்களுக்கு எங்க பயோடேட்டாவைத் தரலாமேன்னுதான்...'' என்ற நண்பனுக்கு புன்னகையுடன் பதில் தந்தான் பிரதாப்.

''நேரம் வந்ததும் சொல்கிறேன்.. அது வரைக்கும் பொறுமையா இரு.. ரங்கா.. எல்லோருக்கும் 'டிரிங்க்ஸ்' கொடு.. விநாயகத்தையும் கூப்பிடு..'' விநாயகம் சொல்லி வைத்ததுபோல டிராலியைத் தள்ளிக்கொண்டு வந்தான். மதுபானமும்.. குளிர்பானமும் விநியோகிக்கப்பட்டது.

பிரதாப் தன் தந்தையை அர்த்தத்துடன் பார்க்க.. அவரும் தலையசைத்தார்.

''சௌம்யா.. அரவிந்த் திருமணவாழ்வு சிறப்பாய் விளங்க...'' என்று அவன் வாழ்த்தியதும்.. அனைவரும் சியர்ஸ் என்றனர்.

சௌம்யாவும் அரவிந்தும் முகம் சிவந்து போனார்கள். வந்திருந்தவர்கள் வாழ்த்துக்கூறி கைக்குலுக்கினார்கள். ஹேமாவிற்கும் கவிதாவிற்கும் இத்தகைய விருந்துகள் எல்லாம் சர்வ சாதாரணம் தான். '

ஆனால் மதுராவிற்கு இதெல்லாம் பழக்கமில்லை... ஆண்கள் மதுவருந்தும் பழக்கம் எல்லாம் அவளது வீட்டில் கிடையாது.



இதுமட்டும் பாட்டிக்கு தெரிந்தால்.. அய்யய்யோ.. வேறு வினையே வேண்டாம்.

சீக்கிரமே இங்கிருந்து கிளம்ப வேண்டும்.. உள்ளுக்குள் நடுங்கினாள் மதுரா.. மனம் 'திக் திக்' என்று அடித்துக் கொண்டது.

மெல்ல சௌம்யாவின் அருகே சென்று 'சௌமி' என்று அழைத்தாள்.

''என்னடீ மது...'' என்று அவள் கேட்க...

''நான் புறப்படுகிறேனே.. வந்து முக்கால் மணி நேரம் ஆகிவிட்டது.. அங்கே பாட்டி எனக்காக காத்திருப்பாள்'' என்றாள்.

''உஷ்... இன்னும் விருந்தே ஆரம்பிக்கவில்லை டீ... இரு... நானே உன்னை கொண்டு போய் விடுகிறேன்.. போதுமா.. பாட்டிக்கு நான் சொல்லிக் கொள்கிறேன்.. கவலைப்படாதே மது...'' என்று சௌம்யா சொல்லிவிட.. வேறு வழியின்றி இருந்து விட்டாள் அவள்...இருந்தும் தவிப்பு தீர்ந்தபாடில்லை.

பிரதாப் வந்த விருந்தினர்களை கருத்துடன் உபசரித்தான். ஒதுங்கியே நின்ற மதுராவிடம் ''என்ன மதுரா... இன்றைக்காவது கொஞ்சம் ரிலாக்ஸாக இருக்கக் கூடாதா...'' என்றான் அவன்.

நேரம் ஆக.. ஆக மதுரா புழுவாய் துடித்தாள்... கடவுளே.. பாட்டியிடம் வாங்கிக் கட்டிக்கொள்ள வேண்டுமே...

நல்லவேளையாய் தாத்தா வந்து சேர்ந்தார். அவரைப் பார்த்ததும் நிம்மதியுடன் பெருமூச்சு விட்டாள் மதுரா.

அவரை வரவேற்ற பிரதாப்.. ஒரு தட்டில் உணவு வகைகளை வைத்துக் கொண்டு வந்து தந்தான்.

"வேணாம்ப்பா.. வயசாச்சு.. இதெல்லாம் ஒத்துக்கா
வெறும் பால் போதும்..." என்றார் தாத்தா.

அவருக்கு பால் கொண்டு வந்து தந்தான் அவ
டிரைவரை அழைத்து இருவரையும் அவர்களது வீட்டி
விட்டு வரும்படி சொல்ல...

அவனது பண்பையும் அடக்கத்தையும் பார்த்து பெ
வரின் மனம் குளிர்ந்து போனது.

காரிலிருந்து இறங்கி வீட்டை நோக்கிச் செல்லுகையி
பிரதாப்பை மெச்சியவாறு நடந்தார்.

"எத்தனை நல்ல மனசு.. கொஞ்சமும் தலைகன
இல்லையே... ஒண்ணுமில்லாமல் அரைகுறையா இரு
தாலே குதியாட்டம் போடற இந்தக் காலத்தில்.. படிப்பு
பணமும் இருந்தும் துளியும் கர்வம் இல்லையே.. நல்
குடும்பம்.. அம்மாடி.. உன் பாட்டிகிட்டே விருந்தை
பத்தி எதுவும் சொல்லாதே.. தாம் தூம்னு குதிப்பாள்..
என்றார் அவர்.

மதுராவும் அதையேத்தான் நினைத்தாள். பாட்டியிட
மூச்சுவிடக் கூடாது.. அப்புறம் தாத்தா சொல்வதுபோ
ஆகாசத்துக்கு குதிப்பாள்.. அது மட்டும் இல்லை
மறுபடியும் எந்த 'ஃபங்ஷனு'க்கும் அனுப்பமாட்டாள்

ஏதோ பெரிய மனசு பண்ணி அனுப்பினாளே... அதுவே
பெரிசு.. அதுவும் சௌமி வந்து கெஞ்சியதற்கு... பாவ
சௌமி.. என்னைப் பார்த்ததும் எப்படி மலர்ந்து போனா

பெருமையாய் அரவிந்தனிடம் அறிமுகப்படுத்தி
னாளே... அரவிந்தனும் எத்தனை நல்லவர்.. சௌமியா
விற்கு வெகு பொருத்தம்!

தாத்தா சொல்வதுபோல நல்ல குடும்பம்.. அதுவும்
தாத்தா பிரதாப்பைப் பற்றி புகழ்ந்தது தான் அதிசயம்.



அத்தனை சீக்கிரம் தாத்தா இந்தக் காலத்துப்பிள்ளைகளை மெச்சமாட்டார்... அவரே சிலாகித்துப் பேசுகிறார் என்றால்...

உண்மைதான்.. பிரதாப் வித்தியாசப்பட்டுத்தான் தெரிந்தான்.

ஏனோ இந்தத் தடவை அவனது முகத்தில் புலி தெரியாததுதான் அதிசயம்!

அவனது சிரித்த முகம்.. பழகும் விதம்.. விருந்தோம்பும் பண்பு.. அட! அவன் மீது இருந்த தப்பான எண்ணம் பறந்தே போனது.

சௌமி சொன்னது நிஜம்தான்.. பழகுவதற்கும் இனிமையானவன்!

அவளுக்கே வியப்பு.. நானா.. நானா அப்படி நினைப்பது.. இருந்தும்.. ஏதோ ஒரு பயம்.. தயக்கம் அவனிடம் பேச விடாமல் தடுக்கிறது. ஏன்.. அவன் பெரிய இடத்துப் பிள்ளை என்பதாலா.. இல்லை.. பாட்டிக்கு அது பிடிக்காது என்ற காரணமா...

ப்ச்சு.. அவனிடம் பேசி என்ன செய்யப்போகிறோம் என்று நினைத்தவள் அதை மறந்துவிட்டாள்.

## 9

விருந்து முடிந்ததும் கவிதாவை அழைத்துச் செல்ல கார் வந்துவிட்டது.

ஹேமாவுக்கோ அங்கேயே தங்கவேண்டிய நிலை... ஹேமாவின் தந்தை காரை எடுத்துக் கொண்டு ஹைதரா

பாத்திற்கு சென்றுவிட்டதால் அழைத்துச் செல்ல யாரு வரவில்லை.

சௌம்யா அவளிடம் "கவலைபடாதேடீ... என அண்ணாகிட்டே சொல்லி உன்னைக் கொண்டு போய் விடச் சொல்கிறேன்..."என்றாள்.

ஹேமாவின் இதயம் துள்ளியது. ஆகா... பிரதாப்புடன் தனிமையில் தானும்..

ஆனால் அத்தை மறுப்பு சொன்னாள்.. "பதினொரு மணிக்கு மேல் வயசுவந்த பெண்ணைக் கொண்டு போய் விடுவதாவது.. அக்கம்பக்கத்தவர்கள் என்ன நினைப்பார் கள்.. ஊகூம்... அது சரியில்லை.. இன்றைக்கு ஹேமா இங்கேயே தங்கிக் கொள்ளட்டும்" என்று சொல்லி விட்டாள்.

உடனே ஹேமாவின் வீட்டிற்குப் போன் செய்து விஷ யத்தை சொன்னார்கள்.

ஹேமாவிற்கு இறக்கை முளைத்து ஆகாசத்தில் பறப்பதுபோல இருந்தது.

ஆகா.. பழம் நழுவி பாலில் விழுந்து அது பஞ்சாமிர்த மாகி விட்டதே.. சந்தோஷம் இரட்டிப்பாகியது.

ஒரே வீட்டில்.. பிரதாப் இருக்கும் வீட்டில் தங்க வேண் டிய சூழ்நிலை உண்டானதை நினைத்து பரமானந்தப்பட் டாள். கிளர்ச்சியில் உடம்பும் மனமும் பரபரத்தது.

அவனுடன் பேச.. பழக.. அவனது கவனத்தைப் பெற கடவுளே ஒரு வழிகாட்டியிருப்பதாய் எண்ணி நன்றி சொன்னாள்.

விருந்தாளிகள் அனைவரும் சென்றபின்பு... பணியாட்கள் வீட்டை ஒழுங்குபடுத்தினர்.



அரவிந்தனும் அவனது பெற்றோர்களும் புறப்பட்டு சென்றதும் அத்தை படுக்க சென்றாள்.

பிரதாப் எங்கே.. ஹேமாவின் கண்கள் தேடின..

"ஹேமா.. அத்தை எங்கே" என்று கேட்டுக்கொண்டு அவனே அங்கு வர 'ஹை' என்று எம்பிக் குதித்தது உள்ளம்.

"அத்தையா.. படுக்கப் போயாச்சே..." மனம் படபடக்க பதில் சொன்னாள்.

"நீ மட்டும் தனியாக இருக்கிறாய்.. சௌம்யா எங்கே.. உன்னை விட்டு விட்டு எங்கே போனாள்..." என்று பிரதாப் கேட்க...

"என்னண்ணா... என் தலை உருளுகிறது..." என்று கேட்டுக் கொண்டு அங்கே வந்தாள் சௌம்யா.

"என்ன சௌமி.. கொஞ்சமும் பொறுப்பு இல்லாமல்.. ஹேமா.. இன்றைக்கு நம் 'கெஸ்ட்...' அவள் தூங்க வேண் டும்.. அறையைக் காட்டு..." ஹேமாவிற்கு 'சப்'பென்று ஆனது.

தூக்கமா.. அது வருமா.. ஒரே வீட்டில்.. பிரதாப் அருகாமையில் இருக்கிற நினைப்பில் கண் மூடாதே...

அந்தக் கிளுகிளுப்பு அவனுக்கில்லையா.. ஏமாற்றத் துடன் நினைத்தாள்.

"கொஞ்ச நேரம் நாம் பேசலாமேன்னுதான் ஹேமாவை இருக்கச் சொன்னேன் அண்ணா. போய் உடை மாற்றிக் கொண்டு வந்தேன்..." என்றாள் தங்கை.

"ஓ! பேசலாமே..." என்று அவன் உட்காரப் போகும் போது...



அந்த சமயம் பார்த்தா சுந்தரம் வந்து மகனை அழை வேண்டும்.

தோள்களை குலுக்கிவிட்டு சென்ற பிரதாப்பை நிராசையுடன் பார்த்தாள் ஹேமா.

அதை உணரும் நிலையில் சௌம்யா இல்லை... அ விந்தைப் பற்றி மணிக் கணக்கில் பேசினாள்... இருவரு பேசி முடித்துவிட்டு தூங்கச் சென்ற போது நடுநிசி தாண்டி விட்டிருந்தது.

மறுநாள் காலை...

தூக்கத்திலிருந்து விழித்தவளுக்கு முதலில் எங்கே இருக்கிறோம் என்று புரியாத நிலை.

ஓ! பிரதாப் வீடு!

அந்த நினைவில் 'ஜிவ்'வென்று புத்துணர்ச்சி அவளு ளூடுருவியது.

உற்சாகமாய் எழுந்து போய் 'ஷவரில்' குளித்தாள்.

சௌம்யாவின் உடுப்பை உடுத்திக் கொண்டவ சிரத்தையுடன் தன்னை அலங்கரித்துக் கொண்டாள்.

'ஹீல்'ஸை அணிந்து மாடியின் வளைவுப் பகுதிக்கு வந்து நின்று கீழேப் பார்த்தாள்.

தன் மனம் கவர்ந்த இனியன் யாருடனோ 'செல்'லி பேசிக் கொண்டு அமர்ந்திருப்பதைக் கண்டதும் இரத் ஓட்டம் சூடாகிப்போனது.

சில வினாடிகள் அவனையே பார்த்தவாறு நின்றிரு தாள்.

என்னமாய் அழகு.. ஆணழகன்! ராஜகம்பீரம் என்பா களே.. அது இதுதானா... இவனை மணாளனாய் அடைய



பாக்கியம் தனக்கு இருக்கிறதா.. பெருமூச்சு விட்டாள் அவள்.

போனை அணைத்துவிட்டு அவன் திரும்ப... அவள் விலகி நின்றாள்.

அவனது பார்வையில் படக்கூடாது.. அவனையேப் பார்த்துக் கொண்டு நிற்பதை அவன் அறியக்கூடாது. அவசர அவசரமாய் இறங்கினாள்.

மூன்று படிகள் இறங்கியதும் மாடிப்படிகளில் விரிக்கப் பட்டிருந்த கம்பளத்தில் ஹீல்ஸ் சிக்கி.. கால் இடறியது. இரண்டு படிகளை நழுவ விட்டாள். உருண்டு சென்றவளை மற்றொரு வளைவின் கைப்பிடி தடுத்து நிறுத்தியது.

ஹேமாவை எழுப்ப வந்த சௌம்யா.. ஹேமா இறங்கி வருவதைக் கண்டு காத்திருந்தாள். ஆனால் தடுமாறி உருள ஆரம்பித்ததும் 'அய்யோ... ஹேமா' என்று அலறிய வாறு அவளை நோக்கி ஓடினாள்.

அதிர்ச்சியில் கண்களை மூடிப் படுத்திருக்கும் தோழியை எழுப்ப முயன்று..முடியாமல் அண்ணனை அழைக்க.. அவனும் பரபரப்புடன் வந்தான். அவனது முகத்தில் 'அய்யோ.. பாவம்' என்ற பரிதாபம் தெரிந்தது.

"அண்ணா... ஹேமாவை எழுப்ப ஒரு கைக் கொடேன்... ப்ளீஸ்" என்று அவள் சொல்லவும்.. பிரதாப் தன் வலிய கரத்தால் அவளைத் தூக்க உதவினான்.

அந்த அதிர்ச்சியிலும் அவனது ஸ்பரிசம் அவளை சிலிர்க்க வைத்தது. மெல்ல எழுந்து நின்றவள்... நிமிர்ந்து அவனைப் பார்த்தாள்.. அவனும் அவளைப் பார்க்க...

அவளது நெஞ்சுக் கூட்டுக்குள் ஆயிரம் பட்டாம்பூச்சி களின் சிறகடிப்பு.. ஏதோ கிறுகிறுப்பு... அவன் அரு காமையில் வந்த கிறக்கம்!

தலை சுற்றுவது போல இருந்தது... அவனது தொடுகை யால் இல்லை.. காலில் ஆயிரம் ஊசிகளால் குத்துவது போன்ற வலியால்... வலியின் மிகுதியில் ஹேமா முகம் சுளித்தாள். 'ஸ்ஸ்... ம்மா...' என்று முணகினாள்.

"சௌமி.. ஹேமாவை நடத்திச் சென்று சோபாவில் உட்கார வை..." என்றான் பிரதாப்.

"அய்யோ.. என்னால் முடியவில்லை சௌமி.." என்று ஹேமா சுணங்கவும்.

"அத்தை.. அத்தை..." என்று அழைத்தான். நடந்ததை அறியாத அத்தை... வலியில் தவித்துக் கொண்டிருக்கும் ஹேமாவைப் பார்த்து திகைப்பு!

"என்னம்மா ஆச்சு.. ஹேமா... ஏன் நொண்ட்றே" என்று கேட்டாள்.

நடந்ததை ரத்ன சுருக்கமாய் சொல்லிவிட்டு "நீங்களும் சௌமியும் சேர்ந்து இவளை அழைத்துப்போய் அறையில் படுக்க வையுங்கள். நான் டாக்டருக்கு போன் பண்ணி விட்டு வருகிறேன்" என்று நகர்ந்தான் அவன்.

"பாவமே... சந்தோஷமாய் வந்த பொண்ணு சந் தோஷமா திரும்பிச் செல்லாமல் இப்படியா ஆகணும். ஈசுவரா..." அத்தை புலம்பலுடன் ஹேமாவை ஒரு கை பிடித்தாள்.

சௌம்யாவிற்கு வெகு குழப்பம்...

அண்ணனின் முகத்தில் ஏதாவது வேதனை ரேகை தெரிந்ததா... குறைந்த பட்சம் வருத்தத்தின் சாயல்... ஊகூம்... அவனது முகத்தில் எந்தவித சலனமும் இல்லையே... கல் மாதிரி முகத்தை வைத்திருக்கிறானே... என்னதான் போட்டியில் தோற்கக் கூடாது என்று நினைத்



தாலும்.. காதலிக்கு விபத்து என்ற போதாவது உணர்ச் சியைக் காட்டாமல் இருப்பது ஏன்... ஒரு வேளை.. பிரதாப் ஹேமாவைக் காதலிக்கவில்லையோ...

அடச்சே! நினைக்க நினைக்க தலைதான் சூடேறு கிறது.

அந்த நேரத்தில் டாக்டரும் வர.. கவனம் திரும்பியது.

பலமான அடியேதும் இல்லை.... 'ட்விஸ்ட்' ஆகி யிருப்பதால் வந்த வலி.. அவ்வளவுதான்.. சரியாகிவிடும் என்றார் டாக்டர்.

மனநிம்மதியுடன் அவளை வீட்டுக்கு அனுப்பி வைத்தனர்.

## 10

கல்லூரி அமளிதுமளிப் பட்டது.

காலேஜ் டே ஆயிற்றே... அதுதான் அத்தனை அமர்க் களம்.

அந்த நாளை வெகு விமரிசையாய் கொண்டாட மாண வர்கள் முனைப்பாக இருந்தனர். கல்லூரியின் இண்டு இடுக்கு விடாமல் சுத்தம் செய்து... காகிதத் தோரணங் களைக் கட்டினார்கள். பூச்சாடிகளில் பூக்கள் ஆங்காங்கே சிரித்து வரவேற்க.. அதற்குப் போட்டியாய் மாணவிகளும் வண்ண உடைகளில் அன்றலர்ந்த மலர்களாய் உலவி வர... காண கண்களுக்கு விருந்துதான்.

வெறும் படிப்பு மட்டும் இல்லை.. எங்களுள் திறமை களும் ஒளிந்திருக்கிறது என்று காட்டத் துடித்துக்



கொண்டிருந்தனர் மாணவச் செல்வங்கள். நிச்சயம் சௌம்யா குழுவிற்கு அதில் பங்கு உண்டு.

அனைத்திலும் சுட்டிகளாயிற்றே...

சௌம்யாவின் நடனம்.. நாடகங்களில் கவிதாவும்.. ஹேமாவும்.. மதுரா வெறும் பாட்டு மட்டுமே!

இரண்டு வருடங்களாய் வெளிநாட்டில் இருந்து விட்ட பிரதாப்பை கண்டிப்பாய் வரவேண்டும் என்று அழைத் தாள் தங்கை.. கூடவே அரவிந்த்தும் தான்.

மதுராவின் இனிமையான குரலில் கடவுள் வாழ்த்துப் பாடலுடன் ஆரம்பித்தது கல்லூரி விழா.

இரண்டு நிகழ்ச்சிகளுக்குப்பின் சௌம்யாவின் நடனம்.

வள்ளித் திருமணம்!

வள்ளியாகவும் குறத்தியாகவும் மாறி மாறிஅவளே நடனமாடினாள். இனிமையான தமிழ் பாடலில்.. தன் முகபாவங்களை அழகாய் காட்டி... மானாய் துள்ளி.. மயிலாய் நடந்து..ஒயிலாய் அவள் ஆடி முடித்ததும்.. கைத்தட்டல் ஆரவாரத்தில் அந்த அரங்கமே அதிர்ந்தது.

பிரதாப்பின் முகத்தில் பெருமிதம்! அதே சமயம் வியப்பும் கூட... என் தங்கையா! வாயாடிப் பெண்ணா இப்படி அருமையாக ஆடியது... அவளிடம் இத்தனை திறமை இருக்கிறதா... ஏதோ ஆடப் போகிறாள்.. பார்த்து வைப்போம் என்று வந்தவனுக்கு உண்மையில் பிரமிப்பு! மகிழ்ச்சி வெள்ளத்தில் அவனே ஆடிப்போனான். இதயம் விம்மியது.

இவன் நிலை இப்படி.. அரவிந்த்.... சொல்லவும் வேண்டாம்.



அவனே மானசீகமாய் வேல் முருகனாகிப்போய்.. சௌம்யாவிடம் பறந்துவிட்டான்... மயில் வாகனம் இல்லாமலே!

சௌம்யாவின் அழகும்.. திறமும் அவனைத் தேன் குடித்த நரியாக்கிவிட்டது. கண் கொட்டாமல் தன் இனிய வளையே பார்த்துக் கொண்டு மதிமயங்கி இருந்தான். சுற்றுப்புற சூழ்நிலை மறந்தே போனது. இப்போது அவ னது பிரபஞ்சத்தில் அவனும் சௌம்யாவும் மட்டுமே...

கைத்தட்டல் ஓசையில் அரங்கம் ஆடிப்போனது.

ஹேமாவின் நாடகம் வந்தது.. குறை சொல்ல முடியாத நடிப்புதான்... திறமையாய் நடித்தாள்.

மறுபடியும் மதுரா வந்து மைக்கைப் பிடித்தாள். குழையும் குரலில் அழகான பாட்டு ஒன்றைப் பாடினாள்.

'சொன்னதை செய்திட சாகசமா கிளியே...'

'மண்ணும் விண்ணும் இந்த மாயலோக மெல்லாம் மாதவன் மயமாகி மனதை மயக்குதடி...'

பாடலின் உருக்கம் அனைவரின் மனதையும் கட்டி இழுத்தது.. மீண்டும் பலத்த கரகோஷம்...

கவிதா தன் பங்கிற்கு 'ஹேம்லெட்'டாக வந்தாள். ஆங்கில நாடகம்... ஹேம்லெட்டின் குழம்பிய மன நிலையை அப்படியே நடிப்பில் வெளிக் காட்டினாள்.

மேடையின் அலங்கார மாற்றத்திற்கு கொஞ்சம் அவ காசம் வேண்டியிருந்ததால் மறுபடியும் மதுரா வந்தாள்.

இந்த முறை அவளுக்கு பிடித்த பாரதியாரின் பாட்டைப் பாடினாள்.

'சின்னஞ்சிறு கிளியே.. கண்ணம்மா...' தேன் போன்ற அவளது குரலில் அந்த சின்னஞ்சிறு கிளி.. பஞ்சவர்ணக்

கிளியாய் தெரிந்தது... கேட்டிருந்தால் பாரதியார் பெருமைப்பட்டிருப்பார்.. அத்தனை இனிமை!

'கன்னத்தில் முத்தமிட்டால் உள்ளம் தான் கள்வெறி கொள்ளுதடீ...'

குழந்தையை மெச்சும் தாயின் பூரிப்பு!

கேட்பவரின் உள்ளத்தில் கள்ளுண்ட மயக்கம்!

'உன் கண்ணில் நீர் வழிந்தால் என் நெஞ்சில் உதிரம் கொட்டுதடீ.. என் கண்ணின் பாவையன்றோ... கண்ணம்மா.. என்னுயிர் நின்னதன்றோ...' மெய் சிலிர்க்க வைத்த அந்தப்பாடலில் மெழுகாய் உருகிப்போன பார்வையாளர்களும் மாணவர்களும் 'ஒன்ஸ்மோர்' என்று கூவினர்.

மதுரா உள்ளே ஓடிவிட்டாள்.

ஒரு வழியாய் கலை நிகழ்ச்சிகள் முடிய ஒன்பதை மணிக்கு மேல் தாண்டியது.

கவிதாவிற்கும் ஹேமாவிற்கும் அவரவர் வீட்டு கார்கள் வந்து விட்டன.

பிரதாப்பிடம் இருந்து பாராட்டைப் பெற்றுவிட வேண்டும் என்று ஆர்வமாய் இருந்தார்கள் இருவரும். மூவரும் சேர்ந்து வந்தனர்.

சௌம்யா ஆர்வத்துடன் அரவிந்தைப் பார்த்தாள். 'என் திறமை எப்படி...' என்ற கேள்வி அவளது கண்களில் தெரிந்தது. அதைப் புரிந்து கொண்டவனாய் "வொண்டர்ஃபுல் சௌமி.. அருமையாய் ஆடினே... ஆகா.. அப்படியே முருகனாய் மாறி உன்னிடம் வந்துவிடலாமா என்று பார்த்தேன்... ஊகூம் முடியலே..." என்று ஏமாற்ற குரலில் சொன்னான் அரவிந்த்.



"அதுசரி.. நீ போய் நின்றாலும்.. அவள் ஆடுவாளா என்ன.. அம்மணி அப்படியே சிலையாகி விடமாட்டாளாக்கும்..." என்று பிரதாப் கேலி செய்தான்.

"போதும்.. போதும்.. என்னை மட்டும் பாராட்டினா எப்படி.. என் தோழிகளைப் பற்றி ஏதும் இல்லையாக்கும்.. அண்ணா.. என் சிநேகிதிகளின் நடிப்பு எப்படி இருந்தது..." என்று கேட்டாள் தங்கை.

"வொண்டர்ஃபுல்..." என்றான் அரவிந்த்.

"உன் தோழிகளாயிற்றே என்று அசட்டையாக பார்த்தேன்.. ஆனால் இத்தனை 'டேலண்ட்' இருக்கும் என்று நினைக்கவில்லை.. ரியலி... சூப்பர்ப்! ஹேமா.. உன் நடிப்பு 'எக்ஸெலண்ட்...' கவிதா... உன் 'ஃபெர்பார்மன்ஸ்' வொன்டர்ஃபுல்... கங்கிராட்ஸ்.. மதுராவை ஊமைக் குயில் என்று நினைத்தேன்... இப்போதான் தெரிந்தது.. கவிக்குயில் என்று.. மொத்தத்தில் நீங்கள் அத்தனை பேரும் திறமைசாலிகள் என்பதை இப்போது ஒப்புக் கொள்கிறேன்..." என்றான் பிரதாப்.

சௌம்யாவிடம் ஏமாற்றம் தெரிந்தது.

அடச்சே.. இப்படி ஒட்டு மொத்தமாய் புகழ்கிறானே... குறிப்பாய் ஒருத்தியை மெச்சினால் தெரிந்துகொள்ளலாம்.. இவனை... பற்களைக் கடித்தாள் அவள்.

ஆனால் ஹேமாவும் கவிதாவும் பிரதாப் வாயிலிருந்து வந்த பாராட்டில் குளிர்ந்து போய்.. தன் வசம் இழந்து நின்றனர். ஏதோ சாதனை செய்து விட்டது போல புளாங்கிதம்!

அந்த நேரத்தில் கவிதாவின் டிரைவர் வந்து அழைக்க.. செல்ல மனமின்றி விடைப் பெற்றுக் கொண்டு சென்றாள் அவள்.



ஓரக்கண்ணால் அண்ணனின் முகத்தைப் பார்த்தாள் ஊகூம்.. உணர்ச்சிகளைத் துடைத்தது போல சலனமில்லாமல் இருந்தது.

ஹேமா சென்றபோதும் அப்படியே..

அன்றைக்கு உன் தோழிகளில் ஒருத்தியை 'செலக்ட்' பண்ணிவிட்டேன் என்றானே.. அது பொய்யா... என்னை ஏய்க்கும் எண்ணமா... மை காட்! பொங்கும் சினத்தை அடக்க வழி தெரியாமல் தவித்தாள் சௌம்யா.

"என்ன.. சௌமி.. போகலாமா.." என்று கேட்ட அண்ணனை ஒரு மாதிரியாக பார்த்தாள். நடிக்கிறானா... அப்போது தான் நினைவுக்கு வந்தது.

ஆமாம்.. இந்த மதுரா எங்கே காணோம்.. கண்ணில் படவில்லையே.. கண்களால் தேடினாள் சௌம்யா. அனைத்து அலங்கார சாதனங்களையும் அவளிடம் ஒப்படைத்திருந்தார்.. நிகழ்ச்சியின் பொறுப்பாளர்... விஜி மேடம்.. அவற்றையெல்லாம் ஒப்படைத்து வர வேண்டியிருந்தது... அது நினைவுக்கு வர.. அவளுக்காகக் காத்திருந்தாள்.

தாத்தாவால் வர முடியாது என்பதால்.. இவளே அவளை அழைத்து செல்ல வேண்டியிருந்தது.

மதுரா தாமதமாக வந்தாள்.

"ஏண்டி இத்தனை லேட்.. சீக்கிரம் கொடுத்துவிட்டு வரக்கூடாதா..." என்றாள் தோழியிடம்.

"நான் என்னடீ செய்வேன்.. ஒவ்வொன்னையும் 'செக்' பண்ணி வாங்கிக் கொண்டார் விஜி மேடம் அதான். ஆமா எங்கே.. கவியும் ஹேமாவும்.. அதுக்குள்..." அப்போதுதான் சற்றுத்தள்ளி பிரதாப்பும் அரவிந்தும் நிற்பதைக் கவனித்தாள்.



அவளுக்கு திகைப்பு.. இவனும் வந்திருக்கிறானா... சௌமி சொல்லவில்லையே.. அரவிந்த் வருவான் என்று தானே சொன்னாள்.

இப்போது இவனுடனா காரில் பயணம்.. தெய்வமே!

பிரதாப்பும் அவளது திகைப்பைக் கண்டுவிட்டு குறுஞ்சிரிப்பை உதிர்த்தான்.

விழிகள் பெரியதாய் விரிந்து.. வெடித்த மாதுளம் பூவாய்.. சிறுவட்டமாய் மலர்ந்த இதழ்கள் மெலிதாய் துடிக்க... சிலையாய் அவள் நின்றது அவனுக்கு வேடிக்கையாய் இருந்தது.

ஏன் இந்தப் பதட்டம் இவளுக்கு...

அதே குறுஞ்சிரிப்புடன் "சௌமி.. உன் சிநேகிதியிடம் சொல்.. நான் ஒன்றும் அவளை விழுங்கி விட மாட்டேன் என்று.. எனக்கு ஆளைத் தின்று பழக்கமில்லை என்று சொல்..." என்றான்.

ஏற்கனவே உள்ளுக்குள் புகைந்து கொண்டிருந்தவளுக்கு அவனது விஷமப்பேச்சு எரிச்சலைத் தந்தது.

யாரிடம் என்ன பேசுவது என்ற விவஸ்தையே இல்லையா இவனுக்கு.. எதற்காக மதுராவை சீண்டுகிறான்... அவள்தான் ஒதுங்கியே இருக்கிறாளே. ராஸ்கல்... அத்தையிடம் சொல்லணும்.. என்று பொருமியவள்...

"உஷ்.. அண்ணா.. திரும்ப ஆரம்பித்துவிட்டாயா... எதையாவது சொல்லி அவளை பயமுறுத்தினால் எனக்கு கெட்ட கோபம் வரும். ஆமாம். ஏய் மது.. நீ அவனை சட்டை செய்யாமல் வா... என் அண்ணா எப்பவும் அப்படித்தான் அதுவும் நீ பயப்படறே என்று தெரிந்து கொஞ்சம் சீண்டிப் பார்க்கிறான். நீ கண்டுக் கொள்ளாதேடீ..

இன்னும் கொஞ்சநாள் தான் இவனோட ஆட்டம்.... வாய்ப் பூட்டு போடறதுக்கு ஒருத்தி வந்ததும் அய்யா 'கப்சிப்' தான். அதுக்கப்புறம் யாரிடமும் இந்த மாதிரி பேசமுடியுமான்னு பார்க்கலாம்.. அதுவரைக்கும் பொறுத்துதான் போகணும் என்கிற தலையெழுத்துடீ. பொறுப்போம்.''

அதைக் கேட்டு விட்டு அரவிந்த் வாய் விட்டு சிரித்தான்.

மதுவுக்குதான் தத்தளிப்பாக இருந்தது... காரில் வசதியாக அமர்ந்திருந்தாலும்.. ஏனோ முள் இருக்கையில் உட்கார்ந்திருப்பது போல இம்சை... சீக்கிரம் வீடு வந்தால் தேவலை என்று தவித்துக் கொண்டு தலை குனிந்து அமர்ந்திருந்தாள்.

பிரதாப் நண்பனைக் கேட்டான். ''அரவிந்த் எப்படித் தான் இந்த வாயாடியை சமாளிக்கப்போகிறாயோ... உன்னைப்பார்க்க பாவமா இருக்குடா...'' அவன் குரலில் பரிகாசம் தெரிந்தது.

''அதுதான் எனக்கு தெரியல்லே நண்பா.. ஏதோ உன் துணை இருக்கிறது என்ற தைரியம்.. ம்ம்... அமெரிக்கா போய் வருவதற்குள் உன் தங்கையிடம் இத்தனை மாற்றமா.. அம்மாடி! அதெப்படி.. மௌன கௌரியா இருந்த சௌமி இப்படி வாயாடிப் பொண்ணா மாறிப்போனாள். கடவுளே.. இனி... என் கதி...'' என்று போலியாய் பயப்படுவதுபோல் செய்ய...

சௌம்யா அவனது இடுப்பில் கிள்ளினாள். 'அவுச்' என்று அலறினான் அவன்.

''இது தேவையாடா...'' என்று பிரதாப் கேட்க... இதையெல்லாம் பார்த்துக் கொண்டிருந்த மதுரா 'களுக்' என்று சிரித்து விட்டாள்.



'சட்'டென்று காரை நிறுத்தினான் பிரதாப். காரின் 'வைப்பரை' இயக்கினான்.

''என்னாச்சு அண்ணா...'' குழப்பத்துடன் கேட்டாள் தங்கை.

''இன்னும் கொஞ்ச நேரத்தில் இடியுடன் கூடிய மழை வரும் போலத் தெரிகிறது.. எதுக்கும் முன் ஜாக்கிரதையுடன் இருக்க வேண்டும் இல்லையா.. அதான்.''

''அய்யோ.. வானிலை அறிக்கையில் சொன்னார்களா அப்ப.. சீக்கிரம் வண்டி எடேன்.. மழை வருவதற்குள் வீடு சேர்ந்துவிடலாம்.. எந்த நேரத்தில் மழை கொட்டுமோ என்று இப்போதெல்லாம் தெரிகிறதில்லை.. திடீர் திடீர் என்று வந்து பயமுறுத்துகிறது...போண்ணா.. வானிலை அறிக்கையைப் பத்தி உனக்கே மறந்துவிட்டதாக்கும்.. இப்ப சொல்றே...''

''ப்ச்சு.. இது அவர்களுக்கே தெரியாதும்மா.. உன் தோழி அத்திப் பூத்தது போல சிரிப்பாள் என்று அவர்களுக்கு எங்கே தெரியும். தெரிந்திருந்தால் அவர்கள் முன் கூட்டியே சொல்லியிருப்பார்கள்.. பாரேன்.. 'திடும்' என்று பேய் மழைக் கொட்டப் போகிறது.. எல்லோரும் அதிசயிக்கப்போகிறார்கள்...''

அண்ணனைப் பார்த்து முறைத்தாள் சௌம்யா..

''அத்தனையும் ரீலாக்கும்.. சே.. நான் உண்மையாகவே பெரும் மழையில் சிக்கிப்போமோ என்று எண்ணிப் பயந்து விட்டேன்.. நீ சொல்ற மாதிரி ஒண்ணும் கிடையாது.. மதுரா எங்களோடு எப்பவும் சிரித்துப் பேசுவாள்.. தெரிஞ்சுக்கோ...''

''அடே! அப்படியா.. நான் என்னவோ.. அதிசய ராஜகுமாரி அபூர்வமா சிரித்தாள்... வாயிலிருந்து முத்துக்



கள் உதிர்ந்து ஓடின என்று சொல்வார்களே.. அந்த மாதிரி முத்து உதிரப்போகிறதோ என்னவோ.. அப்புறம் எடுக்கவோ.. கோர்க்கவோன்னு நாம் அலையவேண்டுமேன்னு நினைத்தேன்'' என்று குறும்புடன் சொன்னான் பிரதாப்.

மதுராவிற்கு இந்த மாதிரி பேச்செல்லாம் பழக்கமில்லை என்பதால்.. மனதுக்குள் நொந்து கொண்டாள்.

தன் நிலைமை அவனுக்கு தமாஷாகப்படுகிறதோ என்று துடித்தாள்.

கண்களில் நீர் தளும்பல்...

திமிர்ந்தவளின் விழிகள் அவளையும் அறியாமல் முன் கண்ணாடியில் பதிய.. அங்கு ஏற்கனவே பதிந்திருந்த இரண்டு கண்கள்.. விழித்தாமரைகளில் பூத்த பனித்துளிகளை பார்த்தன. அந்தக் கண்களுக்கு உரியவனின் மனசுக்குள் பிசைந்தது.

'இந்தப் பெண்ணை ரொம்பவும் நோகடித்து விட்டேனோ... அடுத்த கணமே.. நான் என்ன அப்படிசொல்லி விட்டேன்... எதற்காக இந்தக் கண்ணீர்.. இதையே ஹேமாவிடமோ.. இல்லை கவிதாவிடமோ பேசியிருந்தால்.. பதிலுக்கு ஏதாவது ஜோக்காக பேசியிருப்பார்கள்.. டேக் இட் ஈஸியாக எடுத்துக் கொண்டிருப்பார்கள்.. இவள் சரியான அழுமூஞ்சி...' என்ற கோபம் வந்தது.

மதுராவின் வீடு வந்துவிட... நிம்மதியாய் பெருமூச்சு விட்டாள் அவள்.

''தாங்க்ஸ்'' என்ற முணுமுணுப்புடன்.. வீட்டிற்குள் விரைந்த அவளை விசித்திரமாய் பார்த்தான் பிரதாப்.

''இந்தக் காலத்தில் இப்படியும் ஒரு பயப்பிராணியா.. சௌமி.. இவள் எப்படி உனக்கு நண்பியாக இருக்கிறாள் உனக்கு நேர் எதிர்...'' என்றான் வியப்புடன்.



''அதுதானே! இது உலகமகா அதிசயம்தான்'' என்றான் அரவிந்த்.

''அவள் ஒன்றும் அப்படி இல்லை.. எங்களுடன் சகஜமாக பேசிப் பழகுவாள்.. ஆண்கள் என்றால் கொஞ்சம் உதறல்தான்.. நத்தையாய் ஒடுங்கிவிடுவாள்.. மதுராவின் பாட்டியைப் பத்தி உங்களுக்கு தெரியாது... அத்தனை கண்டிப்பு.. சரி.. கொஞ்சம் இருங்க... நான் போய் பாட்டியிடம் பேசிவிட்டு வருகிறேன்.. நாம் தான் கொண்டு வந்து விட்டோம் என்று அவங்களுக்கு தெரியணும்'' என்று சென்றாள் அவள்.

ஆண்கள் இருவரும் பொறுமையுடன் காத்திருந்தார்கள்.

## 11

வெகு நேரமாகியும் உறக்கம் வராமல் தவித்தாள் மதுரா.. மனம் தெளிவாக இருந்தால் தானே உறக்கம் வரும்.

அவளது மனம் குட்டையாக குழம்பியிருந்தது.

பிரதாப் ஏன் தன்னிடம் இப்படி கேலியும் கிண்டலுமாகப் பேசுகிறான்.

ஹேமாவிடம் கௌரவமாய் பேசுபவன்.. கவிதாவிடம் கண்ணியத்துடன் உரையாடுபவன்... தன்னை மட்டும் ஏன் இப்படிப் பரிகாசம் செய்து வதைக்கிறான். அவன் கண்களுக்கு நான் கேலிப் பொருளாகப் படுகிறேனா என்ன.

ஒருவேளை.. நான் ஏழை என்பதாலா இப்படி வார்த்தைகளால் வாட்டுகிறான்.

அவர்களுக்கு இணையான அந்தஸ்தில் இல்லாதது தான் காரணமா... ஏழை என்றால் மோழையும் பாயும் என்று பாட்டி சொல்வது இதுதானா.. வேதனையில் உள்ளம் துடித்தது.. அவமானத்தில் உடம்பு கூசியது.. இயலாமையில் கண்கள் பொங்கியது.

இனி ஒதுங்கி விடலாம் என்று தோன்றினாலும் சௌம்யாவின் அன்பு அவளைக் கட்டிப்போட்டது. அவளுக்காக.. அவளது முகத்திற்காக இதை சகித்துதான் தீரணும். ஆமாம்.. சௌமி என் உயிர் தோழி.. அவளது நட்பு அற்புதமானது.. அதற்காக எதையும் செய்யலாம்.. அவளது அண்ணனை.. அவனது கிண்டலை சகித்துக்கொண்டு தான் வேண்டும். உலகில் விலைக்கட்ட முடியாதது பவித்திரமான நட்புதான்.. அந்த நட்பை இழக்கக் கூடாது. என் சௌமியின் சிநேகம் எனக்கு வேண்டும்.. கடைசிவரை தொடர்ந்து கிடைப்பதாக வேண்டும்.

பெரிய பணக்காரியாக இருந்தும் கர்வமில்லாமல் பழகுகிறாள். பெரிய தொழிலதிபரின் செல்ல மகள் இருந்தும் ஏழையான என்னை மட்டும் உயிர்த் தோழியாய் மதிக்கிறாள். அவளுக்காக ஆயிரம் பிரதாப்களின் பரிகாசங்களைப் பொறுத்துக் கொள்ளலாம்தான். அந்த அன்புத்தோழிக்காக அது கூடவா செய்யக் கூடாது...

என் சௌம்யாவிற்கு அண்ணியாக இருக்க ஹேமாவோ கவிதாவோ யாராக இருந்தாலும்.. கொடுத்து வைத்திருக்க வேண்டும். உண்மையில் அதிர்ஷ்டகாரிதான் அவள். பெருமூச்சு விட்டாள் மதுரா.

எனக்கு அந்தக் கொடுப்பினை இல்லை.. சௌம்யாவிற்கு உறவாக மாற எனக்கு அதிர்ஷ்டம் இல்லை. மனசுக்குள் ஏக்கம் தலையெடுத்த போது தான் 'சுருக்' என்று நெருடியது.



சௌம்யாவின் அண்ணியாக என்றால்.. பிரதாப்பிற்கு மனைவி என்றல்லவா... அதை எப்படி மறந்துபோனேன். அந்த நினைப்பே அவளை அதிர வைத்தது. என்ன மடத்தனமான ஆசை.

பிரதாப்பை மணந்தபின்பு தானே சௌமிக்கு அண்ணியாக முடியும்.

அவனுக்கு மனைவியாகவா.. அம்மாடி! வாழ்நாள் முழுக்க அவனது கேலிப் பேச்சை கேட்க வேண்டி வருமே.. இது தேவையா...

அதே நேரம் உள்ளத்து ஓரத்தில் சன்னமாய் ஒரு குரல்.. அழகு.. படிப்பு.. செல்வம் எல்லாமே அமைந்திருக்கும் அவனை மணக்க எந்தப் பெண்ணிற்கு கசக்கும் என்று முணுமுணுத்தது.

இருக்கட்டுமே... அவன் அழகன் தான்.. நன்கு படித்தவன் தான்.. செல்வ சீமான்தான்.. இவை எதுவுமே என்னைக் கவரவில்லையே...

ஒரு பெண்ணின் மனதை வருடித்தராதவனுக்கு.. இல்லை.. வருடித்தர தெரியாதவனுக்கு என்ன இருந்து பிரயோசனம்...

ஒரு பெண்ணின் மனதை வெல்ல ஒரு இதமான புன்னகை போதும்.. பரிவான வார்த்தைகள் போதும்.. நிச்சயம் வென்று விடலாம்.. பிரதாப்பிடம் இந்த இரண்டுமே இல்லையே.. எப்படி என் மனதை..'திடுக்'கென்று எழுந்து அமர்ந்தாள்.

மைகாட்! நினைவோட்டம் எங்கெல்லாம் போகிறது. கன்னாபின்னாவென்று இதென்ன கண்றாவி எண்ணங்கள்.. என்றைக்கும் இல்லாத நினைப்புகள்.. சே..



பாட்டி எனக்காக நிச்சயித்திருக்கும் கிருஷ்ணா இருக்கிறதை மறந்துவிட்டு.. இப்படியெல்லாம் மனது அலைபாய விட்டேனே.. என்னவாயிற்று எனக்கு மனதில் படபடப்பு.. பதட்டத்தில் வியர்வையின் வழிசல் நாக்கு வரண்டு போனது. கண்களை இறுக்க மூடிக் கொண்டாள்.

அவள் மட்டுமா.. கவிதாவும் ஹேமாவும் தான்.. தூக்கம் இல்லாமல் புரண்டு புரண்டுப் படுத்தார்கள்.

என்னவெல்லாம் நினைத்துக் கொண்டு போனோம் எதுவும் நடக்கவில்லையே..

பிரதாப்பிற்காக பிரத்யேகமாக அலங்கரித்து சென்றது வீண் ஆனதே...

தங்கள் அழகின்மேல் அவர்களுக்கு இருந்த கர்வம் கரைந்து போனது என்னவோ உண்மை.

ஒரு ஆண்மகனைக் கவராத அழகும் ஒரு அழகா. ஆனானப்பட்ட விசுவாமித்திரரே மேனகையிடம் சரணடைந்து விட்டாரே.. பெண்வாடையே அறிந்திராத ரிஷ்யசிருங்கர் கூடப் பெண்ணழகில் மயங்கி வந்தாரே. ஆனால் பிரதாப்பிடம் சிறு சலனமும் இல்லையே.

தன் அன்பைக் குறிப்பாக உணர்த்தியும் அவன் புரிந்து கொள்ளாமல் இருக்கிறானே... ஒருவேளை புரியாதவன் போல நடிக்கிறானோ... ஏக்கம் வாளாய் கூறுபோட தூக்கத்தை தொலைத்துவிட்டுக் கண் முழித்திருந்தனர்.

மூன்று பெண்களின் நினைவில் தான் நிறைந்து இருக்கிறோம் என்பதை உணராதவனாய் பிரதாப் நிம்மதியாய் உறங்கிக் கொண்டிருந்தான்.

அவன் முகத்தில் மகிழ்ச்சியின் வருடல் தெரிந்தது. உதடுகளில் லேசாய் புன்னகையின் கீற்று.. ஏதாவது



கனவோ.. தன் மனம் கவர்ந்தவளுடன் உல்லாசமாய் இருப்பது போலவா... இருக்கலாம்.. யார் கண்டது...

"இன்னும் இரண்டு நாட்களே பாக்கி..." ரொட்டிக்கு ஜாம் தடவிக் கொண்டிருந்த தங்கையிடம் சொன்னான் பிரதாப்.

"எதுக்கு" புரியாமல் கேட்டாள் சௌம்யா.

"மக்கு... மறந்துவிட்டதா... உனக்கு வரப்போகும் அண்ணி யார் என்று நீ கண்டு பிடித்துச் சொல்வதற்கு..."

"ஓ!" என்றவள் ரொட்டியை விழுங்கிவிட்டு...

"பத்து நாட்கள் என்றேன் இல்லை.. இன்னும் இரண்டு நாட்களா.. போதுமே.. கண்டுபிடித்து விடுகிறேன்... பாரேன்" என்று வெகு ஜம்பமாய் கூறினாலும்.. உள்ளுக்குள் உதைத்தது. முடியுமா.. இந்த அழுத்தக்காரனின் முகம் கல் மாதிரி இருக்கிறதே.. ஒரே மாதிரி பழகுகிறான்.. யாரை என்று சொல்வது.

"பார்க்கத்தானே போகிறேன்" என்று கேலியாய் சொல்லிவிட்டுச் சென்றான் பிரதாப்.

அத்தையிடம் ஓடினாள் சௌம்யா.

"அத்தை.. ஏதாவது ஒரு ஐடியா கொடுங்களேன் அண்ணனின் மனசில் யார் இருக்கிறார் என்பதை கண்டுபிடிக்க..." என்று சிணுங்கினாள்.

"இந்தா.. இந்த விளையாட்டுக்கெல்லாம் நான் வரல்லை. என்னை விட்டுவிடு... நீயாச்சு... உன் அருமை அண்ணனாச்சு..." என்று சலிப்போடு சொன்னாள் அத்தை.

அவளது மோவாயைப் பிடித்துக் கெஞ்சினாள் சௌம்யா.

"அத்தை.. செல்ல அத்தை.. இது என் சுயமரியாத... பிரச்சனை.. நான் ஜெயித்தே ஆகணும்.. தோல்வி... என்னால் தாங்க முடியாது.. ப்ளீஸ்.. அத்தை..." கேட்... வேண்டுமா.. அத்தை கரைந்துவிட்டாள்.

"அப்படி என்ன நல்ல ஐடியாவா நான் சொல்ல... போகிறேன். ஒண்ணு செய்.. ஹேமாவிற்கும் கவிதாவி... கும் உடம்பு சரியில்லைன்னு சொல்.. அவன் யாரை... பார்க்கப் போகிறான்னு பார்க்கலாம்... பூங்கொத்தோடு... வாங்கிச் சென்று பார்ப்பான்.. இல்லையா.. அப்பே... தெரிஞ்சிடும்..." முகம் சுளித்தாள் சௌம்யா.

"அத்தை.. உங்க அருமந்தப் புத்திரனைப் பத்திச் சரி... உங்களுக்கு தெரியாது.. நான் கண்டுபிடித்து விடக்கூடா... என்பதற்காக எதுவும் செய்யமாட்டான்... ரொம்... அழுத்தக்காரன்..."

"காதல் வந்தாச்சுன்னு சொன்னான் இல்லையா.. நிச்சயம் முகத்தில் வாட்டம் வரும்.. அப்புறம் என்ன..! தான் ஜெயிச்சே.. இப்ப என்னை விடு..எனக்கு வேலை... இருக்கு.."

சௌம்யா யோசனையில் ஆழ்ந்தாள்... அத்தை சொ... வது போல செய்யலாமா.. குட்டு வெளிப்படுமா... சரி... செய்துதான் பார்ப்போமே என்ற தீர்மானத்திற்கு வரு... போதுதான் அவளது சிநேகிதிகள் இருவரும் வீடு தே... வந்தது. ஆக.. அத்தையின் ஐடியாவும் புஸ்வாணம்தான்...

வீட்டில் போரடித்ததாம்.. சௌம்யாவுடன் சேர்ந்து 'கம்பைன் ஸ்டடி' பண்ணலாம் என்று முடிவு செய்து கொண்டு வந்துவிட்டார்களாம்.

அதுமட்டுமா காரணம்...



இல்லை என்பதுபோல அவர்களது கண்கள் அலை பாய்ந்து யாரையோ தேடின.

அவர்கள் தேடிய நபர் அந்த வீட்டில் இல்லை.. அலுவலகத்திற்கு சென்றிருந்தான்.

இப்போதெல்லாம் பிரதாப் தந்தையோடு கம்பெனிக்கு செல்ல ஆரம்பித்திருந்தான்.

அன்றைக்கு அதிசயமாய் பன்னிரண்டு மணிக்கு வந்ததுதான் ஆச்சர்யம்.

அரவிந்த் வருகிறேன் என்று சொல்லியிருந்தானாம். அவனை சந்திக்க வேண்டி சீக்கிரமே வந்துவிட்டான். அரவிந்த் வருகிறாரா.. இதயம் எம்பியது... அடடா.. தெரிந்திருந்தால் எங்கேயாவது 'பிக்னிக்'க்கு அரேன்ஜ் பண்ணியிருக்கலாமே.. இப்போதும் மோசமில்லை.. செல்லலாம் தான்.. ஹேமாவும் கவிதாவும் இருக்கிறார்கள். ஜாலியாகப் பொழுது போகும். அண்ணனிடம் சொல்ல திரும்பினாள்.

அவன் கவிதாவை குசலம் விசாரிப்பது கண்டதும் உள்ளம் 'ஹை' என்று குதித்தது. 'சிக்கிக் கொண்டான்..' என்று நினைத்தவள்.. அதே கரிசனத்துடன் ஹேமாவிடம் நலம் கேட்பதைக் கண்டு 'யூ... அண்ணா.. ராஸ்கல்' என்று மனசுக்குள் திட்டித் தீர்த்தாள்.

அரவிந்த்தும் வந்துவிட.. அவளது 'பிக்னிக்' யோசனை அனைவராலும் அங்கீகரிக்கப்பட்டது. போகும் வழியில் மதுராவையும் அழைத்துச் செல்லவதாய் முடிவு செய்தாள்.

அத்தை ரொம்ப தூரம் என்றால் வரமாட்டேன் என்று உறுதியாகச் சொல்லிவிட்டதால்.. நாற்பத்தைந்து கி.மீ. தூரத்தில் இருக்கும்.. சுந்தரத்தின் நண்பருக்குச் சொந்தமான 'ஃபார்ம் ஹவுஸ்'க்குப் போகலாம் என்று முடிவானது.



கோடைகாலத்தில் தன் குடும்பத்தினருடன் வந்து தங்கியிருந்துவிட்டுச் செல்வது வழக்கம். மற்ற நேரத்தில் அதைக் கனித்துக் கொள்ள பொறுப்பான ஆளை ஏற்பாடு செய்திருந்தார். வீட்டை சுத்தமாய் வைத்திருக்க பணி... யாளும்.. அங்கேயே வசிக்கும் சமையல்காரரும் இருந்ததால் எப்போது வேண்டுமானாலும் போய் இருக்கலா... என்ற சௌகர்யம்தான்.

பிரதாப் தந்தையிடம் 'பிக்னிக்' விஷயத்தைச் சொல்ல.. அவரும் உடனே நண்பருக்குப் போன் செய்து விஷயத்தை... சொல்லிவிட்டார்.

நேரே மதுராவின் வீட்டிற்குச் சென்று பாட்டியிட... அனுமதி கேட்க.. அவர் மறுத்துவிட்டார்.

"படிக்கறதுக்கு லீவு கொடுத்திருக்கா.. இப்படி ஊ... சுற்றினா எப்போப் படிக்கிறது..." என்ற கேள்வி வேறு.

பிறகு தாத்தா உதவிக்கு வர... அரைமனதுடன் பேத்தியை அனுப்பி வைத்தாள் பாட்டி.

அதுவும் சீக்கிரமே வந்து விட வேண்டும் என்ற நிபந்தனையுடன்.

இந்தமட்டும் அனுப்பினாரே என்ற குதூகலத்துடன் தலையாட்டிவிட்டுப் புறப்பட்டனர்.

"என்ன கூத்து இது.. இப்படி கண்டவங்களோட மதுராவை அனுப்பணுமா.. நீங்களும் அதுக்கு ஒத்து ஊத... றேளே... பொண் குழந்தைகளை அடக்கித்தான் வளர்க்கணும். இப்படி கண்டபடி திரிய விடக்கூடாது. தெரிஞ்சுக்கோங்கோ." என்று தாத்தாவிடம் பாய்ந்தாள் பாட்டி.

நல்லவேளை.. அதற்குள் வாசலில் இருந்த காரு... கிளம்பிவிட்டது. காதில் விழாத தூரத்திற்கு அவர்கள் சென்று விட்டனர்.



பணம் இருந்தால் மட்டும் போதாது. அதை அனுபவிக்கத் தெரிந்திருக்க வேண்டும் என்பதற்கு அந்த 'ஃபார்ம் ஹவுஸ்' ஒரு உதாரணம்.

இப்போதெல்லாம் பெரிய மனிதர்கள்... செல்வச் சீமான்கள் எல்லாம் தங்களின் ஓய்வு வாசத்திற்கு இந்த மாதிரி இடங்களை வாங்கிப் போடுவது வழக்கமாகிவிட்டது.

இயந்திரமான வாழ்க்கையில் அலுத்துப் போய்.. வெறும் கான்கிரீட் கட்டிடங்களைப் பார்த்துப் பார்த்துச் சலித்துப் போன மனதுடன்.. எப்போதடா ஓய்வெடுப்போம்.. எங்கே போய் உல்லாசமாகப் பொழுது போக்குவோம் என்று துடிக்கும் இதயங்களுக்கு பண்ணை வீடுகள் வரப்பிரசாதம் தான்.

வரண்டு போயிருக்கும் கண்களுக்கு குளிர்ச்சியாய் பசுமை... உலர்ந்து போன சிந்தைக்கு இதமாய் ஓய்வு.. துவண்டு போன உடம்பிற்கும்... மனதிற்கும் புத்துயிர் ஊட்ட நல்ல பொழுதுபோக்கு.

சுற்றிலும் தோப்பும்.. நடுவே அழகான.. கச்சிதமான வீடும்.. பார்க்க வெகு அம்சமாய் இருந்தது. அவர்கள் வருகிறார்கள் என்ற முன்னறிவிப்பில்... இளநீர் சீவி வைத்தும்.. பப்பாளிப் பழங்களை தோல் நீக்கி... துண்டுகளாக்கி... அதில் உப்பும் மிளகுத்தூளும் தூவியும்.. பலாப் பழச்சுளைகளை கொட்டை நீக்கி.. தேனோடு சேர்த்தும்.. வாழைப்பழத்தை துண்டுகளாய் அரிந்து அதனுடன் வெல்லமும் தேங்காயும் சேர்த்து வாசனைக்கு ஏலப்பொடி கலந்தும்.. வெள்ளரிப் பிஞ்சுகளை நறுக்கி மேலே உப்பும் காரமும் தூவி வைத்தும்... இத்தனையுமா என்று திகைக்கும்படி எல்லாம் அவர்கள் முன் பரப்பி வைக்கப்பட்டன. தின்றது செரிக்க தோப்பை ஒரு சுற்றுச்

சுற்றி வந்தனர். கையுடன் கொண்டு வந்த கேமராவில் கண்ணைக் கட்டியிழுத்த இயற்கைக் காட்சிகளையெல்லாம் படம் பிடித்தான் பிரதாப்... அப்படியே வந்த அனை வரையும்.. குழுவாய்.. தனித் தனியாய்.. ஜோடியாய் என்று விதவிதமாய்...

அடர்ந்த மரங்களின் நிழல் வெய்யிலுக்கு இதத்தை தர..அனைவரும் அதன் அருமையை அனுபவித்தனர்.

மரங்களில் சில குரங்குகள் தாவி விளையாடிக் கொண் டிருந்தன. அவை தாவி.. வெகு வேகமாய் மரங்களில் ஏறுவது பார்க்க வேடிக்கையாக இருந்தது. ஒரு குரங்கு அழகாய் இளநீர் காயொன்றைப் பறித்து அதற்கு துளை போட முயன்று.. முடியாமல் அதை கீழே எறிந்தது. அதை இன்னொரு குரங்கு எடுத்துக் கொண்டு ஓடுவதை பார்த்து அனைவரும் ரசித்துச் சிரித்தனர்.

"குரங்கிலிருந்து மனுஷன் பிறந்தான் என்கிறது இ தனை நிஜம் பாரேன்.. மனுஷங்க மாதிரியே செய் றதை..." என்று அத்தை சொல்லவும்,

"அய்யோ.. அத்தை.. இப்பத்தான் உங்களுக்கு தெரிந் ததா..." என்று சௌம்யா சொன்னாள்.

"அதானே.. சௌமியைப் பார்த்தாவது தெரிந்திருக்க வேண்டாம்.. அப்பப்போ குரங்கு மாதிரி பாய்கிறாளே.." பிரதாப் கேலி செய்ய,

"அத்தை.. குரங்குக்கு அண்ணா யாராக இருக்க முடியும் சொல்லுங்கள்" என்று பதில் குத்து கொடுத்தாள் சௌம்யா.

"மொத்தத்தில் ஒரு குரங்கு கூட்டத்திலா நான் மா பிள்ளையாகப் போகிறேன்.. ஓ காட்.." என்று வானத்தை பார்த்து அரவிந்த் புலம்பினான்.



"என்னப்பா அரவிந்த்... சந்தடிசாக்கில் என்னையும் சுந்தரத்தையும் குரங்கு என்கிறாயே..." என்று அத்தை கூறவும்.. அரவிந்த் முகத்தில் அசடு வழிந்தது. அதைப் பார்த்துவிட்டு மற்றவர்கள் சிரித்தனர்.

அடர்ந்த மாந்தோப்பில் இருந்து மாம்பூவின் வாசம் காற்றுடன் கலந்து நாசியை வருடித்தர... சுக்மாக இருந்தது.

"அண்ணா.. மாமரங்களில் காய்கள் நிறைய இருக்கு ஏறிப் பறிக்கலாமா..." என்று சௌம்யா கேட்டதும்..

"பார்த்தாயா அரவிந்த்.. நான் குரங்குதான்னு என் தங்கை நிருபித்துவிட்டாள்..." என்றான் அண்ணன்.

அரவிந்த் மாமரத்தின் கிளைகளைப் பிடித்து அதை வளைத்து கீழே கொண்டு வர.. மாங்காய்கள் கைக்கு எட்டும் தூரத்தில் வந்தது. "பறித்துக் கொள் சௌமி..." என்றான் அரவிந்த்.

"அடடா.. என்ன கரிசனம்... என்ன அக்கறை... என் தங்கை என் என்றதும் எண்ணையா வழிகிறானே.. வேண்டாம் நண்பா.. இது ஆண் குலத்திற்கே அவ மானம்..." என்று நண்பனைக் கிண்டலடிக்க...

"குரு.. நீயும் அதையேத்தான் செய்யப்போகிறாய். அதை நானும் பார்க்கத்தான் போகிறேன்..." என்று பதிலடிக் கொடுத்தான் தோழன்.

"அதுவும் சரிதான்.. முன் ஏர் போற வழியில் தானே பின் ஏர் செல்ல வேண்டும்.. இந்த விஷயத்தில் நீதான் எனக்கு குரு.. புரிந்து கொள்ளப்பா..."

அதற்குள் தோழிகளின் துணையுடன் நிறைய மாங் காய்களைப் பறித்து விட்டாள் சௌம்யா. மரத்தடி நிழலில் "அப்பாடா... கொஞ்ச நேரம் இங்கு உட்கார்ந்து இளைப் பாறலாம்..." என்று அமர்ந்து கொண்டாள் அத்தை.



மாங்காயை நறுக்க ஆரம்பித்த சௌம்யா... "அத்தை. இந்த மாதிரி 'அக்' மார்க் காத்து நம்ம 'சிடி' பக்கம் கிடைக் காது. நிறைய மூச்சிழுத்து உள்ளே 'ஸ்டாக்' பண்ணிக் கோங்கோ..." என்றாள்.

"உண்மைதான்.. இந்தமாதிரி தோப்பு.. நடுவே அழகான வீடு.. சுற்றிலும் கண் குளிர வைக்கும் பசுமை அடடா இதுவல்லவோ சொர்க்கம்... என்ன அரவிந்த் இதைப் பார்க்கிறபோது.. பிஸினஸ்.. பணம்.. லாபம் என்று ஓடுவதை விட்டுவிட்டுப் பேசாமல் இந்த மாதிரி இடத்தில் இருந்துவிடலாம் என்று தோன்றுகிறது.. என்ன சொல்கிறாய்..."

மரத்தின் மேல் சாய்ந்தபடி.. தனது இரு கரங்களையும் தலைக்குப் பின் கோர்த்துக் கொண்டு.. 'ரிலாக்ஸாக' அமர்ந்திருந்த பிராதாப் சொன்னதும்...

"ஏதேது.. காணி நிலம் வேண்டும் பராசக்தின்னு பாரதி யார் பாடியது மாதிரி நீயும் பாட ஆரம்பிச்சிடுவே போலி ருக்கு..." என்றான் அரவிந்த்.

மாங்காய் துண்டுகளில் உப்பையும் காரத்தையும் தூவிக்கொண்டிருந்த சௌம்யா "ஓ! அப்படியும் பாடலாமே.. இங்கே தான் நம் மதுரா இருக்கிறாளே. மது டியர்.. ஒரு பாட்டுப் பாடேன்.. ப்ளீஸ்..." என்று வேண்டினாள்.

"போடி.. நினைத்த நேரத்தில்.. நினைத்த இடத்தில் எல்லாம் பாட முடியாது.. பாடவும் வராது..." என்று மென்குரலில் கிசுகிசுத்தாள் மதுரா.

"ஏண்டி..அத்தனை பேர் முன்னால மேடையில் உன்னால் பாட முடிந்தது.. இங்கே பாட முடியலையா. இந்தக் கதை தானே வேண்டாம் என்கிறது..."



"ஆமாம்மா மதுரா.. நீ ரொம்ப நல்லா பாடுவேன்னு சௌமி சொன்னா.. எங்கே பாடேன்..." அத்தையும் சேர்ந்து கொள்ள.. மதுராவிற்கு தத்தளிப்பாக இருந்தது.

"இங்கேயா.. எப்படி..." என்று இழுத்தாள் அவள்.

"இங்கே தான்.. 'பிக்னிக்' வந்தா பாட்டு.. டான்ஸ் எல்லாம் இருக்கணும்.. அப்போதான் குஷி.."

"ஆமாம்.. அடுத்து சௌம்யா டான்ஸ் ஆடுவா.. என்ன முறைக்கறே.. சௌமி.. அன்னிக்கு ஆடினேயே.. வள்ளித திருமணம்... அதையே ஆடு.. பார்க்கிறோம்..." என்றான் அரவிந்த்.

"அப்பா.. நாயகா நீ வேண்டுமானாலும் உன் வருங் கால மனைவியோட நடனத்தை திரும்ப பார்த்து ரசி.. எங்களை விட்டுவிடு.. நாங்க ஜுட்..." என்று அலறினான் பிரதாப்.

"என் நடனம் ஒன்றும் அத்தனை மோசம் இல்லை.. நான்..." என்று பேசியவளை இடைமறித்தாள் அத்தை.

"உங்களோட வாதத்தை கொஞ்சம் நிறுத்துங்களேன். மதுரா பாடட்டும்.. கேட்கலாம்.. அம்மாடி.. நீ பாடும்மா..."

மதுராவிற்கு பிரதாப் முன் பாடத் தயக்கமாக இருந்தது... தன் தங்கையை கேலி செய்பவன். தன் பாட்டைக் கேட்டுவிட்டு என்ன சொல்வானோ என்ற உதறல்.

"அத்தை அவ்வளவு கேட்கிறார்கள் இல்லையா மது. பிகு பண்ணாமல் பாடேன்..." என்று ஊக்குவித்தாள் சௌம்யா. அனைவருக்கும் மாங்காய் துண்டுகளை விநி யோகம் செய்தபடி. என்ன பாட்டுப் பாடுவது... யோசித்தாள் மது. அவளுக்குப் பிடித்த பாட்டு.. எம்.எஸ். சுப்புலட்சுமி அவர்கள் தன் தேன் மதுரக் குரலில் பாடியது... அதைப் பாடினாள்.

தேன் மழையாய் இசை வந்தது.

'மாலைப் பொழுதினிலே... ஒரு நாள் மலர் பொழிலி னிலே.. கோலக் கிளிகளுடன் குயில்கள் கொஞ்சிடும் வேளையினிலே...'

அற்புதமான பாட்டு.. அதை அனுபவித்துப் பாடினாள். முருகனைக் காண ஏங்கிய வனிதையின் தாபம் குரலில் இழைந்து வர.. கண்களைத் தரையில் பதித்தவாறு பாடினாள் அவள்.

அத்தை மெய் மறந்து அமர்ந்திருந்தாள்.

அடடா.. என்ன இனிமையான சாரீரம்.. போன ஜென்மத் தில் குடம் குடமாய் இறைவனுக்கு தேன் அபிஷேகம் பண்ணியிருந்தால்தான் இப்படிக் குரல் அமையும்... என்னமாய் பாடுகிறாள்... அரவிந்த் விரல்களால் தாளமிட.. பிரதாப் அமைதியாய் கண்களை மூடி ரசித்துக் கொண் டிருந்தான்.

"முந்தைப் பிறவிகளில் உன்னை நான் முறையினில் மணந்தேன்.. எந்தன் உயிரல்லவோ.. கண்மணி.. ஏன் இந்த ஜாலமெல்லாம்...' தன்னவளை நோக்கி அழகன் முருகன் காதலாய் சொல்கிறான்.

'புள்ளி மயில் வீரன் மோகனப் புன்னகைத்தான் புரிந் தான்...'

சௌம்யா அரவிந்த்தைப் பார்க்க.. அவனும் ஒரு மோகனப் புன்னகையை வீசினான்... வெட்கத்தில் அவள் முகம் சிவந்து.. உடம்பெல்லாம் சிலிர்த்தது. சௌம்யா அண்ணனைத் திரும்பிப் பார்த்தாள். காதலில் கசிந்துரு கும் இந்தப் பாடலைக் கேட்டு யாருமே கல்லாக இருக்க முடியாது.. அண்ணனின் மனதை.. காதலை அவனது முகம் காட்டியே ஆகவேண்டும்.



ஆனால்.. அவன் கண்களை மூடிக் கொண்டு அல்லவா இருக்கிறான்..பாவி.. மரத்தின்மேல் சாய்ந்து கொண்டு மரம் மாதிரி உணர்ச்சியற்று இருக்கிறான்.. ஊகூம்.. மர மாவது இந்த தேனிசையைக் கேட்டுவிட்டு பரவசத்துடன் ஆடுகிறது. அண்ணனோ சுத்த மோசம்.

'கண்கள் உறங்காதோ.. அக்குறை கனவில் கண்டி டேனோ' இதயத்தையே உருகி வழியச் செய்யும் இந்தப் பாடலைக் கேட்ட எவரும் காதலால் கசிந்து உருகியே ஆக வேண்டும்.. வாய் வார்த்தைகள் வேண்டாம்.. கண்களே மனதைக் காட்டிக் கொடுத்து விடும்.

ஏன்.. அரவிந்த் என்னைக் காதலோடு பார்க்கவில்லையா...

ஹேமாவின் பார்வை பிரதாப் பக்கம் தாவியதே... கவிதாவும் மெய் மறந்து ஓரப்பார்வையில் அண்ணனைப் பார்த்தாளே...

ஆனால் இவன்...

'மாலைப் பொழுதினிலே...' மறுபடியும் காதலனை பார்ப்பேன் என்ற நம்பிக்கையுடன் முருகனின் காதலி பாடி முடிக்கிறாள்.

அதுவரை படர்ந்திருந்த மாயவலை ஒன்று பட்டென்று அறுந்து போனது போல இருந்தது. அனைவரும் கை தட்டிப் பாராட்ட.. மதுராவின் கன்னங்களில் சிவப்பு.

"இப்பத்தான் தெரிந்தது.. உனக்கு ஏன் மதுரான்னு பெயர் வைத்தார்கள் என்று.. தேவாமிர்தம் மாதிரி இருந் தும்மா உன் பாட்டு.."

அந்தப் பாராட்டு மழையில் நனைந்த மதுரா.. கூச்சத் துடன் ஏற்றுக் கொண்டாள்.

"நீங்களும் பாடலாமே..." அரவிந்த் ஹேமாவையும் கவிதாவையும் கேட்க.



"அய்யோ.. எனக்கு மதுரா மாதிரி பாடவராது. நான் 'பாத்ரூம் ஸிங்கர்'" என்றாள் ஹேமா.

"இருக்கட்டுமே.. இங்கு போட்டி எதுவும் இல்லை. தாராளமாய் பாடலாம்." பிரதாப் கேட்க.. அதற்கு மறுப்பு ஏது...

தனக்கு தெரிந்த ஒரு ஹிந்தி பாடலைப் பாடினாள் ஹேமா...

அர்த்தம் புரியாத சினிமா பாடல் என்பதால் அத்தை அதை ரசிக்கவில்லை.

கவிதா.. தனக்கும் பாட்டுக்கும் ரொம்ப தூரம் என்று ஒதுங்கிவிட... சௌம்யாவைப் பாடச் சொன்னார்கள்.

"சினிமாப் பாட்டுத்தான் வரும்."

"எதையோ பாடு..."

தொண்டையை கனைத்துக் கொண்டாள்...

"உன்னை ஒன்று கேட்பேன்.. உண்மை சொல்ல வேண்டும்.. என்னைப் பாடச் சொன்னால் என்னப் பாடத் தோன்றும்..."

"அப்போ.. விட்டுவிடு..." இடையே பிரதாப்பின் கமெண்ட்...

"காதல் பாட்டுப் பாட.. காலம் இன்னும் இல்லை.. தாலாட்டுப் பாட தாயாக வில்லை..."

"ஓ!" வென்று கூவல் எழ...

"கரெக்டா பாடியிருக்கா அரவிந்த்" என்றான் பிரதாப்.

சௌம்யாவுக்கு முகம் சிவந்து போனது...

"இனிமே நான் பாடவும் மாட்டேன்.. போ..." என்றாள்.

"வேணாம் தாயே.. நீ பாடவே வேண்டாம்..." என்றான் அண்ணன்.

அவனைப் பார்த்து முகம் சுளித்து.....



"ஏன் அண்ணா.. 'பிக்னிக்' என்று வந்திருக்கிறோமே. மனசுக்கு பிடித்தவளுடன் தனிமையில் பேசணும்னு உனக்கு தோணவில்லையா... அதுவும் இந்த அழகான சூழலில்...!" மெல்லிய குரலில் கேட்டாள் தங்கை.

"நிறையவே இருக்கு தங்காய்... ஆனால் உனக்கு தெரியக்கூடாதே... அதுக்குத்தான் இந்த மௌனவிரதம். கெடுநாள் முடியட்டும்.. நீ தோல்வியை ஒப்புக் கொண் டதும்.. பார்.. உள்ளத்தில் தேக்கி வைத்திருக்கும் அத்தனைக் காதலையும் அப்படியே அவளிடம் கொட்டுவேன்."

"வெட்கம்.. மகா வெட்கம்.. பந்தயத்திற்கு பயந்து தன் காதலை மறைக்கும் காதலன்..."

"ஓகே.. இப்போது ஒப்புக் கொள்.. உன் தோல்வியை..."

"ஏன்.. நான் ஏன் ஒப்புக் கொள்ளணும்... இன்னும் இரண்டு நாள் இருக்கிறதே.. பிரதாப்..."

"சாரிம்மா.. ஒன்றரை நாள்.. அதையும் பார்த்து விட லாம்..." ஜெயித்துவிடுவேன் என்ற உறுதியில் சொன் னான் பிரதாப்.

சௌம்யாவிற்கு தன் நம்பிக்கைக்கோட்டை சரிந்து விழுவதுபோல ஒரு பிரமை.

"சரி.. எல்லோரும் எழுந்திருங்க.. அங்கே சமையல் செய்து வைத்து நமக்காக காத்திருக்கப் போறாங்க.. வாங்க..." அத்தை எழுந்திருக்க.. அனைவரும் கிளம்பினர்.

## 12

வகை வகையாய் தயாரிக்கப்பட்டிருந்த மதிய விருந்தை உண்பதற்குள் அனைவரும் திக்குமுக்காடிப் போனார்கள்...

அத்தனை தினுசுகள்...

இடியாப்பம்... தேங்காய்பால்... 'கீ'ரைஸ்... குருமா... புளியோதரை... சேனை வருவல்... தயிர் பச்சடி... தயிர் சாதம்... ஃப்ரூட் சாலட் என்று வரிசையாய் வர...

அனைத்தையும் உண்ண முடியாமல் தவித்து விழித்தனர். உண்ட மயக்கம் கண்களை சுழற்ற... அத்தை படுத்துவிட்டாள்.

மற்றவர்கள் பாறையாய் வயிற்றை அழுத்தும் உணவை செரிக்க வைக்க மறுபடியும் தோட்டத்தை வளைய வந்தனர்.

மதுராவிற்கோ நிலை கொள்ளவில்லை...

இவர்கள் புறப்படுகிற மாதிரி தெரியவில்லையே... நேரம் ஆகிக் கொண்ட இருக்கிறதே.

பாட்டி இவர்களுடன் அனுப்பி வைத்ததே பெரிய விஷயம்... அதுவும் தாத்தாவின் பரிந்துரை பேரில். தாமதமாகிவிட்டால்... அவ்வளவுதான்... வார்த்தைகளால் கிழித்துப் போட்டு விடுவாள்.

நினைக்கவே நெஞ்சு கலங்கியது.

பேசாமல் வீட்டிலேயே இருந்திருக்கலாம்... இவர்களுக்கோ எந்தவிதக் கட்டுப்பாடும் இல்லை... அதனால் குஷியாய் பொழுதைக் கழிக்கிறார்கள்... நான் அப்படி இல்லையே... சிறைப் பறவை ஆயிற்றே... வெளியே கொஞ்சம் திரிய அவகாசம் கிடைத்தாலும் மறுபடியும் என் கூண்டுக்குள் திரும்பியே ஆகவேண்டும்... பெருமூச்சு விட்டாள். நேரம் கழிய... அவளால் இயல்பாக இருக்க முடியவில்லை. எள்ளும் கொள்ளும் வெடிக்கும் பாட்டியின் முகம் நினைவுக்கு வர... கதிகலங்கிப் போனாள்.



எப்படியாவது சௌம்யாவிற்கு தன் நிலைமையைப் புரிய வைத்து இங்கிருந்து கிளம்ப வழி பார்க்க வேண்டும். இருட்டிவிட்டால் போச்சு... குருஷேத்திரப் போர்தான்.

அவர்களை நோக்கிச் சென்றாள்.

அரவிந்தும் சௌம்யாவும் கொஞ்சம் தள்ளி... தனிமையில் பேசிக் கொண்டிருந்தனர்.

பிரதாப்... ஹேமா கவிதாவுடன் 'ஷெட்டில்' விளையாடிக் கொண்டிருந்தான்.

இப்போது அவனது சர்வீஸ்...

தயாராக இருந்த அவனது பார்வை எதிரே வந்து கொண்டிருந்த மதுராவைத் தொடர்ந்து... அவளைத் துரத்தியபடி ஓடி வந்த பசுமாட்டைப் பார்த்ததும் அப்படியே உறைந்து போய் சிலையானான்.

பசுவிற்கும் மதுராவிற்கும் இடையே இடைவெளி குறைந்து கொண்டே வந்தது.

பசுமாடு தன்னைத் துரத்துவது அறியாமல் தன் தோழியின் கவனத்தை தன் பக்கம் திருப்ப முயன்று கொண்டிருந்தாள்.

'ம்மா....' என்று சத்தம் கேட்டு திரும்பிப் பார்த்த மதுரா பீதியில்... அலறி... அந்த அதிர்ச்சியில் மயங்கி கீழே சரிய...

''மது...''

கையில் இருந்த மட்டையை வீசி எறிந்து விட்டு அவளை நோக்கி ஓடினான் பிரதாப்...

காற்றினும் வேகமாய்...

'சில்'லென்ற நீர்த்துளிகள் முகத்தில் விழ மதுரா விழித்துப் பார்த்தாள்.



அனைவரும் கவலையுடன் சுற்றி நிற்பதைக் கண்டதும் தனக்கு என்ன நேர்ந்தது என்று நினைவு கூர்ந்தாள்.

உடனே பதைப்புடன் எழ முயற்சிக்க... அவளது தோள்களைப் பற்றி மெல்ல படுக்க வைத்தான் பிரதாப். ''கொஞ்சம் படுத்து 'ரெஸ்ட்' எடு மதுரா... நெற்றியில் மட்டும்தான் காயம்... நல்லவேளை... அடியேதும் பலமாய் இல்லை... இரு... பான்ட் எயிட் போட்டு விடுகிறேன்...'' கண்களை மூடிக் கொண்டாள் மதுரா. இன்னும் அதிர்ச்சியிலிருந்து மீளவில்லை அவள்...

''அண்ணா... அதை என்னிடம் கொடு... நான் போடுகிறேன்...'' என்று சொன்ன சௌம்யாவின் கையை ஒதுக்கினான்.

''வேண்டாம்... நானே போட்டு விடுகிறேன்.. எல்லோரும் கொஞ்சம் தள்ளியிருங்கள்... போதும்'' அவனது முகத்தில் தெரிந்த உணர்வு என்ன... வேதனையா... குழம்பிப் போனாள் தங்கை.

மதுராவின் நெற்றிக் காயத்தை டெட்டால் போட்டு துடைத்து விட்டு பேன்ட் எயிட்டை போட்டபோது வலியில் அவள் முகம் சுளங்கியது...

அதைப் பார்த்து விட்டு பிரதாப் முகத்தில் தெரிந்த வாட்டம்... சௌம்யா அதைக் கவனிக்கத் தவறவில்லை. லேசாய் வந்த சந்தேகம் மேலும் வலுப்பட்டது. அப்படியென்றால்... தன் அண்ணா காதலிப்பது... மதுராவை!

அது எப்படி... மதுராவின் விஷயம் தான் அண்ணாவிற்குத் தெரியுமே... ஏற்கனவே அவளுக்கு ஒரு முறைப் பையனை நிச்சயம் பண்ணியிருப்பதை அவனுக்குச் சொல்லியிருக்கிறேனே... அப்படி இருந்துமா... ப்ச்ச... எல்லாவற்றையும் பார்த்துக் கொண்டா காதல் வருகிறது



இருந்தும் அவளால் நம்ப முடியவில்லை.

மறுபடியும் கேள்வி எழுந்தது... உண்மையிலே பிரதாப் விரும்புவது மதுராவைதானா...

நடந்ததை மீண்டும் அசைப் போட்டுப் பார்த்தாள். ''மது'' என்று கத்திக் கொண்டு அவன் ஓடிய ஓட்டம்... அப்போது அவன் முகத்தில் தெரிந்த தவிப்பு... அது தனக்குரியவளுக்காக மட்டுமே வரும்...

அனைவரும் செயலற்றுப் போய் சிலையாகி விட்ட நிலையில்... அவன் மட்டுமே செயல்பட்டான்.

மதுராவைக் காப்பாற்ற வேண்டும் என்ற ஒரே சிந்தனையில் ஓடினான்.

மயங்கி விழும் நிலையில் இருந்த மதுராவை முட்டிக் கிழிக்க வந்து கொண்டிருந்தது பசுமாடு...

அந்தக் கணத்தில் வந்து விட்ட தோட்டத்துக் காவல்காரன் மாட்டை இழுத்துப் பிடித்தான்...

கண்மூடித் திறக்கும் நேரம்தான்... அத்தனையும் நடந்து விட்டது.

''முரட்டு மாடு சாமி... கட்டு அவிழ்ந்து கொண்டு வந்துவிட்டது...'' என்று சொன்ன தோட்டக்காரனிடம் எரிந்து விழுந்தான் பிரதாப்.

''மாடு முட்டி ஏதாவது ஆகியிருந்தால் உன்னை சும்மா விட்டிருக்க மாட்டேன்... உன் அதிர்ஷ்டம் அப்படி எதுவும் நடக்கவில்லை... இழுத்துக் கொண்டு போ....''

கோபத்தில் அவன் முகம் பறங்கிப் பழம் போல சிவந்து போனது என்பதும் உண்மை.

பின்னர் மயங்கிக் கிடந்த மதுராவை பூமாலையாய் ஏந்தி... மார்புடன் அணைத்தவாறு பண்ணை வீடு நோக்கி நடந்தான்.

அதற்குப் பின்னர் தான் அனைவரும் அதிர்ச்சியில் இருந்து மீண்டனர்.

அத்தை பரபரப்புடன் வந்து கேட்டாள்... "என்னப்பா ஆச்சு மதுராவுக்கு... அய்யோ... இவ பாட்டிக்கிட்டே வாங்கிக் கட்டிக் கொள்ளும்படி ஆச்சே..." என்று புலம்ப...

"ஒன்றும் இல்லை அத்தை... மதுராவுக்கு வெறும் அதிர்ச்சி மயக்கம் தான்...." என்று கூறியவாறு படுக்கை அறை நோக்கி சென்றான்.

ரோஜாப்பூ மாலையை உதிராமல்... மென்மையாய் கீழே வைப்பது போல மெதுவாய் அவளைப் படுக்க வைத்தான். சில வினாடிகள் அவளையே பார்த்துக் கொண்டிருந்தான்.

அந்த வினாடிகளில்... அவனது கண்களில் தெரிந்த பரிதவிப்பு... சௌம்யா அதைக் காணத் தவறவில்லை. 'சட்'டென்று நினைவுக்கு வந்தது...

கவிதா வாழைப் பழத்தோலில் வழுக்கி விழுந்தாளே... அப்போது பதறவில்லையே...

ஹேமா மாடிப்படிகளில் உருண்டு விழுந்த போது... கலங்காமல் இருந்தானே...

இன்று துடிதுடித்துப் போனான் என்றால்... மதுராவை மாடு முட்டப் போகிறது என்ற பதட்டத்தில்... தனது உயிருக்கே ஆபத்து வந்தாற் போல ஓடிய ஓட்டம்! ஆம்... காதலேதான்... மதுராவை உளமாரக் காதலிக்கிறான்... அது சர்வநிச்சயம்...

பிரதாப்பின் பார்வை ஹேமா பக்கமா... இல்லை கவிதாவின் பக்கமா என்ற ஒரே நோக்கத்தில் இருந்ததில் அவனது பார்வை மதுரா மீது தாவியதை கவனிக்கவே இல்லை...



உண்மை தெரிந்ததும்... ஒரு புறம் சந்தோஷம் வந்தாலும்... பயமும் வந்தது...

மதுராவின் பாட்டிக்கு தெரியவந்தால்... ஆகாசத்துக்கு குதிப்பாரே... காதல் திருமணம் என்றாலே முகத்தை சுளிக்கும் அவர்... இதை எப்படி ஏற்றுக் கொள்வார்... இந்தத் திருமணத்திற்கு அட்சதை தூவுவார் என்பது என்ன நிச்சயம்...

ஏற்கனவே தன் பேரனுக்கு மதுராவை நிச்சயம் பண்ணி வைத்திருப்பவர் ஆயிற்றே...

அய்யோ... அண்ணா... போயும் போயும் மதுராவையா நீ காதலிக்கணும்... உன் காதலுக்கு முதல் எதிரியே பாட்டிதான்... இதில் எப்படி ஜெயிக்கப் போகிறாயோ... தெரியவில்லையே... மனசுக்குள் புலம்பி தீர்த்தாள் தங்கை.

அது ஒருபுறம் இருக்கட்டும்... பிரதாப் என்றாலே மிரண்டு ஓடுபவள் மதுரா... அவனது குறும்புப் பேச்சைக் கேட்டவுடனே பயந்து... காய்ச்சலில் விழுந்து விடு பவள்... இவனை எப்படி கணவனாய்... ஊகூம்... இல்லாத ஊருக்கு வழிக் கேட்பது போலத்தான்...

இப்போது தன் அண்ணனின் பரிகாசப் பேச்சுக்கு அர்த்தம் புரிந்தது அவளுக்கு...

பாவம்... இலவு காத்த கிளிகளைப் போல ஆகிவிட்டது ஹேமா... கவிதா இருவரின் எதிர்பார்ப்பும்...

எப்போது... மட்டையை எறிந்து விட்டு 'மது' என்று பிரதாப் ஓடினானோ அப்போதே... அந்த நிமிஷமே தாங்கள் தோற்றுவிட்டதை உணர்ந்து கொண்டனர் இருவரும்.

அவர்களுக்காக பரிதாபப்படத்தான் முடிந்தது சௌம்யாவால்...



பிரதாப்பின் கடைக்கண் பார்வைக்காக தவம் கிடந்த இருவருக்கும் ஏமாற்றம்... அவர்களின் முகங்களில் தெரிந்த வேதனையைக் காணவே சகிக்கவில்லை சௌம்யாவால்...

மின்னாமல்... முழங்காமல் திடீர் என்று மழை வந்து அடித்துச் சென்றது போல... பிரதாப்பின் காதலை வாரிக் கொண்டு விட்டாளே மதுரா... தன் உயிர்த் தோழிதான் தன் அண்ணனின் மனங்கவர்ந்த காதலி என்ற நினைப்பு அளவில்லாத ஆனந்தத்தைத் தந்தாலும்... இது கல்யாணத்தில் முடியணுமே என்ற ஆதங்கம்தான் அவளை அரித்தது.

முதலில் மதுராவின் மனதை அறிய வேண்டும்... தன் அண்ணனைப் பார்த்ததும் மருண்ட மானாய் பாய்ந்து ஓடுபவளை எப்படிச் சம்மதிக்க வைப்பது.... எல்லாம் சரி... அந்தக் கிருஷ்ணா... அவனை மறந்து விட்டு இந்தக் கல்யாணத்தைப் பற்றி யோசிக்கிறோம்... மடத்தனம் தான்...

யோசிக்க... யோசிக்க மண்டைக்குள் வரட்சி ஏற்பட்டு விரிசல் கண்டது போல வலித்தது.

நிச்சயமாய் சௌம்யா இந்த முடிவை எதிர்பார்க்கவும் இல்லை..

எதிர்பாராத முடிவு!

இன்னும் உள்ளுக்குள் லேசாய் நெருடல்... தான் அறிந்து கொண்டது உண்மைதானா... இல்லை பிரமையா... பெருமூச்சு விட்டாள் அவள்... இது எதில் போய் முடியுமோ... 'பிக்னிக்' புறப்படும்போது இருந்த உற்சாகம் திரும்பி வரும் போது வடிந்து போய்விட்டிருந்தது.

ஒவ்வொருத்தருக்கும் ஒவ்வொரு மாதிரி மனநிலை... காதலில் தோல்வியடைந்த கவிதாவும்... ஹேமாவும்...



பிரதாப்பை இழந்து விட்ட நிராசையில் வாடிப் போய்... உணர்ச்சியற்ற மரப்பாச்சி பொம்மைகளைப் போல அமர்ந்திருந்தனர்.

மதுராவிற்கு அதிர்ச்சியில் ஏற்பட்ட சோர்வு... பாட்டிக்கு என்ன பதில் சொல்வது என்ற பயம்... சௌம்யாவின் மேல் சாய்ந்தவாறு அமர்ந்திருந்தாள்.

அவளுக்கு ஏற்பட்ட ஆபத்திலிருந்து காப்பாற்றிவிட்டாலும் அவளுக்கு ஏதாவது நேர்ந்திருந்தால் என்ற அச்சம் உள்ளே வாட்ட மௌனமாய் காரை ஓட்டிக் கொண்டு இருந்தான் பிரதாப்...

அரவிந்த் 'செல்'லில் யாருடனோ 'பிஸினஸ்' விஷயமாய் உரையாடிக் கொண்டிருந்தான்.

அத்தை களைப்பில் நன்றாகத் தூங்கி விட்டாள்... நிம்மதியாய்...

காரில் அமைதி அழுத்தமாய் படர்ந்திருந்தது... அரவிந்தின் 'யெஸ்... ஓகே... ஷ்யூரை'த் தவிர...

இதை மாற்ற வேண்டுமே... இந்தக் கனத்த அமைதியை சகிக்கவும் முடியவில்லை...

ஏதாவது பாட்டுக் கேட்கலாம்... எடுத்து வந்த காஸெட்டுகள் கைப்பையில் அப்படியே இருக்கிறது...

வருகிறபோது வளவளவென்று பேசிக் கொண்டும்... சுற்றுப் புறத்தை ரசித்துக் கொண்டும் வந்ததால் பாட்டு கேட்கும் ஆர்வம் யாரிடமும் இல்லை...

கைக்கு வந்த ஆடியோ கேசட்டை எடுத்துப் பார்த்தாள்... 'பளிச்' சென்ற யோசனை...

"அண்ணா... போரடிக்கிறது... இதைப் போடேன்... பாட்டாவது கேட்போம்..."

முதல் பாடலே மதுராவிற்கு பிடித்த பாடல்... அது அவனுக்கும் தெரியும்...

பார்க்கலாம்... அவளை என்ன செய்கிறது என்று... காதல் உள்ளத்தை உருகி வழியச் செய்யும் பாட்டாயிற்றே...

"கண்ணாளனே... எனது கண்ணை நேற்றோடு காண வில்லை..."

அவள் நினைத்தது போலவே 'ரியர் வ்யூ' கண்ணாடியின் வழியே அவன் மதுராவையேப் பார்த்துக் கொண்டிருந்தான்... கண்களில் காதல் வழிய...

ஆக... தனது ஊகம் நூறு சதம் உண்மை என்பது ஊர்ஜிதமானது...

பந்தயத்தில் ஜெயித்து விட்டேன் என்ற எக்களிப்பை விட... மதுரா தனக்கு அண்ணியாக வர இருக்கிறாள் என்ற சந்தோஷம் தான் அதிகம்... அது நல்லபடியாக நடக்க வேண்டும் என்று தெய்வத்தைப் பிரார்த்தித்தாள்...

மதுராவிற்கு தன் மனநிலை புதிராக இருந்தது... இதென்ன விசித்திரம்... ஒரே நாளில் உலகமே மாறி விடுமா என்ன...

அது எப்படி...

'பிரதாப்' என்ற நாலு எழுத்துப் பெயரைக் கேட்டாலே நடுங்கி ஓடப்பார்த்த தான்... அவனிடம் இதயத்தைப் பறி கொடுத்த அதிசயம் எப்படி...

ஒரு வேளை... இத்தனை நாளும் தன் அடிமனதில் கொஞ்சமாய் அவன் மீது ஈடுபாடு இருந்ததோ... அப்படித் தெரியவில்லையே... பின்னே... எப்படி இந்த மாற்றம்... விழித்தாள்...

அவளால் நம்பவும் முடியவில்லை....

'மது' என்று அவளை எடுத்து மார்போடு அணைத்த நிலையில் இன்னும் தடுமாறிக் கொண்டிருந்தது உள்ளங்களையும் அறியாமல்... அதிர்ச்சியில் வந்த படபடப்புடன் அவனது நெஞ்சில் முகம் புதைத்த போது



அவனது கரங்கள் இறுக அணைத்து "பயப்பட வேண்டாம் மது... உனக்கு ஒன்றும் இல்லை... யூ ஆர் ஆல் ரைட்..." என்று காதில் மென்மையாய் சொன்னானே... இப்போதும் உடலில் ஏதோ சிலிர்த்த மாதிரி உணர்வு...

அதைக் கேட்ட ஆனந்தத்தில் தான் தன் நினைவை இழந்ததோ... அந்தச் சில வினாடிகள்... அவனுடன் ஒன்றியிருந்த கணங்கள் தன் வாழ்க்கையின் பொன்னான நேரம்!

ஆனால்...

பிரதாப் எங்கே... நான் எங்கே...

இது நடக்கின்ற செயலும் இல்லையே...

பாட்டி ஒப்புக் கொள்ளவும் மாட்டாள்... மேலும் சௌம்யாவின் வீட்டில் என்ன நினைப்பார்கள்...

அவர்களுடைய அந்தஸ்து என்ன... செல்வாக்கு என்ன... அவர்களின் ஸ்டேட்டஸுக்கு இணையான குடும்பத்தை தானே விரும்புவார்கள்...

நோ... இது சரிப்படாது... பிரதாப்புக்கு நான் எந்த விதத்திலும் ஏற்றவள் கிடையாது...

ஏழைக்கு ஏத்த எள்ளுருண்டை என்பது போல... கிருஷ்ணா இருக்கிறான்... அவனை...

நினைக்கவே நெஞ்சில் அடைத்தது...

இதுநாள் வரை அவன் தான் தன் வருங்கால கணவன் என்ற எண்ணம் எந்தவித பாதிப்பும் ஏற்படவில்லை. ஆனால்... இப்போது... அவனை ஏற்க தயங்குகிறது இதயம்...

பாட்டியிடம் சொல்லிவிடலாமா... கிருஷ்ணாவை மணக்க விருப்பம் இல்லையென்று...

ஏன் என்று கேட்டால்... உண்மையை சொல்ல வேண்டும் அப்புறம்... பாட்டியின் கோபம்... அய்யோ...

என்ன செய்வது... தலையைப் பிடித்துக் கொண்டாள் மதுரா.

## 13

''அத்தை'' சௌம்யா ஓடிவந்து அத்தையின் கைப்பற்றி சுற்றினாள்.

''விடுடீ... சௌமி... அய்யே... என்னடீ இது... விளையாட்டு...'' அத்தை அலற...

''கண்டுபிடிச்சேன்... கண்டுபிடிச்சேன்... அண்ணனின் காதலைக் கண்டு பிடிச்சேன்...'' என்று ராகம் இழுத்து குதித்தாள்.

''இவ்வளவுதானா... என்னமோ... ஏதோன்னு நினைச்சுட்டேன்... இதிலென்ன அதிசயம்... ஹேமாவா இருப்பா.... இல்லேன்னா கவிதா...''

''ஊகூம்... இரண்டு பேருமே இல்லை...''

உருளைக்கிழங்கை உரித்துக் கொண்டிருந்த அத்தை வியப்புடன் திரும்பினாள்.

''என்னடீ சொல்றே... இரண்டு பேரும் இல்லைன்னா... வேற யாரு...''

''மதுரா!...''

திகைத்துப் போனாள் அத்தை... அதைப் பார்த்துவிட்டு சிரித்தாள் சௌம்யா.

''என்ன அத்தை... அப்படி முழிக்கறீங்க... உங்களால் நம்ப முடியல்லே... அப்படித்தானே...''

''சௌமி... இன்னிக்கு ஏதாவது கனவு கண்டியா...''



''என்ன அத்தை... கண் முன்னால் கண்டது எல்லாம் கனவாகி விடுமா என்ன.... என் அருமை அண்ணன்... மிஸ்டர் பிரதாப் சந்திரன் அவர்கள்... எங்கே நான் கண்டு பிடித்து விடுவேனோ என்று கல் மாதிரி இருந்தவன்... நேற்று நீங்கள் பார்க்கவில்லையே அத்தை... அடடா... கண்கொள்ளாக் காட்சிதான்... தன் வைராக்கியத்தை தூக்கி எறிந்து விட்டு... தன் முகமூடியை கழட்டிப் போட்டு விட்டு... ஓடிப் போய்...''

''இரு... இரு... நேற்றா... எப்போ...''

சௌம்யா அத்தையின் முகவாயைப் பிடித்து சொன்னாள்.

''ஹையோ... அசட்டு அத்தை... மதுரா மயங்கி விழுந்தாளே... அப்போ... அண்ணா ஓடிய ஓட்டம் இருக்கே... ஆகா... அதுவே ஒலிம்பிக்காக இருந்திருந்தா... நிச்சயம் தங்கப் பதக்கம் தான்... அதுவும் எப்படி... 'மதூ... ஊ...' என்று அலறிக் கொண்டு... அப்புறம் அவளை வாரி அணைத்துக் கொண்டு போய் படுக்க வைத்து... அவனே அருகிலிருந்து கவனித்து... நீங்க பார்க்கவில்லையா அத்தை...''

''எனக்கு இருந்த பதட்டத்தில் உன்னை மாதிரியெல்லாம் உத்து கவனிக்கவில்லைடீயம்மா... எனக்கு... அவ பாட்டிக்கு என்னடாப்பா பதில் சொல்வது என்ற படபடப்பு. பி.பி. ஏறிடும் போல ஆச்சு... அது சரி... இதையெல்லாம் பெரிசா ஏன் எடுத்துக்கறே... சௌமி... யார் மயங்கி விழுந்திருந்தாலும் பிரதாப் அப்படித்தான் செய்திருப்பான்... எதை வச்சு மதுரா மேலே அவனுக்குப் பிரியம்னு சொல்றே...''

''அத்தை... நல்லா நினைவுப்படுத்திக் கொள்ளுங்கள்... கவிதா கால் வழுக்கி விழுந்த போது அண்ணா பதறத் தோடு ஓடிவந்தானா...''



''இல்லைதான்...''

''கரெக்ட்... நீங்களும் நானும் தானே ஓடினோம்... அண்ணா இருந்த இடத்திலே இருந்தான். இல்லையா... அடுத்து ஹேமா கால் இடறி மாடியில் உருண்டு வந்த போதும் அவன் ஓடிவரவில்லை... நானாகத்தான் அவனை அழைத்த போதுதான் உதவ வந்தான்... ஆனால் மதுராவுக்கு ஆபத்து என்றதும் எப்படிப் பதறினான் தெரியுமா... அப்போ அவனது முகத்தைப் பார்க்கணுமே... எதற்குமே கலங்கி நிற்காத என் அண்ணா... தன் உயிருக்கே ஏதோ ஆனது போல ஓடினான்... நிச்சயமா இது அதிர்ச்சியான... ஆச்சர்யமான ஆனால் ஆனந்தமான முடிவுதான்... இல்லே அத்தை...''

''என்னால் நம்ப முடியலே சௌமி... நம்ம பிரதாப் மதுராவை... ஆமாம்... அவளுக்குத்தான் ஏற்கனவே யாரையோ மாப்பிள்ளையாய் பேசி முடிச்சாச்சுன்னு சொன்னாயே சௌமி'' அத்தையின் முகத்தில் கவலை தெரிந்தது.

''நிஜம்தான் அத்தை... அது வெறும் பேச்சுவார்த்தையுடன் இருக்கிறது... ஆனா பாட்டியைச் சமாளிப்பதுதான் கஷ்டம்... ம்ம்... எதையும் நம்பிக்கையோட செய்வோம்... சரி அத்தை... இப்போ அண்ணாவைப் பார்க்க போய்க் கொண்டே இருக்கிறேன்... ஜெயிச்சதை அவனிடம் சொல்ல வேண்டும் இல்லை...!'' கண்களைச் சிமிட்டி விட்டு ஓடினாள் அவள்.

அத்தை துர்கா யோசனையுடன் நின்றாள்.

பாத்ரூமில் பிரதாப் குளித்துக் கொண்டிருந்தான். ஷவரின் ஆனந்தத்தில் விசில் வந்ததோ என்னவோ...

''அவள் வருவாளா... அவள் வருவாளா...'' கண்டிப்பாய் வருவாள் அண்ணா... நீ முதலில் வெளியே வா... மனசுக்குள் நினைத்தவாறு காத்திருந்தாள் சௌம்யா...



அவளது கண்கள் மேஜை மீது பரப்பியிருந்த போட்டோக்களின் மீது படர்ந்தன.

அட! பிக்னிக்கில் எடுத்தவை...

ஆர்வத்துடன் எடுத்துப் பார்த்தாள்.

அரவிந்துடன் அவள் இழைந்து பேசிக் கொண்டிருந்த போட்டோவைப் பார்த்து வியப்பு... ஓ... இதைக் கூட எடுத்து விட்டானா அண்ணா... வரட்டும்... எடுத்து பத்திரமாக வைத்துக் கொண்டாள்... அரவிந்திற்கு காட்ட வேண்டுமே என்ற ஆசை...

மற்ற போட்டோக்கள் எல்லாம் இயற்கை காட்சிகளும்... எல்லோரும் சேர்ந்து நின்றும் இருப்பவை... அதில் தோழிகள் நால்வரும் மட்டும் இருந்ததையும் எடுத்துக் கொண்டாள்.

அந்தக் கடைசிப் போட்டோ... அட... மதுரா! இவளை எப்போ தனியாக எடுத்தான்... ஓ... தனக்காக எடுத்து வைத்திருக்கணும்... அதுவும் யாரும் பார்க்காத சமயத்தில்...

மதுராவிற்கும் தெரிந்திருக்காது... ஏனெனில் பயம் துளியும் இல்லாமல்... புன்னகையுடன் எதையோ ரசிப்பது போல நின்றிருந்தாள்... 'லென்ஸ்' உதவியால் எடுத்திருக்கிறான்... கில்லாடிதான்!

சௌம்யாவின் வதனத்தில் புன்னகைப் பூத்தது... இவள் என் அண்ணி... என் இனிய தோழி... ஸ்வீட் மதுரா இந்த வீட்டின் மருமகள்...

நெஞ்சம் முழுவதும் நிறைந்து வழிவது போல தோன்றியது. இவளைத்தானே முதன்முதலாய் என் அண்ணியாய் 'செலக்ட்' பண்ணியது... அத்தை மெச்சியதும் இவளைத்தானே... இவளுக்கு எந்த விதத்தில் குறைவு... அழகில்... படிப்பில்... பண்பில் நிறைந்தவளாயிற்றே...

நாணத்துடன் கூடிய இந்தப் புன்னகையே போதும்... யாரையும் வசப்படுத்தி விடும்... வாய் பேசாத போதிலும், கண்கள் பேசுமே... இந்தக் கண்கள்தான் என் அண்ணனைக் கட்டியிழுத்திருக்கிறது.

பிரதாப் வெளிவரப்போவது தெரிந்ததும்... மதுராவின் போட்டோவை மறைத்து வைத்துக் கொண்டு அமர்ந்தாள்.

பிரதாப் அவள் அமர்ந்திருப்பதைப் பார்த்ததும் வியந்தான்.

"அடே... இது என்ன விந்தை... என்றைக்கும் இல்லாமல் என் தங்கை இப்படி வந்து சாது மாதிரி உட்கார்ந்திருப்பது... இந்தப் பூனையும் பால் குடிக்குமா போல் அமைதியாய்... என்ன விஷயம் தங்காய்..."

"நாம் பந்தயம் கட்டி இன்றுடன் முடியப் போகிறதே"

"ஆமாம்..."

"நான் கண்டுபிடித்து விட்டதை உன்னிடம் சொல்ல வேண்டாமா... எங்கே... டைமண்ட் நெக்லஸ் ரெடியா இருக்கா..."

"முதல்ல சொல்லும்மா... அது சரிதானா என்று தெரிந்து கொண்டு அப்புறம் தருகிறேன்..."

"ம்கூம்... சொல்லமாட்டேன்... காட்டுகிறேன்... இதோ உன் இதயத்தைத் திருடிய கள்ளி..."

மதுராவின் போட்டோவை அவன் முன் நீட்ட...

பிரதாப் முகத்தில் மலைப்பு...

"எப்படி... எப்படி சௌமி... இப்போ ஒத்துக் கொள்கிறேன்... என் தங்கை புத்திசாலின்னு, ஆமாம் உனக்கு எப்படித் தெரிய வந்தது..."

"பூனை கண்ணை மூடினால் பூலோகம் இருண்டு விடுமாம் அண்ணா..." குறும்புடன் சொன்னாள் அவள்.



"புரியவில்லையே..."

"அட... பேக்கு அண்ணா... நேற்று பிக்னிக்கில் உன்னையும் மறந்து உன் காதலைக் காட்டிக் கொண்டு விட்டு... இப்போ மண்டூகம் மாதிரி... எப்படிக் கண்டு பிடிச்சேன்னு அசடு வழிய கேட்கிறாயே..."

உண்மையில் அவன் அசடு வழியச் சிரித்தான்... அதைப் பார்த்து விட்டு விழுந்து விழுந்து சிரித்தாள் தங்கை.

பிறகு... கையை நீட்டி 'நெக்லஸ்' என்றதும்...

"நிச்சயம் தருகிறேன்... இதைக் கண்டுபிடித்ததற்காக அல்ல... அழகான உன் தோழியை எனக்கு கிடைக்கும்படி செய்தே பார் அதற்கு... எனக்கு மனைவியாய் அமைய உதவியதற்கு... ஆமாம் சௌமி... அவளைப் பார்த்ததுமே இவள்தான் எனக்கு என்று அப்போதே மானசீகமாய் மனைவியாக்கிவிட்டேன்... தாங்க்யூ... தாங்க்யூ வெரிமச் சௌமி..."

"இப்போ தெரிந்ததா அண்ணா... இந்த சௌமி என்றைக்கும் தோற்க மாட்டாள் என்று... இரு... இரு... முதல்ல இதை அரவிந்த்துக்கு சொல்லியாகணும்" துள்ளி ஓடிய தங்கையை புன்சிரிப்புடன் பார்த்தான்...

அவள் தன் கையில் கொடுத்துவிட்டு சென்ற மதுராவின் போட்டோவை சில வினாடிகள் கண்கொட்டாமல் ரசித்தவன்... 'மை ஸ்வீட் ஹார்ட்' என்று அதை முத்தமிட்டான்...

'உன்னை மறுபடியும் எப்போது சந்திப்பேன். அன்பே... இனி என் காதலை மறைக்க வேண்டிய அவசியமில்லை. கண்ணே... மறைக்கவும் மாட்டேன்... உன்னை என் அன்பு மழையில் குளிப்பாட்டி... காதல் மொழிகளில்



பரவசப்படுத்தி... என் இதயத் தாளத்தை ராகமாக்கி அதை உன்னிடம் பாடுவேன்... என் தோளில் தலை சாய்த்து அந்த மௌன ராகத்தை கண்களை மூடி நீ ரசிக்க... பொழுது போவது தெரியாமல் இருவரும் மெய்மறந்த நிலையில் இருக்கும் வேளை வரத்தான் போகிறது... மது.... அதுவரை தள்ளியிருந்தே உன் நினைவில் சுவாசிப்பேன்...'

பெருமூச்சு விட்டான் அவன்...

என் காதலை மதுவிடம் இன்னும் வெளியிடவில்லையே... அவள் ஏற்றுக் கொள்வாளா என்றும் நிச்சயமில்லை... அதற்குள்... மனம் தவித்தது.

காதல் ஒரு இனிய வேதனைதான் என்பதை அவன் அப்போதுதான் உணர்ந்தான்...

## 14

எதிர்பார்த்த மாதிரியே பாட்டி விஷயத்தைக் கேட்டதும் எகிறிக் குதித்தாள்...

"முதல்ல என் பிள்ளைக்கு கடிதம் எழுதி வரச்சொல்லுங்கோ... உடனே திருமணத்திற்கு ஏற்பாடு பண்ண வேண்டும். இந்தக் காதல் கண்றாவியெல்லாம் நம்மை விட்டுட்டு ஓடிப்போனாளே அந்த ஓடுகாலி... அவளோடு போகட்டும்... இனிமே அந்தப் பேச்சே இங்கு வரக்கூடாது. இவளை லட்சணமா கிருஷ்ணா கையில் பிடித்துக் கொடுத்தப்புறம்தான் எனக்கு நிம்மதியே..."

எப்போது சௌம்யாவிடம் இருந்து தெரிந்து கொண்டாளோ அப்போதிருந்து பாட்டி எண்ணெயில் விழுந்த அப்பம் மாதிரி பொங்கினாள்.



பாட்டியைப் பொறுத்தவரை காதல் என்பது எட்டிக்காய் மாதிரி முகத்தை சுளிக்க வைக்கும் சமாச்சாரம்.

யாருடனோ ஓடிப் போய் தலைகுனிவை ஏற்படுத்திய மகளை அவர் இன்னும் மன்னிக்கவே இல்லை.

அப்போது ஏற்பட்ட கசப்பு... இன்னும் அது மாறாமல் மனதிலேயே தங்கிவிட்டது.

பிரதாப் நல்லவன்... படித்தவன்... பணக்காரன்... என்றாலும்...

மதுராவைக் 'காதலிக்கிறான்' என்ற வார்த்தைதான் வெறுப்பைத் தந்தது...

அன்றைக்கு தொடங்கியவள்தான்... உடனே மதுராவிற்கு திருமணம் நடத்திவிட வேண்டும் என்று முனைப்பாக இருந்தாள்.

மதுராவின் மனநிலையே வேறு...

பிரதாப் என்னைத்தான் விரும்புகிறாரா... இந்தச் செய்தி அவளுள் சிலிர்ப்பை ஏற்படுத்தியது... சந்தோஷத்தில் இதயம் விம்மி வெடித்திடும் போல இருந்தது.

'பிக்னிக்'கின் போது நடந்த சம்பவத்தால் அவளுக்குள் ரசாயன மாற்றமே ஆகிவிட்டது... அவளையும் அறியாமல் பிரதாப்பிடம் ஈர்ப்பு உண்டாகியது... உள்ளம் அவன் நினைவில் ஏங்கித் தவித்தது.

அந்த அணைப்பு... அவனது கரிசனம்...இதம் தந்த வார்த்தைகள்... மறுபடியும் கிடைக்குமா என்று ஏங்கினாள்.

அவனது பரந்த மார்பினில் சாய்ந்து குழந்தையாய் அவனுடன் ஒண்டியபோது ஏற்பட்ட பாதுகாப்பு உணர்வு... அந்த மார்பில் தன் வாழ்நாள் முழுக்க தலைசாய்த்து மகிழ வேண்டும் என்ற துடிப்பு... எல்லாமே அவளுக்கு புது அனுபவமாய் தெரிந்தது...

இதுதான் காதலா... இதற்காகத்தான் மனித இனத்தில் போராட்டங்கள் நடக்கிறதா... அதற்கு இத்தனை சக்தியா இந்தக் காதலுக்காகத் தானே தன் சித்தி பெற்றோர்களை உதறிவிட்டுச் சென்றதும்... அப்படியென்றால் சித்தி செய்ததில் தவறொன்றும் இல்லையே...

இது ஏன் பாட்டிக்கு புரியவில்லை... காதல் என்றாலே காளியாக மாறுகிறாளே...

கடவுளே... என் காதல் நிறைவேறுமா... இல்லை பாட்டியின் கோப வேள்வியில் எரிந்து சாம்பலாகிப் போகுமா... நினைக்கவே நெஞ்சில் பிசைந்தது.

பிரதாப்பின் கடைக்கண் பார்வை கிடைக்குமா என்று ஹேமாவும் கவிதாவும் தவம் கிடக்கையில்... எட்டாத பழம் எனறிருந்தவன்... தானே கனிந்து தன்னிடம் வந்திருக்கிறார்... பாட்டியின் அர்த்தமற்றப் பிடிவாதம் கெடுத்து விடும் போலிருக்கிறதே... மனம் கிடந்து தவித்தது.

அதே சமயம்... பிரதாப் இன்னும் வாய்விட்டு தன் காதலை சொல்லவில்லை... சௌம்யா தான் சொன்னதும், ஒருவேளை... தன்னைப் பெற்றவர்கள் இருந்திருந்தால் தைரியமாய் வந்து பெண் கேட்டிருப்பாரோ என்னவோ.

பாட்டியின் சுபாவம் தெரிந்து எட்டியே நிற்கிறார் போலும். என்றெல்லாம் எண்ணி மறுகினாள் மதுரா.

மதுராவின் தாத்தா ராமநாதன் பாட்டியைப் போல பழம் பஞ்சாங்கம் இல்லை...

காலம் மாறிவரும் போது நாமும் கொஞ்சம் விட்டுக் கொடுத்து காலத்திற்கு தகுந்த மாதிரி மாறிக் கொள்ள வேண்டும் என்று நினைப்பவர்....

தன் மகள் வேறு ஜாதியைச் சேர்ந்த ஒருவனுடன் ஓடிப் போனாளே என்று குன்றிப் போனவர்தான்... அந்த



அப்போது. காலத்தின் மாற்றம் அவர் மனதைப் பக்குவப் படுத்தியிருந்தது என்றுதான் சொல்ல வேண்டும்... இந்த காலத்தில் இதெல்லாம் சகஜம்தான் என்ற நிதர்சனத்தை அவர் ஏற்றுக் கொண்டாலும்... மனைவிக்காக மௌனம் காத்தார்.

இப்போதும் அவருக்கு மகிழ்ச்சியே... பிரதாப் நல்ல பிள்ளை... அவனுக்கு என்ன குறைச்சல்... மதுராவிற்கு ஏற்ற மாப்பிள்ளைதான் என்று உள்ளுக்குள் நினைத் தாலும் அதை வெளிப்படையாய்... தைரியமாய் சொல்ல முடியாதே.. மனைவி நார் நாராகக் கிழித்துப் போடமாட் டாளா... அதுதான் மௌன விரதம் இருந்தார்...

வேறு வழியின்றி மனைவி சொல்லே மந்திரம் என்று... அவள் சொன்னபடியே தன் மகனுக்கு கடிதமும் போட்டு விட்டார்.

தேர்வும் வந்துவிட்டது...

மும்முரமாய் படிப்பில் ஈடுபட்டாள் மதுரா. அலை பாயும் மனதைக் கட்டுப்படுத்த அது ஒன்றுதான் வழி யாகத் தெரிந்தது....

அவ்வப்போது பிரதாப்பின் நினைவு வந்து வாட்டும்... அவனை சந்திக்க வேண்டும்... அவனது குறும்புத்தன மான பேச்சுகளைக் கேட்கவேண்டும் என்ற துடிப்பு வரும்...

ஆனால் பாட்டியின் கடுவன் பூனை முகத்தைப் பார்த்து அடக்கிக் கொள்வாள்...

கனிந்து வந்த காதலுக்கு இப்படி ஒரு தடையா என்ற வேதனைப் பிடுங்கி எடுத்தது.

அதை மறக்க மெய்வருத்தம் பாராமல்... பசி நோக் காமல் கண் துஞ்சாமல் கருமமே கண்ணாகத் தேர்வுக்குப் படித்தாள்.



அவள் மட்டுமா... கவிதாவும் ஹேமாவும் தான், தம் நிறைவேறாத காதலில் மனம் துவண்டவர்கள்... அந்த துக்கத்தை மறக்க முழுமூச்சாய் படிப்பில் இறங்கினார்கள்.

காதலில் தான் தோல்வி... படிப்பிலாவது வெற்றிபெற லாம் என்ற எண்ணத்தில் விழுந்து விழுந்து படித்தார்கள்.

சௌம்யாவின் கதை வேறு... தேர்வு முடியும் வரை சந்திப்பு கூடவே கூடாது என்று அரவிந்த் வரவிற்கு தடா போட்டுவிட்டாள் சௌம்யா...

"கொஞ்சம் தயை காட்டும்மா செல்லம்... தூர இருந் தாவது தரிசனம் பண்ணிக் கொள்கிறேன்" என்று அவன் கெஞ்சினான்.

அவனது தவிப்பை உள்ளுக்குள் ரசித்தவள்.... வெளியே கண்டிப்புடன் சொன்னாள்.

"மூச்... 'எக்ஸாம்' முடியும் வரை இந்தப் பக்கமே வரக் கூடாது. அப்புறம் எனக்குக் கெட்ட கோபம் வரும்... 'டிஸ்டிங்ஷனில்' பாஸ் பண்ணனும்னு இருக்கேன்... என்னோட குறிக்கோள் அதுதான்..."

"எதுக்கும்மா கஷ்டப்படறே... எப்படியிருந்தாலும் தொட்டில் ஆட்டப்போற... அதுக்கு எதுக்கு 'டிஸ்டிங்ஷன்' எல்லாம்... ஏதோ படிச்சேன்.. எழுதினேன் என்று... ஆ" சௌம்யா எறிந்த புத்தகம் மேல் விழ... பொய்யாய் வலிபட்ட மாதிரி கத்தினான்...

"இனிமேல் நான் வந்தால் அப்போ சொல்லு..." என்று வீறாப்பாய் சொல்லி விட்டுச் சென்றவன்... மறபடியும் வந்து நிற்க...

சௌம்யா முறைத்தாள்...

"உன்னை யார் பார்க்க வந்தது... பிரதாப் எங்கே... பிரதாப்..." என்று அவனைத் தேடுவது போல பாசாங்கு செய்யும் அவனைக் கண்டு சிரித்து விடுவாள்...



உடனே அவன் முகம் மலர்ந்து விடும்...

ஒரு வழியாய் தேர்வும் கடந்து போனது.

ஒரு நல்ல நாளில் சௌம்யாவின் நிச்சயதார்த்தமும் விமரிசையாய் நடந்தேறியது.

தப்பாமல் கவிதாவும் ஹேமாவும் வந்தது அவளுக்கு மனநிறைவு தந்தது.

எந்தவித காழ்ப்பும் இன்றி... ஏமாற்றத்தை சகஜமாய்... ஒப்புக் கொண்டு ... எப்போதும் போல நட்புப் பாராட்டி வந்தார்களே... ரியலி கிரேட்!

ஆனால் மதுரா வராததுதான் சங்கடத்தில் ஆழ்த்தியது. நிச்சயம் பாட்டி லட்சுமண ரேகையைப் போட்டிருப்பாள். அதை மீறிக் கொண்டு வர அவளுக்கு ஏது தைரியம்....

மதுரா வருவாள் என்று நம்பிக்கை இல்லாவிட்டாலும் ஒருவேளை வரலாமோ என்ற நப்பாசையும் அவளது வரவுக்காக காத்திருந்த பிரதாப்பிற்கும் நிராசைதான்.

அதை வெளிக்காட்டாது வளைய வந்தான்...

நிச்சயதார்த்த வைபவம் நல்லபடியாக முடிந்ததும் நேரே அத்தையிடம் வந்தான் பிரதாப்.

"நான் போய் மதுராவின் பாட்டியிடம் பேசிப் பார்க் கட்டுமா அத்தை..." என்றான்.

"வேண்டாம் ராஜா... பாட்டி எந்த மாதிரியோ... உன்னைத் தரக்குறைவாக ஏதாவது பேசிவிட்டால் மன சுக்கு கஷ்டமாகிவிடும்... போகாதேப்பா..." என்று தடுத்து விட்டாள் அத்தை...

"அண்ணா... நான் சொல்வது போலச் செய்யேன். பாட்டிதான் மோசமே தவிர... மதுராவின் தாத்தா மிகவும் நல்லவர்... நீதான் அவரைப் பார்த்திருக்கிறாயே... அவர் கிட்டே பேசிப் பாரேன்... உன் மீது அவருக்கு நல்ல

அபிப்ராயமாம்... மதுரா என்கிட்டே சொன்னாள்... இப்போ... அந்தப் பாட்டியின் வாய்க்குப் பயந்து மௌனமாக இருக்கிறார். ஒருவேளை அவர் உனக்கு உதவலாம்... டிரை பண்ணேன்."

இது சரியாகப்பட்டது அவனுக்கு.

சௌம்யா கூறியது போலவே தாத்தா ராமனாதன் கண்ணியமாய் பேசினார்.

"உன்னை எனக்கு ரொம்பவும் பிடித்திருக்கிறதப்பா... ஆனா என்ன பிரயோசனம்... பாட்டிக்கு மனசில்லையே... அவள் சம்மதம் தானே முக்கியம்... எனக்கு எந்தவித ஆட்சேபனையும் இல்லை... ஒருமுறை காதல் கல்யாணத்தை ஒத்துக்காமல் என் மகளை இழந்தாச்சு... இன்னும் அந்த ரணமே ஆறாமல் இருக்கு... எனக்கு எல்லாமே என் பேத்தி மதுராதான்... அவள் மீது உயிரையே வைத்திருக்கிறேன்... அவளையும் நான் இழந்து விடக் கூடாது பார்... அன்றைக்கு சமூகத்திற்கு பயந்து வாயை மூடிக் கொண்டேன்... இந்தக் காலத்தில் எல்லாமே சகஜமாகிப் போச்சு என்கிறது உண்மைதான்... இருந்தும் வாயை மூடிக் கொண்டிருக்கிறேன்னா... என் மனைவிக்காக... அவ்வளவுதான்... அவ நல்லவதான்... ஆனா பிடிவாதம் ஜாஸ்தி... எதையும் சீக்கிரத்தில் விட்டுக் கொடுக்கமாட்டா."

"பாட்டி மனம் மாறமாட்டாரா... சார்..."

"தெய்வம் தான் அதைச் செய்யணும்... நான் வெளியே நாலு இடங்களுக்கு போய் வருபவன். வெளி உலகம் மாறி இருப்பதை புரிந்து கொள்ள முடிந்தது. ஆனால் அவள் அப்படி இல்லையே... வீடே உலகம்னு நினைக்கிற கிணற்றுத் தவளை ஜாதி.... அவளையும் குற்றம் சொல்ல முடியாதுப்பா..."



"சார்... மதுரா மீது நான் உயிரையே..."

"வைத்திருக்கிறாய்... அது தெரிகிறது... உங்க காதல் உறுதியானது என்றால் நிச்சயம் ஜெயிக்கும். குழந்தை மதுராவும் பாவம்... வாயில்லாத பெண்... அவளும் உன்னை விரும்புகிறாள் என்று தெரிகிறது. தைரியமாக இருப்பா பிரதாப்..."

"யாரோ கிருஷ்ணா என்று..."

"சின்ன வயசில் பேசி வைத்ததுதான்... என் பிள்ளை வயித்துப் பேரன்... ஆனா முடிவு செய்யறது மேலே இருப்பவனாச்சே... பார்க்கலாம்... கல்யாணம்னதுமே யாரும் தாலி கட்டி விடுவதில்லை... பொறுத்திருப்பா... உனக்குதான் மதுரா என்று எழுதியிருந்தால் நிச்சயம் கிடைப்பாள்... அதை மனதில் வை பிரதாப்..."

"வந்து... சார்..."

"தாத்தான்னே அழைப்பா... எனக்கு நீ பேரன் மாதிரி தான்..."

அந்தப் பெரியவரின் அன்பையும் பண்பையும் நினைதது மனசுக்குள் வணங்கினான் பிரதாப்.

"மதுராவை ஒரு தடவை... ஒரே ஒருமுறை சந்திக்க வேண்டுமே தாத்தா..." அவனது குரலில் தெரிந்த ஏக்கமும் தவிப்பும் பெரியவரின் மனதை நெகிழ வைத்ததோ என்னவோ...

"பாட்டியின் கழுகுப் பார்வையிலிருந்து தப்பி அவள் வர வேண்டும்... முயற்சிக்கிறேன்... உன் வீட்டுக்கு வந்திருக்கிறாள் என்று தெரிந்து விட்டால் பிரளயமே ஏற்படும்... ஒன்று செய் பிரதாப்... நாளைக் காலை... வெள்ளிக்கிழமையென்று கோவிலுக்கு போகச் சொல்கிறேன்... நீ அவளை... ஊகூம்... யாராவது பார்த்து விட்டால்



கஷ்டம்... உன் தங்கையை அனுப்பி அவளை அழைத்துச் செல்... அரை மணி நேரம் போதும்... மதுராவைத் திருப்பி அனுப்பிடுப்பா... இந்த வயதான கிழவனால் இவ்வளவு தான் உதவ முடியும்..."

அவரை நன்றியுடன் பார்த்தான் பிரதாப்...

மறுநாள்...

எப்படியோ சமாளித்து மதுராவைப் புறப்படச் செய்தார் ராமனாதன்.

பாட்டி குளிக்கச் சென்றிருந்த போது பேத்தியிடம் ரகசியமாய் தான் செய்திருக்கும் ஏற்பாட்டை சுருக்கமாய் சொல்லி...

"இதோ பாரும்மா... வெறும் பேச்சோடு வந்து விடாதே. அந்தப் பிள்ளையோட அத்தை... அப்பா எல்லோரும் இதில் விருப்பமா என்று தெரிந்து கொள்... உன்னை அங்கு அனுப்பும் காரணமே அதுக்குத்தான்... புரிந்தது தானே..." என்று அனுப்பி வைத்தார்.

மதுரா பிரதாப்பை சந்திக்கும் ஆர்வத்தில் துள்ளிக் கொண்ட கிளம்பினாள்.

## 15

பிரதாப் வீட்டில் எப்படி வரவேற்பு இருக்குமோ என்று 'படக் படக்'கென்று நெஞ்சம் அடித்துக் கொள்ளச் சென்றவளுக்கு அத்தையின் மலர்ந்த முகம் உற்சாகத்தைத் தந்தது.

மதுராவைப் பார்த்ததும் 'என் ராஜாத்தி' என்று கன்னத்தை வருடினாள் அத்தை.



"எனக்கு ரொம்ப சந்தோஷமா இருக்கும்மா. நான் என்ன நினைச்சேனோ அது நடந்து விட்டது... உன்னைப் பார்த்ததும் இந்த மாதிரி மருமகள்தான் இந்த வீட்டுக்கு வரணும்னு ஆசைப்பட்டேன்... அதே போல... நீயே வந்துட்டே... பிரதாப் விரும்புறதும் உன்னைத்தான் என்று தெரிந்ததும் எனக்கு இரட்டிப்பு மகிழ்ச்சி... உன் சிநேகிதியை கையில் பிடிக்க முடியவில்லை... நீ இந்த வீட்டுக்கு சீக்கிரமே மகாலட்சுமியா வரணும்னு தான் என் ஆசை மதுரா..." அந்த வார்த்தைகளில் குளிர்ந்து போனாள் மதுரா.

அத்தைக்கு பரிபூர்ண சம்மதம் என்ற நினைப்பில் மகிழ்ச்சி பூத்தது.

அடுத்து... சுந்தரம் வந்தார்...

"வாம்மா... என் மருமகளே... இத்தனை நாள் என் பொண்ணோட சிநேகிதி என்று நினைத்து உன்னை வரவேற்றேன்... இப்போ... இந்த வீட்டின் மருமகள் ஆச்சே... 'ஸ்பெஷலாய்' நல்வரவு சொல்லியேயாகணும் இல்லையா... வெல்கம்... மகளே... வெல்கம்... அதுசரி... அதெப்படி இந்த எமகாதகப் பயலை வலையில் விழ வச்சே... 'கல்யாணமா... எனக்கா... மூச்' என்று ஜல்லிக்கட்டு காளை மாதிரி திரிந்தவனை 'க்ளீன் போல்ட்' பண்ணிட்டியேம்மா... பலே.... பலே..." வேடிக்கையாய் அவர் பேசியதைக் கேட்டதும் இருந்த கொஞ்ச நஞ்ச பயமும் போயே போச்சு...

இந்த அன்புள்ளங்களுக்கு உறவாகப் போகிறோம்... இந்த வீட்டில் நானும் ஒருத்தியாகப் போகிறேன் என்ற எண்ணம் தந்த சுகத்தில் சுத்தமாய் பாட்டியை... பாட்டியின் பிடிவாதத்தை மறந்தே போனாள்.

அவளது கண்கள் ஆவலுடன் வளைய வந்தன... பிரதாப் எங்கே.. அவனை நாடித்தானே வந்தேன். அவனது முகத்தைப் பார்த்துவிட்டால் போதும்... என்று ஓடிவந்தால்... அவனைக் காணோமே...

அவளது விழிகளில் நிராசை தெரிந்தது.

''என்ன மதுரா... என் அண்ணனைக் காணமுடியவில்லையே என்ற ஏக்கமா... தவிக்கிறாயே... குட் காதலுக்கு இந்தத் தவிப்பு அவசியம் தெரியுமா... இல்லாவிட்டால் காதலில் சுவை இருக்காதுடீ... தவிப்பு ஏறஏற அன்பு இன்னும் கூடும்... பாரேன்... அண்ணா வந்ததும் நீயே ஓடிப்போய் அவனைக் கட்டிப்பிடித்து...''

"ச்சீ... என்ன இது சௌமி... விவஸ்தை இல்லாமல்..." கன்னங்கள் சூடேறி சிவக்க... மதுரா சொன்னதும்...

''அட... வெட்கத்தைப் பாரேன்... இந்த மதுராவா என் அண்ணனைப் பார்த்து ஓடி ஒளிந்தது... இந்த மதுராவா... பிரதாப்பை பார்த்ததும் காய்ச்சல் கண்டது... இந்த மதுராவா... பயப் பார்வையுடன் தலையணையை எடுத்துக் கட்டிக் கொண்டது... நம்ப முடியவில்லை... இல்லை... இல்லை...'' என்றாள் ஒரு பரிகாசப் புன்னகையுடன்...

''ப்ளீஸ் டீ... என்னை டீஸ் பண்ணாதேயேன்...''

''மாட்டேன்... அதுக்காக உன்னை இங்கு அழைத்து வரவில்லை... ஆங்... நீ யாரைப் பார்க்க ஆசையா இங்கு வந்தாயோ... அவரே வந்தாச்சு... இனி நீயாச்சு... அவனாச்சு... வரட்டுமா... டாடா...''

"சௌமி..."

''நோப்பா... பூஜை வேளையில் கரடிக்கு வேலை இல்லை... நான் ஜூட்...''

அவள் செல்வதை கவலையுடன் பார்த்துக் கொண்டிருந்தவளின் பார்வையில் பிரதாப் பட்டான்...



மதுராவைப் பார்த்ததும் சிலையாக நின்றான் அவன். இருவரும் ஒருவரையொருவர் பார்த்தவாறு எத்தனை வினாடிகள் நின்றார்களோ... தெரியாது.

முதன்முதலாய் அவனுடன் தனிமையில் இருப்பதை உணர்ந்தவளுக்கு மேனியில் மெல்லிய நடுக்கம்... பார்வையைத் தாழ்த்தினாள்.

சே... அவனைப் பார்க்க வேண்டும் என்று வந்தோமே... ஆனால் பார்க்க முடியாமல் ஏதோ தடுக்கிறதே... அவனுடன் பேச வேண்டும் என்றுதானே வந்தது... பின் என் நாக்கு புரளாமல் மேலண்ணத்தில் ஒட்டிக் கொள்கிறது... இதயம் இப்படி மெஷின் மாதிரி சத்தம் போட்டு துடிக்கிறது...

அவனது மார்பில் முகம் புதைத்து... அவனது கையணைப்பில் கிடந்த போது இல்லாத வெட்கமும் தவிப்பும் இப்போது வந்து இம்சிக்கிறதே...

மதுரா சங்கடத்துடன் அவனை ஏறிட்டாள்...

அவன் அவளையேப் பார்த்தவாறு நின்றிருந்தான்... கண்களால் அவளை அள்ளிப் பருகி... மனதில் நிரப்பிக் கொள்பவனைப் போல ஒரு தீர்க்கமான பார்வை! அந்த குறுகுறு பார்வை அவளை ஏதோ செய்தது. மூச்சு அடைத்தது போல நெஞ்சு விம்மித் தணிந்தது. உஷ்ணத்துடன் பெருமூச்சுகளாய் வந்தது...

உடம்பின் ஒவ்வொரு அணுவிலும் மின் அலை வேகம்! பிரதாப் கண்களால் அவளை விருந்துண்டான்.

மதுராவிற்கு அவன் மார்பினில் சாய்ந்து கொள்ள ஏக்கம்... ஆனால் அவனது அருகில் செல்ல ஏதோ தயக்கம்...

அவனது வெள்ளை நிற சட்டையின் முதல் இரு 'பட்டன்கள்' போடாததால்... அவனது திறந்த மார்பு



கண்களில் பட்டது... ரோமம் படர்ந்த அந்த மார்பில் தானே சாய்ந்திருந்தேன் என்ற நினைப்பில் முகம் கன்றி சிவந்தது....

இனியும் தாள முடியாது என்ற உந்துதலில்... பிரதாப்பின் இருகரங்களும் நீண்டு... அவளை 'வாயேன்' என்று அழைக்க...

அவிழ்த்து 'விடப்பட்ட கன்றின் வேகத்தில் ஓடிச் சென்று அவனின் மார்பில் முகம் புதைந்தாள்.

இதற்குதான்... இந்த சுகத்திற்குத் தான் ஏங்கியதே... கண்களை மூடிக் கொண்டு அதை அனுபவித்தாள்... சந்தோஷத்தின் உச்சத்தில் கண்களில் நீரின் தளும்பல்... அவனது கரங்கள் அவளை இறுக அணைத்துக் கொண்டன...

அந்த அணைப்பு... ஏதோ ஜென்ம ஜென்மமாய் பழகினது போலப் பாந்தமாய் இருந்தது அவளுக்கு.

அவனது மேனியிலிருந்து வந்த ஒரு வித மணம்... பவுடரா... வாசனை திரவியமா... இல்லை... முகத்தில் தடவிய ஆஃப்டர் ஷேவ் லோஷனா... அதுவும் இல்லாமல் ஆண்மைக்குரிய வாசமா... தெரியவில்லை... எதுவோ அவளைக் கிறங்க வைத்து... கிளர்ச்சியூட்டியது.

அவனும் அவளது கூந்தலின் மீது முகம் புதைத்து... ''மது... என் மது டார்லிங்'' என்று மென்மையாய் முணுமுணுத்தவன்... அவளது அருகாமை தந்த மயக்கத்தில் தன் வசம் இழந்தான்.

காதலுக்குத்தான் எத்தனை சக்தி...

அவன் பெயரைக் கேட்டாலே அஞ்சி நடுங்கி ஓடுபவளை... இப்படி அவனுடன் ஒட்டி உறவாடும் துணிவைத் தந்து விட்டதே....



பாட்டிக்கு பிடிக்காது என்று தெரிந்திருந்தும் அதை செய்யும் துணிச்சல் அவளுக்கு வந்துவிட்டது என்றால்... எல்லாம் காதல் செய்த மாயம்தான்!

''மது... மது டியர்...'' என்று அவன் அழைக்க...

''ம்ம்....'' கண்களை உயர்த்தி அவனைப் பார்த்தாள் .

''இன்றைக்கு உன்னை வரவழைத்து... என்னை மணந்து கொள்ள விருப்பமா என்று கேட்க வேண்டும் என்று நினைத்தேன்... இப்போது புரிந்தது மது... அதற்கு அவசியமில்லை என்று...!''

ஓடிப்போய் அவனுடன் ஒண்டியதைக் குறிப்பிடுகிறான் என்பதை அவளும் உணர்ந்தவளாய் முகத்தை கவிழ்த்தாள்.

''ஏய்... என்ன வெட்கமா... இதுவும் அழகாக இருக்கிறது'' அவளது முகத்தை நிமிர்த்தி... அவளது கண்களை உற்று நோக்கினான்... அவனது கூரியப் பார்வையை தாளமுடியாமல் அவள் கண்களை மூடிக் கொள்ள... அந்த சிப்பி இமைகளின் மீது தன் உதடுகளைப் பதித்தான்...

அந்த உதடுகளில் ஈரம் பட்டதும் துடித்துப் போனான். கண்ணீர் முத்துக்கள்!

''மது... என்னம்மா... நான் ஏதாவது தப்பாய் சொல்லிவிட்டேனா... பின்னே... ஏன் இந்தக் கண்ணீர்... வேண்டாம் கண்ணம்மா... அன்றைக்கு காரில் உன் கண்களில் வழிந்த நீரைப் பார்த்ததும் நான் பட்ட வேதனை போதும்... இனி... இந்தக் கண்களில் ஒரு துளி நீரும் வரவிடாமல் பார்த்துக் கொள்ள வேண்டும் என்று உறுதியும் செய்து கொண்டேன்... திரும்ப இந்தக் கண்களில் கண்ணீர் என்றால்... என்னால் தாளமுடியாது டியர்...'' வேதனையில் குரல் தழுதழுக்க அவன் சொல்லவும்...

"இல்லை... எனக்குப் பயமாய் இருக்கிறது பிரதாப்...
நம் திருமணம் நடக்குமா... தெரியவில்லையே..."
என்றாள் அவள்... அவளது குரலில் லேசாய் நடுக்கம்.

அவளது கண்களை தன் கைக்குட்டையால் துடைத்த
வாறு சொன்னான் அவன்.

"உன் மன உறுதிதான் எனக்கு வேண்டும் மது...
நிச்சயம் இந்தத் திருமணம் நடந்தே தீரும்... நீதான் என்
மனைவி என்று அப்போதே அந்தக் கணத்திலே என்
உள்மனம் சொல்லிவிட்டது தெரியுமா... அது பொய்யா
காது டார்லிங்..."

"எப்போது..."

"எப்போதா... ம்ம்... என் கார் முன் விழ இருந்தாய் பார்...
நான் 'நான்சென்ஸ்' என்று கத்தியதும் அரண்டு போய்
நின்றாயே... அதை எப்படி மறப்பேன்... இந்த அழகான
விழிகள் அகலமாய் விரிந்து... இந்தச் செப்பு இதழ்கள்
மொட்டவிழ்ந்த மாதிரி விரிய... அசையாமல் சில வினாடி
நின்றாய் பார்... அப்போது இருக்கலாம். அப்போதே என்
இதயம் அசைந்து கொடுத்திருக்க வேண்டும்... அந்தக்
கணத்தில் இந்தச் சிவந்த இதழ்களை தொட்டுப் பார்க்க
வேண்டும் போலத் துடிப்பு வந்தது... அப்புறம்... கல்
லூரிக்கு வரும் போதெல்லாம் கண்களால் உன்னைத்
தொடருவேன்... உன் பயம்... தவிப்பு... ஒதுங்கல் இதை
யெல்லாம் பார்த்து முதலில் சிரித்தாலும்... போகப் போக
அதுவே என்னைப் பாடாய் படுத்தியதும்மா... உன்னை
அணைத்து 'பயப்படாதே மது நான் இருக்கிறேன்' என்று
சொல்ல வேண்டும் போல வரும்.... அடக்கிக் கொள்
வேன். அதற்குப் பிறகுதான் புரிந்து கொண்டேன்... என்
இதயத்துள் நுழைந்து அதில் சிம்மாசனம் போட்டு
அழுத்தமாய் நீ உட்கார்ந்து விட்டதை... தினமும்



உன்னைப் பார்க்கணும்... பேசணும்... மனம் விட்டுப் பழக
வேண்டும் என்ற ஆசை வந்தாலும்... எங்கே... சௌம்யா
விடம் 'பெட்' கட்டியிருந்தேனே... அதற்காக அதை
வெளிக்காட்டாமல் இருந்தேன்... அப்படியே என் காதலை
உன்னிடம் சொல்லியிருந்தாலும் முதல் சந்திப்பில் நின்ற
மாதிரி அதிர்ச்சியில் 'ஆ'வென்று வாய் திறந்தபடி
மிரட்சியோடு நின்றிருப்பே... அப்படித்தானே..."

அதைக் கேட்டு விட்டுப் புன்னகைத்தவள் "தெரிய
வில்லை செய்திருப்பேன்" என்றாள்.

"ஆங்.... அதனால்தான் சற்றே விலகி இரும் பிள்ளாய்
என்று எனக்கு நானே சொல்லிக் கொண்டு தள்ளியே
இருந்தேன். இருந்தாலும் மனம் அடித்துக் கொள்ளும்...
என்னென்னவோ ஆசைப்பட்டுத் தவிக்கும்..."

"என்ன ஆசை..."

"கல்லூரி விழாவில் என்னைப் பார்த்ததும் 'திக்'
கென்று நின்றாய் பார்... எனக்குப் பிடித்தமான 'போஸில்'...
அபபோது..." தயங்கினான் அவன்.

"ம்ம்... அப்போது..."

"அப்போது... குனிந்து... இந்த ஆரஞ்சு சுளைகளை
சுவைத்து பார்க்கணும் என்றுதான்..." அவளது இதழ்களை
வருடியவாறு அவன் சொல்ல...

"ச்சீய்... அப்படியெல்லாம் தோன்றியதாக்கும்... ஒண்
ணுமே தெரியாத நல்ல பிள்ளை மாதிரி முகத்தை வைத்துக்
கொண்டு... உள்ளுக்குள் இப்படியெல்லாம் நினைப்
பாக்கும்..." அவனது மார்பில் விளையாட்டாய் குத்த...
அவன் சிரித்தான்...

அவனது அணைப்பும் இறுகியது...

"ஒன்று தெரியுமா... டார்லிங்... காதலில் விழுந்தவர்
களுக்கு நல்லது கெட்டது எல்லாம் தெரியாது... காதல்...



காதல் மட்டுமே தெரியும்... பாரதியார் பாடி வைத்திருக்
கிறார் பார்... காதல்... காதல்... காதல்... காதல் போயின்
சாதல்... சாதல்... சாதல் என்று... அது சத்தியம் என்று
இப்போது எனக்குப் புரிகிறது... அந்தப் பண்ணைத்
தோட்டத்தில்... உன்னை மாடு முட்டித் தள்ள வந்தது
பார்... அந்தக் கணத்தில் என் உயிரே போய்விட்ட மாதிரி
இருந்தது எனக்கு... அப்போது தான் உணர்ந்தேன். மது...
இந்த உலகத்தில் நீ எனக்கு எத்தனை முக்கியம் என்று...
மற்ற எல்லாமே எனக்குத் துச்சம் என்று... நீ இல்லாமல்
உயிர் வாழ்வது சாத்தியம் இல்லை என்று... நீதான் எனக்கு
சர்வ சுகமும் என்று... பந்தயத்தில் தோற்றாலும் சரி...
எல்லோரிடமும் என் காதலைச் சொல்லி... உன்னை
என்னுடையவளாக்கிக் கொள்ள வேண்டும் என்ற ஆவேச
மும் வந்தது... ஆனால் அதற்குள் என் தங்கையே கண்டு
பிடித்து விட்டாள்..." உணர்ச்சியில் அவனது குரல் கர
கரத்தது... இதயம் சத்தமாய் ஒலித்தது.

மதுரா அவனது அன்புமழையில் நனைந்தவளாய்...
அவனது கரத்தைப் பற்றி... உள்ளங்கையில் தன் இதழ்
களைப் பதித்து தன் காதலை உணர்த்தினாள்.

அவனது மூச்சு வெம்மையாய் அவள் மேல் பட்டது.

"என்னால் இன்னும் நம்ப முடியவில்லை மது... நாம்
இருவரும் இப்படி இணைவோம் என்று எதிர்பார்க்கவும்
இல்லை... சௌம்யாவின் வார்த்தைகளை ஏதோ
விளையாட்டுப் பேச்சாய் நினைத்து அவளிடம் சீண்டி
னேன். ஆனால் அவள் நினைத்தது போல அவளது
தோழியே எனக்கு மனைவியாவாள் என்று நினைக்கவும்
இல்லை."

"உண்மைதான்... ஆனால் ஆள்தான் மாறிவிட்டது..."
என்றாள் மதுரா...



அவன் குழப்பத்துடன் பார்க்க...

"அதாவது எனக்குப் பதிலாய் ஹேமாவோ... இல்லை
கவிதாவோ வந்திருக்க வேண்டும்... நான் உங்களுக்கு
பொருத்தமானவள் இல்லைதான். ஹேமாவோ...
கவிதாவோதான் உங்கள் ஸ்டேட்டஸுக்கு பொருத்தம்
என்று நினைத்தேன்... இருந்தும்..." என்றாள் அவள்.

"எந்த விதத்தில் நீ குறைவு என்று சொல் மது...
உனக்குத் தெரியுமா டியர்... உன் சிநேகிதி... என் தங்கை
சௌமி முதலில் உன்னைத்தான் எனது வாழ்க்கைத்
துணையா 'செலக்ட்' பண்ணியிருந்தது... திகைப்பாக
இருக்கிறது இல்லையா... 'பட்' அதுதான் உண்மை...
ஆனால் உனக்கு வேறு இடத்தில் நிச்சயமாகியிருக்கிறது
என்றதால் அவள் தன் எண்ணத்தை மாற்றிக் கொண்டு
விட்டாள்... கடைசியில் அவளது விருப்பம் தான் ஈடே
றியது... ஏன் டார்லிங் நான் தினம் தினம் உன் நினைவில்
உருகி தவித்தது போல... நீயும் என்னை நினைத்தாயா..."

'டார்லிங்' என்ற அவனது அழைப்பு அவளுள் இன்ப
அலைகளைக் கிளப்பியது... 'டார்லிங்' என்றால் உயி
ருக்கு உயிரானவள் என்றல்லவோ அர்த்தம்...

அவனது அருகே நெருங்கவும் யோக்கியதை தனக்கு
இல்லை என்று மருகினேனே... அவனது உயிருக்கு...
இல்லை... இல்லை... அவனுடைய உயிர் என்றே ஆகும்
பேறு கிடைத்ததே... தெய்வமே... இத்தகைய அதிர்ஷ்
டத்தைக் கொடுத்த உனக்குக் கோடி நன்றி... அவள்
மகிழ்ச்சியில் திக்கு முக்காடினாலும்... விதியின் ஆட்டம்
எப்படியோ என்ற அச்சமும் அரித்தது.

"ஏய்... மதுக்குட்டி... என்ன நான் கேட்ட கேள்விக்கு
பதிலே இல்லை... ஒருவேளை என் நினைப்பு உனக்கு

சுத்தமாக வரவேயில்லையா... போச்சுடா...'' என்றான் பிரதாப்.

''உண்மையைச் சொல்லப் போனால் உங்க ஞாபகம் வந்தது. எப்படி என்றால் முகத்தைக் கடுகடுப்பாக்கி நான்ஸென்ஸ் என்று சீறிய கடுவன் முகம் தான் நினைவுக்கு வரும்... எனக்கு உதறல் எடுக்கும்... இனி உங்கள் கண்களில் படவே கூடாது என்று முடிவு செய்தேன்... இருந்தும்...''

''பட்டுவிட்டாய்... ம்ம்''

ஆமாம் என்பது போல தலையசைத்தாள் அவள்.

அவன் பரிதாபமாய் முகத்தை வைத்துக் கொண்டு சொன்னான்.

''அப்போ... ஒருதலை ராகம் மாதிரி நான் மட்டும்தான் இங்கே தவித்துக் கொண்டிருந்தேன் போலிருக்கிறது. அடடா தெரிந்திருந்தால் தாடி வளர்த்திருப்பேனே...''

''ஊகூம்... உள்மனதில் இருந்திருக்கலாம்... அதைப் புரிந்து கொண்டது 'பிக்னிக்' அன்றைக்குத்தான்... அந்த விபத்தில் என்னை அணைத்து ஆறுதலாக பேசினீர்களே... அப்போதுதான் உங்களைக் காதலிக்கிறேன் என்பது உறுதியாச்சு...''

''இது... இதுபோதும் மதும்மா... இது எனக்கு 'டானிக்' மாதிரி... இனி எந்த எதிர்ப்பு வந்தாலும் சமாளிக்கும் தைரியம் எனக்கு வந்துவிட்டது.... எதுவும் செய்ய நான் தயார்... இதோ இதையும் கூட....'' என்று அவளது முகத்தின் அருகே குனிய...

''அண்ணா... மதுரா புறப்படணும்;... நேரமாச்சு'' சௌம்யாவின் குரல் சொர்க்கத்திலிருந்த அந்த ஜோடியை 'தடக்' என்று பூமிக்கு இழுத்தது.



பதறினாள் மதுரா... பாட்டிக்கு சந்தேகம் வரக் கூடாதே... சீக்கிரம் வீட்டிற்கு போயாகவேண்டுமே... விடைப் பெற்றுக் கொண்டாள்...

இதயம் கழண்டு போய் அவளுடன் ஒட்டிக் கொண்டு..... சென்று விட்டது போல இருந்தது அவனுக்கு... தன்னில் ஒரு பாதியை இழந்த உணர்வு... ஏதோ ஒரு அவஸ்தை... சொல்லவொண்ணா உணர்வில் அவன் மூழ்கினான்.

## 16

தாத்தாவிடம் பாட்டி சொல்லிக் கொண்டிருப்பது மதுராவின் காதில் விழுந்தது.

''என்ன... நான் சொன்ன மாதிரி சீனுவுக்கு கடிதம் எழுதியாச்சா... எப்போ வருகிறார்களாம்... சீக்கிரமே மதுராவுக்கும் கிருஷ்ணாவுக்கும் கல்யாணத்தை முடிச்சுட்டா... நம்ம பாரம் இறங்கின மாதிரி... நமக்கும் வயசாச்சு செய்ய வேண்டியதை காலாகாலத்தில் செய்து முடிச்சுடணும்... அப்பத்தான் நிம்மதி...''

கிருஷ்ணாவுடன் கல்யாணம்! நினைக்கவே சகிக்க முடியவில்லையே...

காதல் சாம்ராஜ்ஜியத்திற்கு அஸ்திவாரம் போடு முன்னே சமாதிக் கட்டிடமா...

அன்பு காவியத்திற்கு முகவுரை எழுதும்போதே முற்றுப் புள்ளியா... வீணையின் நாதத்தின் தொடக்கமே முகாரியா...

இதயத்தைக் கிழித்து எறிந்தது போல வலித்தது...



பிரதாப்புடன் இருக்கும் போது மலையாய் இருக்கும் நம்பிக்கை இப்போது கற்பூரமாய் கரைந்துக் கொண்டிருக்கிறதே...

காதல் நிறைவேறாதோ... என் விதி கண்ணீரில் எழுதப்பட்டிருக்கிறதோ...

பாட்டியின் எண்ணப்படி நடந்து விட்டால்... அய்யோ என் எதிர்காலம்... நரகமாகிவிடுமே... இதயத்தை பிரதாப்பிடம் கழட்டித் தந்து விட்டு... கிருஷ்ணாவுடன் உப்புக்குச் சப்பான வாழ்க்கையா... இதை விடச் சாவே மேல்... அனலில் விழுந்த புழுவாய் உள்ளுக்குள் துடித்துப் போனாள்...

கடந்து போன நாட்களை எண்ணி மறுகினாள்... எத்தகைய பொன்னான நாட்கள்... கல்லூரியிலும் அவனது வீட்டிலும் சந்தித்த வேளையில் ஊமையாகி ஒதுங்கினேனே... பேசவும் பயந்து மௌனமாகி... அதிர்ஷ்டத்தை நழுவ விட்டு விட்டு... இப்போது புலம்பித் தவிப்பதில் என்ன பிரயோசனம்... கண்கள் கெட்டதும் சூரிய நமஸ்காரம் செய்ய விழைவது போலதான்... சே!

என் வாழ்க்கையில் இனி அருணோதயமே இல்லை.. வெறும் இருட்டுதான்...

ஒளிக்கீற்றாய் பிரதாப்பின் நினைவுகள் வந்து அவளை உலுப்பின.

அவன் தன்னிடம் பேசிய வார்த்தைகள் அமிர்தத்துளிகளாய்... அவனது நினைவுகள் சஞ்சீவினியாய் மாறி... அவளது இதயத்தை நிறுத்தாமல் இயங்கச் செய்தது. இனி அவனைச் சந்திப்பேனா... இல்லை... அது முடியாமலே போய்விடுமா...

ஒருவேளை... கடிதம் பார்த்து விட்டுக் கிருஷ்ணாவும் மாமாவும் புறப்பட்டு வந்து விட்டால்... அய்யோ... அப்படி



நடக்காமல் இருக்கச் செய் பிள்ளையாரப்பா... எந்தக் காரியத்திற்கும் தடை வராமல் நடத்தி வைக்கும் விக்னேசுவரா... இந்தத் திருமணத்திற்கு 'விக்னம்' வரும்படி ஏதாவது செய்யேன்... எனக்கு நீதான் துணை... மனமுருகி வேண்டினாள் அவள்...

தாத்தாவின் நினைவு வந்தது.

தாத்தாவைப் புரிந்து கொள்ளவும் முடியவில்லை. எனக்கு ஆதரவும் தருகிறார்... அதே சமயம் பாட்டியிடம் அடங்கி விடுகிறார்... நல்ல மனம் உள்ளவர் போல பிரதாப் வீட்டிற்கு அனுப்பி வைத்தவர்... மாமாவுக்குக் கடுதாசி போட்டு வரச் சொல்கிறார்...

இவரை நம்புவதா... கூடாதா... குழம்பினாள் மதுரா.

திடீர் என்று தகவல் வந்தது... அனலை வாரி தன் தலைமேல் கொட்டியது மாதிரி...

திருமணம் பற்றி முடிவு செய்ய மாமா வருகிறாராம். உலகமே அஸ்தமித்துப் போய்... எங்கும் அந்தகாரம் சூழ்ந்தாற் போலப் பிரமை...

சீனுமாமா வந்ததும் ஏதோ பாட்டியிடம் கூடிப் பேசுகிறாரே... பாட்டியும் எதையோ 'குசுகுசு'க்கிறார். இருவரும் கூடி எதையோ திட்டமிடுவது போல் தோன்றுகிறது... நிச்சயம் கல்யாண ஏற்பாடுதான்... அதற்காகத்தான் இந்த ரகசிய ஆலோசனை...

அவளுக்கு அடிவயிறு கலங்கியது... மனசுக்குள் ஏதோ பிராண்டியது... மெல்ல மெல்ல தரை பிளந்து... ராட்சச வாயாக மாறி தன்னைக் கீழே இழுக்கிறது போல பயஉணர்வு வந்தது.

தன் விருப்பம் என்ன என்று ஒருவரும் கேட்கமாட்டேன் என்கிறார்களே... ப்ச்சு... ஆட்டைக் கேட்டு விட்டா

பலிக் கொடுக்கிறார்கள்... இதுவும் ஒரு வகையில் பலி தான். நரபலி!

அவளுக்கு அழுகையாக வந்தது.

சின்னக் கீறலாய் நப்பாசை... மாமாவிடம் சொல்லிப் பார்த்தால்... ஒருவேளை அவர் புரிந்து கொண்டு உதவலாமே... லேசாய் நம்பிக்கை முளை விட்ட தருணமே பயம் அதைக் கிள்ளி எறிந்தது...

மாமாவும் தாத்தா மாதிரி... பாட்டி முன் தலையாட்டிப் பொம்மையாகிவிட்டாரே... பாட்டியிடம் நான் சொன்னதை அப்படியே ஒப்பித்து விட்டால்...

வேறு வினையே வேண்டாம்... பாட்டி எனக்கு உயிருடனே சமாதிக் கட்டிவிடுவார்...

ப்ச்சு... தாத்தா உதவுவார் என்ற நம்பிக்கையும் ஓடி விட்டது.

அதோ... பாட்டியுடனும் மகனுடனும் சேர்ந்து அட்டகாசமாய் திருமண ஏற்பாடு பற்றி பேசிக் கொண்டு இருக்கிறார்... அவர் முகத்தில் சந்தோஷம்!

அவருக்கும் இந்தத் திருமணத்தில் உடன்பாடுதான்... சமயத்தில் மாமாவிடம் அடிக்குரலில் ரகசிய பரிமாறல் வேறு... நடந்தவற்றையெல்லாம் விவரமாய் சொல்கிறார் போலும்... இவரை நம்பி ஏமாந்தோமே...

இங்கே... காதலுக்கு உதவுவது போல நடித்து... அங்கே கல்யாண ஏற்பாடுகளுக்கு ஒத்து ஊதும் இவரை நம்பி பிரதாப்பும் ஏமாந்து மோசம் போனாரே...

பிள்ளையைக் கிள்ளி விட்டுத் தொட்டிலையும் ஆட்டும் புத்தி இவருக்கு என்று தெரிந்திருந்தால்...

பெருமூச்சு விட்டாள் அவள்.



தெரிந்திருந்தால் மட்டும் என்ன செய்துவிட முடியும்... பிரதாப்பிடம் ஓடிப் போய்... "என்னைத் திருமணம் செய்து கொள்ளுங்களேன்" என்று கேட்க முடியுமா... முதலில் அந்தத் தைரியம் எனக்கில்லையே... அப்படியே இருந்தாலும் அது கேவலமாயிற்றே... பிரதாப்போ... இல்லை அவர் வீட்டினரோ அதை விரும்பவும் மாட்டார்கள்...

அவர்கள் மதிப்பில் நான் மிகவும் தாழ்ந்து போய்விடுவேன்... அதுதான் மிச்சம்...

அதுமட்டுமா... இங்கே... பாட்டியும் தாத்தாவும் அவமானத்தில் உயிரையே விட்டுவிடுவார்கள்....

ஏற்கனவே சித்தி ஓடிப் போனதில் பாட்டிக்கு தலை குனிவும் மனதில் சித்ரஹிம்சையும் ஏற்பட்டது. போதாதா. அதையே நானும் செய்தால்... பாட்டி உத்திரத்தில் தொங்குவாள்... அப்புறம்... தாத்தா உயிருடன் இருப்பாரா. இருவரின் அழிவின் மேல் - என் வாழ்க்கையா... இருவரின் சாபத்தையும் பெற்றுக் கொண்டு எப்படி வாழமுடியும்... ஊகூம்... அது சாத்தியமில்லை... இதுதான் தலைவிதி என்றால் என்ன செய்ய முடியும்... நடப்பது நடக்கட்டும்... இறுகிப் போய்... உயிரற்ற பொம்மை போல வளைய வந்தாள் அவள்.

ஆனால்...

திருமணத்திற்கு தேதி குறித்ததும் உடம்பெல்லாம் அதிர்ந்தது. அவளையும் மீறி மனம் சண்டித்தனம் செய்து கொண்டு முரண்டு பிடித்தது...

பிரதாப்பை நினைத்து ஏங்கியது...

தன்னால் முடியாது என்ற நிலைக்குத் தள்ளப்பட்டாள்... முற்றிலும் குலைந்து போய்... தனிமையில் விம்மியழுதாள்.



பாட்டியும் கவனித்தாள்.... சுரத்தில்லாமல் ஜடம் போல் அவள் இருப்பதையும்... கண்கள் சிவந்து... இமைகள் சரந்து... முகம் வீங்கி இருப்பதைப் பார்த்து விட்டு அதை பொருட்படுத்தாமல் இருந்துவிட்டாள். பெரியவர்கள் சொல்வதெல்லாம் நன்மைக்குத்தான்... சின்னப் பெண்... இவளுக்கு என்ன தெரியும். எல்லாம் போகப் போகச் சரியாகிவிடும் என்ற கணிப்பு பாட்டிக்கு.

தாத்தாவும் மனம் பொறுக்காமல் அவளைத் தட்டிக் கொடுத்து "அழக்கூடாதும்மா... கல்யாணப் பொண்ணா லட்சணமா சிரித்த முகமாய் இரு பார்க்கலாம்..." என்றார்.

அதைக் கேட்டு விம்மினவள் "தாத்தா... இந்தக் கல்யாணம் எனக்குப் பிடிக்கவில்லை... பாட்டியிடம் சொல்லி நிறுத்துங்களேன்... எனக்கு உயிர் போகிற மாதிரி மூச்சு முட்டுகிறது தாத்தா..." என்றாள் தழுதழுத்த குரலில்.

"ஊகூம்... இதெல்லாம்... உன் நன்மைக்குத்தான்டா செல்லம்... பெரியவங்க... எங்களுக்கு எது நல்லது எது கெட்டதுன்னு தெரியாதா... நீ நல்லா இருக்கணும்னு தாம்மா நினைப்போம்... இப்போ அது உனக்குத் தெரியாது... போகப் போக... நிதானமா புரிஞ்சுப்பே... அப்போ வந்து சொல்வே பார்... நாங்க செஞ்சது சரின்னு... இந்தத் திருமணம் நல்லபடியா நடக்கணும்னு வேண்டிக்கோ... கண்டதையெல்லாம் எண்ணிக் குழப்பாமல் திடமா இரு..."

"கிருஷ்ணாவிடம்..." என்றவளை இடைமறித்தார் தாத்தா.

"இதோ பாரும்மா... கிருஷ்ணா ரொம்ப நல்லவன். உன்னை ஏமாற்றமாட்டான்... அவனுக்கும் உன்னை சந்தோஷமா வச்சுக்க ஆசைதான்... பாரேன்... இந்தத் திரு



மணம் மட்டும் முடியட்டும்... அப்புறம் நீயே எல்லாவற்றையும் மறந்து விட்டு... படு சந்தோஷமாயிடுவே... இந்தத் தாத்தா சொல்றது நிஜம்டா... அசடு... கண்ணைத் துடைத்துக் கொள்..."

இல்லையே... இன்னும் கண்ணீர் பொங்கிப் புனலாகி வழிகிறதே...

'தாத்தா... துரோகத்தில் மகாதுரோகம் நம்பிக்கை மோசம்தான்.... பாவம்... பிரதாப்பிற்கு நம்பிக்கைக் காட்டி விட்டு இப்படிக் கழண்டு கொள்வது எந்த விதத்தில் நியாயம்... இது அடுக்குமா!' 'வெடுக்'கென்று கேட்க வாயைத் திறந்தவள்... பாட்டியைப் பார்த்ததும் 'கப்'பென்று வாயை மூடிக் கொண்டாள்.

தாத்தாவும் எழுந்து போய்விட்டார்...

சே! பிறந்த குழந்தை கண்திறக்கு முன் மூச்சிழந்தது போல.... அவளது ஆத்திரம் பிறந்த வேகத்திலேயே மடிந்து விட்டது.

பதிலாய் இயலாமையில் வந்த நிராசைதான். எல்லா வழிகளும் மூடிக்கிடக்கையில் என்ன செய்ய முடியும்... ஒரு சின்ன இண்டு இடுக்காவது... 'பளிச்' சென்று ஒரு யோசனை... கிருஷ்ணாவிடமே சொல்லிப் பார்த்தால்... மனம் விட்டு பேசிப் பார்த்தால்... ஒரு வேளை இளகி... உதவலாம் இல்லையா... அந்த நப்பாசைக்கும் அல்ப ஆயுசுதான்.

கோவிலில் வைத்து எளிமையாய் திருமணம் நடத்திக் கொடுத்தால் போதும்... வரவேற்பை விமரிசையாய் செய்யலாம் என்று சொல்கிறானே... கல்யாணத்தில் உறுதியாய் இருப்பவனிடத்தே போய்... இந்தத் திருமணத்தில் எனக்கு விருப்பம் இல்ல்ல... நிறுத்தி விடு

என்று முகத்தில் அடித்தது போல சொல்லவும் தயக்கம்... சுமுகமாய் ஏற்றுக் கொண்டால் சரி... 'அவமானம்... ஏமாற்றம்....' என்று தாம் தூம்னு குதித்தால்... பெரும் ரகளையாகிவிடுமே...

என்ன செய்வது என்று புரியாமல் நெருப்பு வளையத்தில் சிக்கி விட்ட எறும்பு போலத் துடித்தாள்.

திருமண நாள் மெல்ல மெல்ல நெருங்கியது... இருப்புக் கொள்ளாமல் தவித்தாள் மதுரா... ஏதாவது அதிசயம் நடந்து இந்தத் திருமணம் நின்றுவிடக் கூடாதா என்ற ஏக்கம்.

கவலையில் இளைத்து துரும்பானாள் அவள். எந்தவித உற்சாகமும் இல்லாமல் கல்யாணப் பெண் ஓரமாய் ஒதுங்கியிருப்பதை யாரும் கண்டு கொண்ட மாதிரி இல்லை...

சௌம்யாவிற்கு போன் செய்து நிலைமையைச் சொல்லவும் வழியில்லை... கண் கொத்திப் பாம்பாய் இருந்த பாட்டியின் கண் பார்வையிலிருந்து தப்பி வெளியே போவது அசாதாரணமான செயல்தான்...

திருமண நாளும் வந்தது...

''பாட்டி... சீக்கிரம்... எல்லோரும் கிளம்பியாச்சு... நீங்கதான் பாக்கி...'' கிருஷ்ணா துரிதப்படுத்தினான். 'வயத்தில் ஏதோ செய்யறதுப்பா... இரு... வர்ரேன்... இந்தக் கல்யாணம் நல்லபடியா நடக்கணும்ங்கற கவலைதான்... வேற என்ன... ஒண்ணு செய்... நானும் தாத்தாவும் ஆட்டோவில் வந்து விடுகிறோம்... நீங்கெல்லாம் புறப்பட்டுப் போங்கோ... முகூர்த்த நேரம் நெருங்குகிறது... போக்குவரத்து நெரிசலில் சிக்கிக் கொண்டா அவ்வளவுதான்... பதினொன்றரைக்குள் தாலிக் கட்டியாகணும்...'' என்று சொல்லி விட்டு நிற்காமல் பின்புறம் விரைந்தாள்.

சாவி கொடுத்த பொம்மையாய் இயங்கினாள் மதுரா... அதுவும் அத்தை விரட்டுவதால்...



இந்தக் கடைசி நிமிஷத்திலாவது ஏதாவது அற்புதம் நடந்து... இந்தத் திருமணம் நின்று விடாதா...

இதயத்தைக் கையில் பிடித்துக் கொண்டு அமர்ந்திருந்தாள்...

வாகனத்தில் அனைவரும் கலகல வென்று பேசிக் கொண்டிருந்தது அவளை இம்சித்தது.

எருதின் வேதனை காக்கைக்கு தெரியாதாமே... இனி பிரதாப்பை சந்திக்க முடியாதோ என்ற அவநம்பிக்கையில் அவளுள் நடுக்கம் பரவியது. இனி பிரதாப் யாரோ... அவள் யாரோ... அவன் அந்நிய புருஷன்... கிருஷ்ணாவின் தாலியை ஏற்றுக் கொண்ட பின்பு அவனது நினைப்புக் கூடாது.... மனதிலிருந்து வழித்து எறிந்து விட வேண்டும்... அதுதான் தர்மம்... பண்பும்தான்... இருந்தும்.... நினைக்கவே தாளமுடியவில்லையே... எப்படி வாழ்ந்து காட்டுவது... உள்ளம் அழுதது.

கோவில் மண்டபத்தில் எல்லாம் தயார் நிலையில் இருந்தன...

இவர்களைப் பார்த்ததும் அய்யர் பரபரப்புடன் மந்திரம் சொல்ல ஆரம்பித்தார்.

மதுரா பின்னிய கால்களைப் பிரித்தெடுத்து... தளர் நடையுடன் மனையில் அமர்ந்தாள்... தன் கண்ணீரை யாரும் பார்த்து விடக் கூடாதே என்று தலை குனிந்து கொண்டாள்.

பாட்டி... தாத்தா வந்து விடட்டும் என்று அனைவரும் காத்திருந்தனர்.

வந்தது தாத்தா மட்டுமே... இரண்டு முறை ஏற்பட்ட வயிற்றுப் போக்கில் வயிற்று வலி வந்து விட.... சுருண்டு படுத்து விட்டாளாம் பாட்டி.



தன்னால் முகூர்த்தம் தவறிவிடக் கூடாது என்று தாத்தாவை அனுப்பி வைத்திருக்கிறாள் பாட்டி.

இனி ஏதும் பிரயோசனமில்லை என்ற விரக்தியில் பாறையாய் இறுகிப் போய் அமர்ந்திருந்தாள் மதுரா.

மூன்று மாதங்களுக்கு முன் இதே திருமணம் நடந்திருந்தால்... கிருஷ்ணாவை மனதார ஏற்றுக் கொண்டிருக்க முடியும்...

இப்போது...

இதயத்தில் ஒருவனையும்... தாலி பந்தத்தால் இன்னொருவனையும் ஏற்றுக் கொள்வது போல கொடுமை வேறு ஏதும் இல்லை.

கண்கள் முத்துக்களைக் கோர்த்தன... தலையை இன்னும் குனிந்து கொண்டாள்.

''மாப்பிள்ளையை சீக்கிரம் வரச் சொல்லுங்கோ...'' அய்யரின் கூவல்... தொடர்ந்து அமுத்தமாய் அருகே வந்து மாப்பிள்ளையும் அமர்ந்து கொண்டதும்...

எல்லாமே முடிந்து விட்டது என்ற வேதனையில் நம்பிக்கைத் துளிர் கருகிப் போனது.

எழுந்து ஓடி விட வேண்டும் என்று தோன்றிய அதே நேரம்...

''கெட்டிமேளம்!... கெட்டி மேளம்!'' என்று யாரோ கத்த...

கெட்டி மேளம் முழங்கியது.

அவள் கழுத்தில் மஞ்சள் நாணும் ஏறியது.... அந்தக் கயிற்றால் தன் தலைவிதி மாறிவிட்டது என்று குமைந்தாள் மதுரா.



# 17

இனியும் பொறுக்க முடியாது என்று கண்ணீர் முத்துக்கள் சிதறின...

முதல் முறையாய் பெற்ற தாய் இல்லையே என்ற வேதனையில் தவித்தாள்...

ஒரு பெண்ணிற்கு தாலி கட்டும் வேளையில் அழுகை வரும்... அது இயற்கை...

பிறந்த வீட்டைப் பிரியும் தவிப்பில் வரும் அழுகை... மதுராவோ... தன் தாய் உயிரோடு இருந்திருந்தால் இந்த அவல நிலை வந்திருக்காதோ... என் மனதைப் புரிந்து கொண்டு என் சந்தோஷத்திற்கு வழி செய்திருப்பாள்... என்ன இருந்தாலும் பாட்டிதானே... அவருக்கு என் சந்தோஷத்தை விட.... கௌரவம் தான் முக்கியம்... வரட்டு கர்வம்...

''அம்மா நீ இருந்திருந்தால்...'' தன் கழுத்தில் ஆடிய மங்கல நாணை வெறித்துப் பார்த்தாள்.

''ஏன் அழுகிறாள் நம்ம மதுரா... சந்தோஷப்படாமல்...'' அத்தை பவானி வியப்புடன் கேட்க...

''எங்க மதுராவிற்கு சந்தோஷம் தாளவில்லை... இது ஆனந்தக் கண்ணீராக்கும்.''

இது... இது சௌமியின் குரல் அல்லவா... அவள் எப்படி... இங்கே...

'வெடுக்' என்று நிமிர்ந்து பார்த்தாள் மதுரா.

சௌம்யாவேதான்.... மதுரா பார்த்ததும் பூவாய் சிரித்தாள்... அவள் மட்டுமல்ல... அவளது அத்தை... தந்தை...

அரவிந்த் அனைவரும் வந்திருந்தனர்... என்ன பெருந்தன்மை...! அழைக்காவிட்டாலும் பெரிய மனதுடன் வந்திருக்கிறார்களே.

ஏமாற்றமோ... வருத்தமோ சிறிதும் இல்லாமல்... அவளது கண்கள் யாருக்காகவோ அலைந்தன... அவனைக் காணோம்... எப்படி வருவான். தன் காதலி இன்னொருவனுக்கு மனைவியாவதை அவனால் எப்படி சகிக்க முடியும்... அது மட்டுமா... உறுதியுடன் இருப்பேன்... என்று வாக்குத் தந்து விட்டு இப்படி இன்னொருவனுக்கு மனைவியாகி விட்டதை அவனால் பொறுக்க முடியுமா...

'வாக்கு தவறிவிட்டேன்' என்று நினைத்து என் மீது வெறுப்பு கொண்டிருப்பான்... அதுதான் வரவில்லை... பாவம்... இவர்கள் எல்லோரும் பிரதாப்பின் வேதனையை அறியாமல்... இல்லை அறிந்தும் அதைக் காட்டிக் கொள்ளாமல் சிரித்த முகத்துடன் இருக்கிறார்கள்... எனக்காக...'

நெஞ்சினுள் தீப் பந்தமாய் தகிப்பு...

அவர்களைப் பார்க்கவும் திராணியின்றி கண்களைத் திருப்பினவள்... எல்லோருக்கும் சந்தனத்தை அளித்துக் கொண்டிருந்தவனைப் பார்த்து விட்டு அதிர்ச்சியானாள்.

கிருஷ்ணாவா!

அப்படியென்றால் என் கழுத்தில் தாலிக் கட்டியது... திரும்பிப் பார்த்தாள்.

இதயம் துடிப்பை நிறுத்தி விட்டு பின் இயங்கியது பிரதாப்! மாப்பிள்ளை கோலத்தில் கம்பீரமாய்... அவளது திகைப்பைப் பார்த்து விட்டுக் கண் சிமிட்டினான் அவன்.

வியப்பில் கண்கள் தாமரையாய் விரிந்தன... திகைப்பில் இதழ்கள் மொட்டவிழ்ந்த பூவாய் மலர்ந்தன... தன் கணவனை பிரமிப்புடன் பார்த்துக் கொண்டிருந்தாள்.



அவளருகே குனிந்து... ''அப்படிப் பார்க்காதே கண்ணம்மா... அப்புறம் எல்லோரும் இருக்கிறார்களே என்றும் பார்க்காமல்... உன்னை...'' என்று அவன் கிசுகிசுக்க...

அவள் முகம் சிவந்து போய் தலை குனிந்து கொண்டாள். அனைவரும் சிரிக்க... அவளுக்கு வெட்கம் பிடுங்கியது. சௌம்யா ஓடி வந்து அருகில் நின்றாள்.

''ஹே... அண்ணி... என்ன... அண்ணனைப் பார்த்தும் மயக்கம் தீரலையாக்கும்... இப்படிச் சிலையாக அமர்ந்திருந்தா எப்படி... எழுந்திரு... இன்னும் நிறைய 'எக்ஸர்ஸைஸ்' இருக்கு... பின்னே... மணப் பெண்ணுணா சும்மாவா... வா... வா...'' சௌம்யாவின் பரிகாசத்தில் குளிர்ந்து போனாள்.

''அண்ணி...'' கொதித்த மனமும்... தகித்த தேகமும் அந்த அழைப்பில் ஐஸ்கிரீமாய் குழைந்து போனது. சர்க்கரைப் பாகில் முக்கி எழுந்தது போல உடம்பெல்லாம் இனிமையான உணர்வு அலையாக படர்ந்தது எல்லாமே நிஜமா... இல்லை என் கற்பனையா என்று கூடத் தோன்றியது.

உண்மைதான் என்பது போல அவளது கையைப் பற்றினான் பிரதாப்... அவனது வலிய பிடிக்குள் பூவாய் பொதிந்தது அவளது மென்கரம்.

இருவரின் தேகங்களும் சிலிர்த்தன...

இனி சாத்தியமில்லை என்று நம்பிக்கை இழந்தவளுக்கு... எப்படி நடந்தது என்ற வியப்பும்... இதற்கெல்லாம் யார் சூத்ரதாரி...

அதுவும் பாட்டியறியாமல்...

அப்போதுதான் அவளுக்கு உறைத்தது...

அய்யோ... இது பாட்டிக்குத் தெரிந்தால்... என்ன நடக்குமோ தெரியாதே...



மருட்சியுடன் அவள் இருப்பதைப் பார்த்த பிரதாப் அவளது கரத்தை அழுத்தினான்...

'நான் இருக்கிறேன் மது...' என்பது போல... பிறகு கிருஷ்ணாவிடம் இருந்து தான் விளக்கம் பெற்றாள்.

தாத்தா... சீனுமாமா வந்ததுமே அவரிடம் மதுராவின் காதல் விஷயத்தை சொல்லிவிட்டார்... மாமாவும் நிலைமையைப் புரிந்து கொண்டு... தன் தாயின் பிடிவாதத்தினால் மூவரின் வாழ்க்கை பாழாகக் கூடாது என்று எண்ணி செயல்பட்டார். தன் வாயால் இந்தக் கல்யாணம் வேண்டாம் என்றால் கிழவி பட்டினி கிடந்து காரியத்தை சாதித்து கொள்வாள் என்று நினைத்து... தாயின் போக்கிலே சென்றுதான் சாதிக்கணும் என்று முடிவு செய்து கொண்டார். அதற்கு வசதியாக கோவிலில் திருமணம் என்று ஏற்பாடு... பாட்டிக்கு காபியில் பேதி மாத்திரை... தாத்தாவும் கிருஷ்ணாவும் பக்காவாக செய்து முடித்தனர்... துளியும் பாட்டிக்கு சந்தேகம் வராமல்... முன் கூட்டியே பிரதாப்பிற்கு விவரத்தை சொல்லித் தயாராகும் படியும் சொல்லி... ஒரு வழியாய் இந்தத் திருமணத்தை நடத்தியாகிவிட்டது...

கேட்டதும் மதுராவின் கண்களில் நீர் தளும்பல்... நன்றியுடன் கிருஷ்ணாவைப் பார்த்தாள்....

''ஏய்... ஏன் அழுகிறாய்... அடடா... இந்தத் திருமணத்தில் உனக்கு இஷ்டமில்லை என்று தெரிந்திருந்தால் இத்தனைக் கஷ்டமே பட்டிருக்க வேண்டாமே.... பார்... இப்பப் பாட்டிக்கிட்டே செமத்தியா வாங்கிக் கட்டிக் கொள்ளப் போவது நான்தான்...'' என்று கேலி செய்ய... மதுரா சிரித்துவிட்டாள்...

''உங்களையெல்லாம் தப்பாக புரிந்து கொண்டேன் கிருஷ்ணா... என் மனநிலையை புரிந்து கொள்ளாமல்...



என் வேதனையை லட்சியம் செய்யாமல் திருமண ஏற்பாடுகளை செய்கிறீர்கள் என்று வருத்தப்பட்டேன். இதை என்கிட்டே முன்னமேயே சொல்லியிருக்கலாமே'' என்றாள் மனத்தாங்கலாய்...

''ஆகா... சொல்லியிருக்கலாம் தான்... அப்புறம் என்ன நடக்கும்... சந்தோஷத்தை மறைக்கத் தெரியாமல் 'ஊ... லலலா...' என்று நீபாட்டுக்கு குஷியா சுத்துவே... பாட்டிக்கு சந்தேகம் வந்து உஷாராகிவிடுவாள்... இதெல்லாம் தேவையா... தவிர.... சஸ்பென்ஸா நடத்திக் காட்டினால் தான் மஜா... இப்பக் கல்யாணப் பொண்ணுக்கு சந்தோஷம் தானே... எனி ஹௌ... என் மனப்பூர்வமான வாழ்த்துக்கள்... இந்தப் புதுமண ஜோடிக்கு...'' கிருஷ்ணா கைக் குலுக்கினான்.

தன் மாமா பிள்ளையின் பண்பையும்... பரந்த உள்ளத்தையும் கண்டு உள்ளம் பூரித்தாள் மதுரா. இப்படிப் பட்ட உறவுகள் தனக்கு அமைந்ததற்கு தெய்வத்திற்கு நன்றி சொன்னாள்.

பிரதாப்பும் மதுராவும் தாத்தாவின் காலில் விழுந்தனர்...

மனமார ஆசீர்வதித்துவிட்டு பேத்தியிடம் பரிகாசமாய் கேட்டார்...

''என்னடா... இப்போ இந்தத் தாத்தா மேலே கோபம் இல்லைதானே...''

விம்மலுடன் தாத்தாவின் தோளில் சாய்ந்து கொண்டாள் மதுரா... ''என்னை மன்னித்து விடுங்கள் தாத்தா... உங்களையும் தப்பாக நினைத்து விட்டேன்... எனக்கு எதிராக செய்கிறீர்களே என்று கோபம் வந்தது... ஆனால்... எனக்காகத்தான் அத்தனையும் என்று தெரிந்து கொண்டேன் இப்போ...'' என்றாள் அவள்.

அவளது கேசத்தை கோதியவாறு "அசடு... உன் தாத்தா வாழ்றதே உனக்காகத் தான்டா... உன் கண்ணில் நீர் வழியும்படி செய்வேனா... எனக்கு உன் சந்தோஷம் தான் முக்கியம்... ஒரு நல்ல குடும்பத்துக்கு உன்னை மருமகளாய் அனுப்பி வைக்கிறதில் எனக்கும் பெருமை... மகிழ்ச்சிடா செல்லம்.." என்றார் வாத்சல்யத்துடன்...

"நீங்களும் என்னென்னவோ சொல்லி பயமுறுத்திட்டீங்களே... தாத்தா... எல்லாம் தெரிந்தும் தெரியாத மாதிரி இருந்தீர்களே... ஒரு கோடிக் காட்டியிருக்கலாம் இல்லையா..."

"மண்டு... மண்டு... உன்கிட்டே பூடகமாகப் பேசினேன். அதைப் புரிந்து கொள்ளாமல் எதையோ நினைத்து கலங்கினே... கிருஷ்ணா ரொம்ப நல்லவன்... உன்னை சந்தோஷமா வச்சுக்க அவனுக்கும் ஆசைதான் என்றேனே... திருமணம் முடியட்டும்... அப்புறம் நீயே எல்லாவற்றையும் மறந்து விட்டுப் படு சந்தோஷமாயிடுவேண்ணும் சொன்னேன்... உன் குழம்பிய மனசில் எதுவும் ஏறவில்லை... நான் என்ன செய்ய..."

"தாத்தா... பாட்டிக்கு... இது...!"

"அவ கவலையை விடும்மா... நான் சமாளித்துக் கொள்கிறேன். இனியும் அவள் திருந்தவில்லை என்றால்... அவள் எதுக்கும் லாயக்கில்லைன்னுதான் அர்த்தம்... இன்னும் பழம் பஞ்சாங்கமாகவே இருந்தா யாரும் மதிக்கமாட்டார்கள்... காலத்துக்கு ஏத்தபடி கொஞ்சம் மாறணும்... இந்தப் பாடத்தை அவ இப்பவாவது கத்துக்கிறாளான்னு பார்ப்போம்... சரி... இப்படியே பேசிக் கொண்டிருக்காதேம்மா... போய் உன் மாமனார் கால்களில் விழுந்து ஆசீர்வாதம் வாங்கு... அப்படியே அத்தைகிட்டேயும் தான்.... இனி அவர்கள்தான் உனக்கு எல்லாமே...



இந்தத் தாத்தா வளர்ப்புப் பத்தி மெச்சும்படி நடந்துக்கோ... என்ன..." சொல்லும் போதே அந்தப் பெரியவரின் கண்கள் கலங்கின... குரல் தழுதழுத்தன... வளர்த்த பாசம் ஆயிற்றே...

மணமக்கள் பெரியவர்களின் கால்களில் விழுந்து வணங்கினர்.

அறையில் பிரதாப் மதுராவை எதிர் நோக்கி தவம் கிடந்தான்...

தன் காதல் ஈடேறிய சந்தோஷம்... மனதிற்கு இனியவளே மனைவியான ஆனந்தம்... இனி வாழ்வு முழுக்க அவளுடன் என்ற களிப்பு... எல்லாம் அவனுள் பொங்கி புனலாகியது.

கண்கள் வாசல் புறம் பதிந்திருக்க.... ஏதோ ஒரு பரபரப்பு உடம்பில் பாதரசமாய் ஓட... தனிமையில் இனிமை காணும் பரவசத்தோடு காத்திருந்தான்...

அங்கே சௌம்யா தன் கைவண்ணத்தைக் காட்டிக் கொண்டிருந்தாள்.... தேவகன்னிகையோ என்று பிரமிக்கும்படி இருந்தாள் மதுரா...

அறை வாசலருகே நின்று "இதோ பார் அண்ணி... இன்று முதல் இரவு... நினைவிருக்கட்டும்... பழைய பயம் இல்லைதானே... என் அண்ணனைப் பார்த்ததும் அரண்டு ஓடி விடமாட்டாய் தானே..." என்று கேலியாய் சௌம்யா கேட்டதும்...

வெட்கத்துடன் சிரித்த மதுரா அறையினுள் நுழைந்தவுடன் கதவைத் தாழிட்டாள்.

"அட... இத்தனை முன்னேற்றமா... பரவாயில்லையே..." என்று வியந்தவாறு கீழிறங்கி சென்றாள் சௌம்யா.

அழகுப் பெட்டகமாய் தன் முன் நின்ற மனைவியைப் பார்த்து தேனுண்ட வண்டாய் கிறங்கிப் போனான்



பிரதாப்... என் தேவதை எனக்கு கிடைத்து விட்டாள்... இந்த அழகெல்லாம் எனக்கே சொந்தம்... என் கண்மணி எனக்குரியவள்... நெஞ்சு வெடித்து விடும் போல சந்தோஷம்... அது பெருமூச்சாய் வந்தது.

வெண்பட்டில் மெரூன் வர்ணத்தில் சரிகைக் கரை வைத்த பட்டுப் புடவையணிந்து... தலை நிறை மல்லிகை சூடி... கழுத்தில் தங்க நகைகளின் அழகை மிஞ்சும் மஞ்சள் கயிறு மினுமினுக்க... இதயத்தில் நிறைந்து வழியும் ஆனந்தத்தின் கசிவு கண்களில் ஜொலிக்க... புதுமணப் பொலிவு மேனியில் தெரிய... பொற்சிலை போல நின்றவளை கண் இமைக்காது பார்த்தான். அவனது பார்வையின் தீர்க்கம் என்னவோ செய்ய... கண்களைத் தாழ்த்திக் கொண்டாள்.

அவளது கரத்தைப் பற்றி அருகே அவளை அமர்த்திக் கொண்டான் அவன்.

அந்த அறையினுள் மனம் கமழும் மட்டிப்பால் ஊதுவத்தியின் வாசமும்... மல்லிகையின் மணமும்...

மஞ்சத்தில் சிதறிக்கிடந்த ரோஜா இதழ்களின் சுகந்தமும் கலந்து கிளர்ச்சியை ஊட்டின...

அவளது நெஞ்சில் புறாவின் படபடப்பு...

அவனது இதயத்தில் குதிரையின் ஓட்டம்...

"மது... என் மது டார்லிங்" அவளது மென்விரல்களை மென்மையாய் வருடியவாறு முணுமுணுத்தான்.

"எனக்கு... இந்த ரம்யமான சூழ்நிலையில் ஒரு ஆசை.... சொல்லட்டுமா..."

"ம்ம்..."

"அன்றைக்கு பாடினாய் பார்... மாலைப் பொழுதினிலே... அந்தப் பாட்டை இப்போது நீ பாடி நான் கேட்க வேண்டும்... பாடேன்..."



"அய்யோ... இந்த ராத்திரி வேளையிலா..."

"பாட்டுக்கு நேரம் காலம் ஏது.... டியர்... அன்றைக்கு எல்லோருக்கும் பாடிக் காட்டினாய்... இப்போது எனக்கு மட்டுமே... ப்ளீஸ்..."

மெல்லிய குரலில் அவள் பாட... அவன் மெய் மறந்து ரசித்தான்.

"வேலொன்று கையிலேந்தி என்னையே...

விழுங்குவான் போல் விழித்தான்..."

நிமிர்ந்த போது... அவன் தன்னை விழுங்குவது போலப் பார்ப்பதைக் கண்டு முகம் சிவந்தாள்...

வெட்கத்தில் பாட்டு தடைபட...

"ம்ம்... பாடும்மா..." என்று ஊக்கினான் அவன்.

'முந்தை பிறவிகளில் உன்னை நான் முறையினில் மணந்தேன்..."

அவளது கரத்தைப் பற்றியிருந்தவனது கை இறுக... அவள் ஏறிட்டுப் பார்த்தாள்.

அவனது முகத்தில் தெரிந்த உணர்வுதான் என்ன... இதைத்தான் தாபம் என்கிறார்களா... ஜென்ம ஜென்மங்களுக்குப் பிறகு... தன் உயிருக்குயிரானவளை கண்டு விட்ட தாபமா...

அவளால் பாட இயலவில்லை... அவளுள் சின்னதாய் நடுக்கம்... உயிர் அணுக்களில் அதிர்வு...

இப்போது அவனது வாய் பாடலை முணுமுணுத்தது. "முந்தைப் பிறவிகளில் உன்னை நான் முறையினில் மணந்தேன்..." என்றவாறு அவளை தன் மார்புடன் இறுக அணைத்துக் கொண்டான்....

அவனது இதயத்தின் தாளம் அவளுக்கு நன்றாக கேட்டது... மது... மது... என்பது போலத் துடிப்பு...!

திகைப்புடன் அவனைப் பார்த்தாள் மதுரா... குறும்புச் சிரிப்புடன் அவளைப் பார்த்து...

"வேண்டாம்..." என்றான் கரகரத்த குரலில்

மேலும் திகைத்து "என்ன வேண்டாம்..." என்றாள்.

"அப்படிப் பார்க்க வேண்டாம்...."

"எப்படி..."

"முதன் முறை என் கார் முன் விழுந்த போது பார்த்தாயே அப்படி... இப்படிக் கண்களை மலர்த்தி... முகம் சிவக்க இந்தச் செப்பு இதழ்களை குமிழாய் விரித்து..... ஊகூம் இனித்தாங்க முடியாது..." என்று அவளது முகத்தை கரங்களில் ஏந்தினான்...

முதல் முத்தம்... முதல் முத்திரையாய் பதிய...

நேரம் ஸ்தம்பித்து விட்டது போல தெரிந்தது... ஒரு துளி நேரம் ஒரு யுகமாய் மாறியது.

அவன் நிமிர்ந்து பார்த்தான்....

அவளது முகத்தில் செவ்வானத்தின் சிவப்பு... அவளது விழிகள் இன்னும் விரிந்து... இதழ்கள் இன்னும் மலர்ந்து... அவனை ஈர்க்க...

அவன் அவளது காதருகே... அவளுக்கே கேட்கும்படி மென்மையாய் முணுமுணுத்தான்.

"எந்தன் உயிரல்லவோ கண்மணி...

ஏன் இந்த ஜாலமெல்லாம்..."

அவளது கண்மணி தன் நாணத்தை மறந்து அவன் மீது பூங்கொடியாய் இழைந்தாள்.

அங்கே பாட்டு நின்று போய்... இதயத்தின் தாளம் மட்டுமே கேட்டது...

24 DEC 2008
6 JAN 2009
16 JAN 2009
2 FEB 2009
12 FEB 2009
6 FEB 2009
26 FEB 2009
9 APR 2009
4 MAY 2009
6 MAY 2009
19 JUL
25 AUG
7 SEP
19 SEP 2009
7 NOV 2009
19 NOV 2009
6 DEC 2009
8 DEC 2009
7 JAN 2010
28 JAN 2010